BILINGUAL FORTNIGHTLY

ஒரு பேப்பர்

ORU PAPER

Paper - 03 Issue - 48 03 Friday June 2006 விற்பனைக்கல்ல

புதிய விதிகளுக்கமைய TLMS

PERSONAL LICENCE - OFF LICENCE
PREMISES LICENCE - TO THE SHOP

We also do full package to get your Premises Licence Please make your appointment in advance to get the best out from the meeting Book your Appointment now - **Next course 12.06.06**

Tel: 020 8665 6340 / 020 8684 8509 or Mob: 07956 272 232
info@tlmsuk.com

குட்டிப் பெண்ணுக்குள் இத்தனை கோபமா? தட்டிக் கேட்கப் புறப்பட்டாளோ இத்தமிழ் மகள்!

OFF LICENCE & ON LICENCE

New Personal Licence Holder (NCPLH) & Premises Supervisor (DPS) course
உங்களுக்குரிய Personal Licence எடுக்கவேண்டிய சகல உதவிகள்.
புதிதாக கடை எடுப்பவருக்கு வேண்டிய Licence, வேறும் வழ முறைகள்.
செய்து தரப்படும்.
Running & Established Shops for sale/to buy anywhere in the UK
Food Hygiene, Health & Security
Premium licence for Chicken shop Florist, Petrol stations

No win No fee

LTTA LTD
Licence Trade Training Academy

தொடர்புகளுக்கு Mr. Ravi
Head office, System House,
19, Pershore Road south,
Birmingham B30 3EE
Tel: 07782 223 005

ABBEY TRAINING.NET

'இப்ப ஒரு Off license கடை எடுப்பம் என்றால் ஒரே கரைச்சல்தானே Personal License வேணுமாம்' பட்டடையில் நிற்பவருக்கும் அது வேணுமாம்!

Personal Licence
(For off licence and on licence)
National Certificate
for Personal licence Holders
(NCPLH)
New Supervisor Course (DPS)

Phone: 020 8640 9900
Thevanesan: 07956913164

EPoS SOLUTIONS FOR TODAY'S RETAILERS IPOS Solutions

The ultimate costs effective and complete 'EPoS and News Delivery System'

Special Offer Starts from £1999

- Barcode Scanning
- Pre-Loaded 20000 Stock
- Stock Control
- Handles all Promotions
- Paper & Magazine Control
- Home News Delivery
- Prints Shelf Edge Labels
- Invoice Control
- Reports
- Costcutter & NISA Link (OCS)

Tel: 0845 838 0856

SIVA BUSINESS TRAINING

எங்களிடம் வாருங்கள் வென்று தருகின்றோம்

Citzenship Course (Life in UK வகுப்புகள்)
Personal Licence
(For Off Licence and On Licence)
National Certificate
for Personal Licence Holders (NCPLH)
New Supervisor Course (DPS)

- Foundation Certificate in Food Hygiene
- Intermediate Certificate in Food Safety
- Intermediate Certificate in Supervising Health and Safety

Siva 020 8683 6544, 079 0480 6371
Challenge House 616, Mitcham Road, Croydon CR0 3AA

MortgageLink The National Mortgage Network

100% MORTGAGE அல்லது குறைந்த DEPOSIT 5%ல் வீடு வாங்க வேண்டுமா?

பல ஆண்டுகளாக Chicken கடைகளில் வேலை செய்து அனுபவம் உள்ளவர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், சொந்தமாக Chicken கடை ஆரம்பிக்க விரும்பினால் சில வாரங்களில் கடன் வசதி செய்து தருவோம் Leasehold / Freehold

கடைகளில் நிதிநெருக்கடி காரணமாக Bailiffகளால் பிரச்சினையா?
உங்கள் பொருட்களை காப்பாற்ற வேண்டுமா?
சட்ட ஆலோசனை வழங்கி உங்களை காப்பாற்றுவோம்.

Mobile: 07930 62 65 85
020 8946 5566

Nearest underground: Tooting Broadway - Northern Line

YOUR HOME AT RISK IF YOU DO NOT KEEP UP REPAYMENTS ON A MORTGAGE OR OTHER LOANS SECURED IN IT

SERIOUS ABOUT WEIGHT LOSS?

இயற்கையான பொருட்களுடன் நான் உங்களுக்கு உதவ முடியும்.
உடல் மெலிய, உடல் நலம் பெருக
என்னை உடனடியாக அணுகுங்கள்
அப்பர்னா

0118 977 2337

VISUAL RETAIL EPoS Solution...

Specialists in Retail & Restaurant EPOS Systems

EPOS Scanning
Shelf Edged Labels
Stock Control
Handles All Offers
News Round
Weekly Magazine List
Costcutter & NISA OCS Link
Table / Takeaway Management
Manage News Round / Backoffice from anywhere

Special Offer: Touch Screen Solution from £1800
*1 year free support

call: 0208 540 8886
www.visualretail.co.uk

ஓசியாய் வாசிக்க ஒரு பேப்பர்

Mortgages, Sales, Loans,
Letting Management, Insurance &
Building Insurance

100% வீட்டு வங்கிக்கடன்கள்
5நிமிடத்தில் ஏற்பாடு செய்யமுடியும்.

வருமான அத்தாட்சி அவசியமில்லை
முற்பணம் அவசியமில்லை
எற்கனவே உள்ள கடனுக்கு வட்டியை குறைக்க,
குறைந்த வட்டிக்குக் கடனை மாற்றமுடியும்.
முத்திரைத் தீர்வு அவசியமில்லை

Tel:020 8852 1683
www.angelsproperties.co.uk

உங்களின் நிதி சம்பந்தமான
அனைத்துப் பிரச்சினைகளுக்கும்
தகுந்த தீர்வு தரப்படும்

ANGELS
Properties and
Financial Services Limited

74 Lee High Road, Lewisham SE13 5PT. Email: info@angelsproperties.co.uk

POS TECH
POS TECH LTD
EPOS SOLUTION
020 8873 1710

RETAILS TILLS
RESTAURANTS KIT
NEWS ROUND

+ TOUCH SCREEN
+ STOCK CONTROL
+ PROMOTIONS & OFFERS
+ SHELF LABELS
+ SALES REPORTS
+ SPECIAL 'Z' REPORT
+ ACCOUNT CUSTOMERS
+ ACCESS FROM HOME
+ FREE 50,000 ITEM LIST
+ STAFF SECURITY
+ LINK WITH SAGE LINE 50

TOUCH SCREEN TILL £1600
IBM PC BASE TILL £900

NISA OCS LINK / C CARD LINK
PAY POINT / PAYZONE LINKS

உங்கள் வசதி தேவைக்கேற்ற
உதிரிபாகங்கள் தான் எம்மிடம் உண்டு

* FREE SUPPORT * FREE BARCODE PRINTER
* INTEREST FREE PAYMENTS OPTIONS
* FREE LASER PRINTER
* LIMITED OFFERS

Losing a loved one is a traumatic time

INDIAN FUNERAL DIRECTORS

இறுதிக்கிரியை மண்டபம்

Our comprehensive service includes:

Large Prayer room (Mandir) for performing the last funeral rites or for paying the last respects
All religious rites, ceremonies and wishes respected and administered
Modern, fully equipped washing & dressing facilities
Funeral Ceremony items provided.

Foremost Indian Funeral Directors in England Serving the Asian Community since 1984

For a fast, efficient & professional service, contact:
Bharat Shah, Sanjay Shah, Neeta Shah or Alka Shah on
Tel: 020 8952 5252
24 Hours Mobile: 077 030 66 44
Call us at anytime for a complete package price

எம் சாஸ்திர சம்பிரதாயங்களுடன்
இறுதிக் கிரியைகளை நடத்தி
துயருறும் மனங்களுக்கு ஆறுதல்
அளிப்பதே எமது நோக்கம்

44 South Parade, Mollision Way,
Edgware, Middlesex HA8 5QL

Bala's Fresh Fruits & Vegetables

32 -33 Western International Market, Southall, Middlesex UB2 5XE

* Fresh Fruit Vegetables
* Van Hire Local & Europe Tours
* House Removals
* Wastage Clearance
* 8 Seater Van & Car Rental
* 24 Hour Service

Please Contact: BALA
Tel: 020 8848 4144 / Mob: 07984 998 397
Fax: 020 8756 1089

வேன்... கார்... வாடகைக்கு...

உங்களுக்கு தேவையான பசுமையான மரக்கறி,
பழவகைகள் 24 மணி நேரத்தில் Delivery செய்யப்படும்.

இங்கிலாந்திலும் ஐரோப்பாவிலும் பொருட்களை
இடம் மாற்றம் செய்வதற்கும் ஐரோப்பிய சுற்றுலா
பயணங்களுக்கும் எம்மை நாடுங்கள்...

புதினத்தின் தமிழ் கலைகளின் சங்கமம்



Photos: A.S.Kugan

லண்டனிலிருந்து மாதமிருமுறை வெளிவரும் புதினம் பத்திரிகையின் பத்தாண்டு விழா கடந்த மாதம் 20ம் திகதி குரொய்டனிலுள்ள Arch Bishop Lanfranc School மண்டபத்தில் தமிழ் கலைகளின் சங்கமமாக வெகுசிறப்பாக நடைபெற்றது. நாடக ஆசான் தாசிசியஸ் அவர்கள் சிறப்பு விருந்தின ராக கலந்து கொண்டு சிறப்பித்த இவ்விழாவில் பெருந்தொகையானவர்கள் புதினம் பத்திரிகையை யும் அதன் ஆசிரியர் திரு. ராஜகோபால் பிரபல நடனஆசிரியை திருமதி ராகினி ராஜகோபால் தம்பதி களை பாராட்டியதுடன் அங்கு நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளையும் கண்டுகளித்தனர்.

அழைப்பிதழில் குறிப்பிட்டபடி நிகழ்ச்சிகள் மாலை 5.30 மணிக்கு ஆரம்பித்தன. முதலில் திருமதி. ராகினி ராஜகோபாலின் மாணவிகளின் நடன நிகழ்ச்சிகள் விழாவை அலங்கரித்தன. சைவஆச்சாரியர் கைலை நாகநாதசிவம் அவர்கள் ராஜகோபால் தம்பதி களை வாழ்த்தி ஆசிர்வதித்தார் அதனை தொடர்ந்து கலைஞர்கள், உள்ளூர் பிரமுகர்கள், ஊடகவிய லாளர்கள் உட்பட பலரும் வாழ்த்தி உரையாற்றிய துடன் திரு.இராஜகோபாலுக்கு பாராட்டுப் பத்திரங் களையும் விருதுகளையும் வழங்கி கௌரவித்தனர்.

புதினம் வெளியிடுகளான இளவாலை அமுதுவின் 'இந்த வேலிக்கு கதியால் போட்டவர்கள்', 'புதினம் சிறுகதைத் தொகுதி', 'புதினம் ஆண்டு மலர்' ஆகிய மூன்று நூல்கள் விழா மண்டபத்தில் வெளியிடப்பட்டதுடன் துசி-தனு நண்பர்களின் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது.

முப்பது ஆண்டுகளுக்கு மேலாக, யாழ் ஈழநாடு, லேக் கவுஸ் நிறுவனத்தின் தினகரன், தமிழன், ஈழகேசரி, புதினம் எனபலபத்திரிகைகளில்பணிபுரிந்த மூத்த பத்திரிகையாளர் திரு.இராஜகோபாலை யும், நூற்றுக்கணக்கான இளையவர்களுக்கு நாட்டி யக் கலையை பயிற்றுவித்து லண்டனில் நாட்டியத் துறையில் தனக்கென தனியிடத்தை பெற்றுள்ள திருமதி. இராகினி இராஜகோபாலையும் அவர்கள் பணிதொடர ஒரு பேப்பர் வாழ்த்தி நிற்கிறது.

உண்ணாவிரதப் போராட்டம்

தாயகத்தில் அப்பாவி தமிழ் மக்கள் கொல்லப்படுவதை நிறுத்த பிரித்தானிய அரசு ஆவன செய்யக் கோருதல். இலங்கை யின் வடக்கு கிழக்கு மக்கள் ஏற்றுக்கொள்ள கூடிய ஒரு கௌரவமான சமாதான தீர்வை வலி யுறுத்துதல், பிரித்தானிய அரசை இரண்டு தரப்புக்கு மிடையில் மத்தியஸ்தம் வகித்து பேச்சுக்களை ஆரம்பிக்க உதவுமாறு கோருதல், ஆகிய மூன்று கோரிக்கை களை முன்வைத்து 101 மணித்தியாலங்கள் தொடர்ச்சி யான உண்ணா விரத போராட்டத்தை ஹரோ உள்ளூ ராட்சி சபை உறுப்பினர் திரு தயா இடைக்காடார் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கவுள்ளார்.

மதியம் 12 மணிக்கு Big Ben மணி ஒலிக்கும் போது பிரித்தானிய பாராளுமன்றத்துக்கு முன்பாக வுள்ளபுற்தரையில்உண்ணாநோன்பைஆரம்பிக்கும் திரு.இடைக்காடர் திரவ பானங்களை மட்டும் தேவை யேற்படின் உட்கொள்வார் எனத்தெரிய வருகிறது. அவரது இந்த போராட்டத்துக்கு 3 மீற்றர் X 1 மீற்றர் அளவிலான பிரதேசததை பாவிப்பதற்கான அனுமதியை காவல் துறையினர் வழங்கியுள்ளனர்.

'இலங்கைத் தீவில் அப்பாவி மக்கள் கொலை செய்யப்படுவதை உலகம் பார்த்துக் கொண்டிருக்கு மானால் கொலைகள் தொடர்வதற்கு அதுவும் உடந்தையாக இருக்கிறது என்றே கருதவேண்டும்.' இவ்வாறு தனது உண்ணாவிரதம் தொடர்பான பத்திரிகை குறிப்பில் தெரிவித்திருக்கு திரு. இடைக்காடர் தனது போராட்டம் பிரித்தானிய அரசு மற்றும் ஈழத் தமிழர்கள் விடயத்தில் பாராமுகமாக இருக்கும் (பிரித்தானிய) தேசிய ஊடகங்களின் கவனத்தையீர்க்கும் என நம்பிக்கை தெரிவித்தார்.

யுனிசெப் அலுவலகத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டம்





Photos: Karuna.B

ஈழத்தில் சிறிலங்காப்படைகளால் குழந்தைகள் சிறுவர்கள் பெண்கள் உட்பட அப்பாவி பொதுமக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்செயல்களை கண்டித்து மத்திய லண்டன் Holborn பகுதியில் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர்களுக்கான நிதிய (யுனிசெப்) லண்டன் தலைமைக் காரியாலயத்தின் முன்பாக கடந்த செவ்வாயன்று கவனயீர்ப்பு போராட்டம் நடாத்தப்பட்டது.

தமிழ் இளையோர் அமைப்பு, தமிழ் பெண்கள் அமைப்பு மற்று பொது அமைப்புக்களால் பணிநாள் ஒன்றில் ஒழுங்கு செய்யப்பட்ட இந்த போராட்டத்தில் மூவாயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு தமது உணர்வை வெளிபடுத்தினர். யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி பத்மினி சிதம்பரநாதன், சதக் உள்ளுராட்சி சபை பிரதி மேயர் செல்வி. எலைசா மான், சர்வதேச தமிழ் செய்தியாளர் சங்க தலைவி திருமதி. ஆனந்தி சூரியப்பிரகாசம், உண்மைக்கும் நீதிக்குமான இயக்கத்தை சேர்ந்த செல்வி அங்கையற்கண்ணி செல்வராசா உட்பட பல நூற்றுக்கணக்கான பெண்கள் இப்போராட்டத்தில் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் தாயக நிலவரம் தொடர்பான மனுவொன்று பிரித்தானிய பிரதமருக்கும், யுனிசெப் அதிகாரிகளுக்கும் கையளிக்கப்பட்டது. சிறுவர்களை படைக்கு சேர்ப்பது விவகாரத்தில் அறிக்கைக்கு மேல் அறிக்கைகளை விடுகின்ற யுனிசெப் சிறிலங்கா படைகளால் சிறுவர்கள் மீது நடாத்தப்படுகிற தாக்குதல்கள் விடயத்தில் அதிகம் கவனம் செலுத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

திருத்தம்

கடந்த ஒரு பேப்பர் ல் கலைமன்றத்தின் ஆண்டு விழா என்ற தலைப்பில் வெளியான இந்நிகழ்வு பற்றிய தகவலில், கலைமன்றம் திரு. ராம் குமாரசாமி யால் ஆரம்பிக்கப்பட்டதாக பிரசுரிக்கப்பட்டிருந்தது. கலைமன்றம் திரு. W.M. குமாரசாமியால் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டது என்பதே சரியானது. தவறுக்கு வருந்துகிறோம்.

- நிகழ்வுகள் ஆசிரியர்

இலங்கைக்கான பணமாற்றுச் சேவை
நம்பிக்கை நாணயமிக்க மிகத் துரிதமான சேவை
குறிப்பிட்ட அதே நாளில் பணத்தை அங்கு பெற்றுக்கொள்ளவோ அன்றி அங்குள்ள உங்களது எந்த வங்கிக் கணக்கிலும் வைப்பு செய்ய கூடியதான வசதிகள்.

HSBC · COMMERCIAL BANK · HNB · PEOPLE'S BANK · SEYLAN BANK LIMITED · SampathBank · BOC BANK OF CEYLON

Head Office : 125 - 127 Bramley Road,
Oakwood, London N14 4UT

Transfer Hotline
020 8886 4488
www.cecfastcash.com

PAY AT
BARCLAYS
நீங்கள் எங்கிருந்தாலும் உங்கள் பணத்தை பாதுகாப்புடனும் விரைவுடனும் அனுப்ப அருகில் உள்ள BARCLAYS இல் பணத்தை வைப்புச் செய்த பின் எம்மை அழையுங்கள்

A/C NAME	:	C.E.C.LTD
A/C NO	:	70713945
SORT CODE	:	20-36-47
BRANCH	:	HANOVER SQ.

சமகாலம் இதழ் அறிமுகமும் பட்டறையும்

27.05.06 அன்று ஜேர்மனி Neuss நகரில் சமகாலம் மாத இதழ் அறிமுகமும் பெண்கள் குழந்தைகளுக்கான பயிற்சிப் பட்டறையும் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு லண்டனிலிருந்து வருகை தந்திருந்த சமகாலம் மாத இதழின் ஆசிரியர் திரு.பற்றிமாகரன், துணை யாசிரியரான திருமதி றீற்றா பற்றிமாகரன் அவர்களும் இணைந்து நடாத்திய இவ்விழாவுக்கு பெருமளவிலான தாய்மாரும் சிறுவர்களும் யுவதிகளும் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தனர்.

ஜேர்மனியில் பட்டறையென்று சொல்லப்பட்டு சிலரது துதிபாடல்களும் சுயவிளம்பரங்களும் மட்டுமே படிப்பிக்கப்பட்ட படிப்பினையிலிருந்து வித்தியசமானதொரு பட்டறையாக அமைந்த 'பெண்களும் குழந்தைகளும்' பட்டறையானது பார்வையாளர்களுக்குமிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது. சபையோரிடம் கருத்தாடி அவர்களது கருத்துக்களையும் மதித்து அதற்கான தேடலை தெளிவை விளக்கிய கருத்தரங்காக பட்டறையாசிரியர்களான பற்றிமாகரன், றீற்றா ஆகியோரின் நெறியாக்கமானது இனிவரும் காலங்களில் பட்டறை நடாத்த ஆசைகொண்டு இளைபவர்களை வதம் செய்யும் வல்லோர்களுக்கும் நடாத்தப்பட வேண்டிய ஒன்றென்பதை உணர்த்தியது.

பட்டறை முடிவில் தொகுப்புரையானது பார்வையாளர்களிடமிருந்து பெறப்பட்டு ஒவ்வொருவரின் கருத்துக்களுக்கும் மதிப்பும் விளக்கமும் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் இளையோர் சிறுவர்கள் தங்கள் கருத்துக்களை தமிழில் எழுதிக் கொடுத்தது எல்லோரினதும் பாராட்டுதலைப் பெற்றுக் கொண்டது. குறுகிய நேரத்தில் நிறைவுமிக்க கருத்துக்களும் ஆலோசனைகளும் வழங்கப் பட்டன.

இடைவேளைக்குப் முன்னர் 10 நிமிடங்கள் சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தைச் சேர்ந்த திரு.சுகன் அவர்கள் அண்மையில் லண்டனில் ஆரம்பிக்கப்பட்ட சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் தேவையும் சேவையும் பற்றி விளக்கினார். சர்வதேச மயப்படாத தமிழ் செய்திகள் பற்றிய தனது கருத்துக்களையும் தெரிவித்த அவர் சர்வதேச அரங்கில் தமிழ் ஊடகங்கள் ஊடகவியலாளர்கள் செயற்பட வேண்டிய வியடங்களையும் குறிப்பிட்டிருந்தார்.

இடைவேளையின் பின் சமகாலம் மாத இதழின் அறிமுகத்தினையும் தமிழில் சமூக விஞ்ஞான அறிவியலின் தேவையும் சேவையும் பற்றிய தெளிவான விளக்கத்தினை திருமதி சந்திரா கோகிலன் நிகழ்த்தினார். மேற்படி நிகழ்வானது அமைதியாகவும் ஆக்கபூர்வமானதுமான நடந்தேறியது.

- சாந்தி ரமேஷ் லவுனியன்

செய்தித் துணுக்குகள்

ஹோமியோபதி, அக்குபஞ்சர் சிகிச்சை முறைகளை போலியானவை என்று சில பிரித்தானிய முன்னோடி வைத்தியர்கள் சாடுகிறார்கள். நோபல் பரிசு பெற்ற சேர் ஜேம்ஸ் பிளாக்கும் அவர்களில் ஒருவர்.

• • •

செப்டெம்பர் மாத்திலிருந்து பாடசாலை மாணவர்கள் பொறுக்கியெடுக்கும் முறையில் போதைப் பொருள் சோதனைக்கு உள்ளாக்கப்பட உள்ளார்கள். பிள்ளைகள் போதைக்கு அடிமையாவதைத் தவிர்க்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

• • •

ஆபிரிக்க நாடுகள் சிலவற்றின் வறுமையை எப்படி விபரிப்பது? 7 பிள்ளைகள் பெற்ற அம்நாற்ற செறிவ் என்னும் 30 வயதுப் பெண் வைத்தியத்திற்கு பணமில்லாமல் தனது ஆறு பிள்ளைகளை நேரய்க்கு பறிகொடுத்துள்ளார்.

• • •

அமெரிக்கப் படைகளால் வெறித்தனமாகக் கொல்லப்பட்ட அப்பாவி மக்கள் கொலை சம்பந்தப்பட்ட அறிக்கையை தான் பகிரங்கமாக அறிவிக்கப்போவதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.

• • •

ஒரு மாதத்துக்கு முன் பாபடோசில் 11 உடல்களுடன் கரையெதுங்கிய வள்ளம் சம்பந்தமாக இன்னும் தங்களுக்கு எந்தத் தகவலும் கிடைக்கவில்லையென்று பாப்டோசின் அதிகார அறிக்கை கூறுகிறது.

• • •

சென்ற வாரம் கத்திகள் வைத்திருப்போர் அக்கத்திகளைப் பொலிசில் பாரம் கொடுப்பதன் மூலம் மன்னிப்பு பெறும் திட்டத்தில் இங்கிலாந்து, வேல்ஸ் பகுதியின் எல்லாப் பொலிஸ் பிரிவும் பங்குகொண்டது. ஸ்கொட்லாந்து தனக்கென்று ஒரு மன்னிப்பு முறையை ஏற்பாடு செய்திருந்தது.

• • •

சவுதி அரேபியாவிலும் சினிமா தயாரிக்கப் பட்டுள்ளது. இதை ஏன் ஆச்சரியத்துடன் கூறுகிறோம் என்றால் அங்கு பொது சினிமா மண்டபங்களும், தியேட்டர்களும் தடை செய்யப்பட்டுள்ளன. தயாரிப்பாளர்கள் சினிமாவை அங்கு கொண்டுவர தங்கள் நடவடிக்கை ஒரு ஆரம்ப கருவி என்கிறார்கள்.

• • •

இந்தியாவையே உலகிலேயே ஆகக் கூடுதலான எய்ட்ஸ் நோய் உள்ள மக்கள் வாழும் நாடாகக்கண்டுள்ளார்கள். அதேசமயம்பக்கத்து நாடான சீனா கடந்த 10 ஆண்டுகளில் தனது எயிட்ஸ் நோயாளர்களை மூன்றில் ஒன்றாகக் குறைத்துள்ளது. ஒரு எச்சரிக்கையும் விடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டின் விலை மகளிரில் அரைவாசிப்பேர் எயிட்ஸ் வைரசால் பாதிக்கப்பட்டவர்களாம்.

• • •

நடக்க இருக்கும் நிகழ்வுகள்

யூன் 2 வெள்ளி: மதியம் 12.00 மணி முதல் தொடர்ச்சியாக 101 மணித்தியாலங்கள் ஹரோ உள்ளூராட்சி உறுப்பினர் திரு தயா இடைக்காடர் முன்று கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நோன்பிருக்கிறார். இடம்: Westminster பிரித்தானிய பாராளு மன்றத்துக்கு முன்பாக.

யூன் 3 சனி: மாலை 7.30 மணிக்கு, உதவும் கரங்கள் பிரித்தானிய கிளை அதன் 3வது ஆண்டு நிறைவையொட்டி ஒன்றுகூடலும் விருந்துபசாரமும். இடம்: West Croydon St. Service Church Hall. அனுமதி: சிறுவர்கள் இலவசம், குடும்பம் £15 தனிநபர் £8 தொடர்புகளுக்கு: 020 8544 9009/07969 911 076

June 11 Sunday: International Tamil Foundation's 18th Anniversary and Lunch, and Memorial meeting for the late Mr.C.J.T. Thanothatam. Venue: Putney Leisure Centre, Drybugh Road, London SW15. For further details: C.Sithamparapillai 0208 550 0441 N.Sithamparapillai 0118942 9467

யூன் 17 சனி: மாலை 6மணிக்கு மிடில்செக்ஸ் தமிழ் கல்விக்கூடத்தின் வருடாந்தக் கலை விழா பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும். இடம்: Harrow High School, Gayton Road, Harrow.

யூன் 24 சனி: காலை 9 மணியிலிருந்து இரவு 8 மணி வரை 6 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான துடுபெடுத்தாட்டம், உதை பந்தாட்டம் மற்றும் வலைப்பந்து போட்டிகள். இடம் Northwick Park Sports Grounds, The Fairway, Wembley. தொடர்புகளுக்கு: பிற என்ற தமிழ்ச்சங்கம் 07956 386 706

யூலை 1 சனி: மாலை 6 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க பிரித்தானியக் கிளையினர் வழங்கும் வருடாந்த கலை நிகழ்ச்சி 'கலையரசி'. இடம்: Walthamstow Assembly hall. தொடர்புகளுக்கு: சண்: 07915 382 145 டாம்: 07956 206 752 கதிர்: 079984 389 916

யூலை 1 சனி: மாலை 6 மணிக்கு யோகா தில்லைநாதன் வழங்கும் காவடிக்குயில் பாடல் போட்டி நிகழ்ச்சி. இடம்: Logan Hall, University College of London, Russel Square, 20 Bedford Way, London WC1. தொடர்புகளுக்கு: திருமதி. யோகா தில்லைநாதன் 020 8390 5823, 07956 133 528

யூலை 22 சனி: காலை 9.30 மணியிலிருந்து மாலை 6 மணி வரை சிறுவர்களுக்கான தடகல மெய்வல்லுனர் போட்டி. இடம்: Tooting Bec Athletics Track, Tooting Bec Road, London SW17. தொடர்புகளுக்கு: வெண்புறா நிறுவனம் 020 8672 4100

அழகிய புன்னகைக்கும்
இனிய பேச்சுக்கும்
உணவினை உண்பதற்கும்
அவசியமான உங்கள் பற்களுக்கு
நோவு அற்றமுறையில் தகுந்த
சிகிச்சை அளிப்பது எனது
பல்டாக்டர் தொழிலின் ஆதாரமான
பணி என்பதை நான்
நன்கு அறிவேன்
- டாக்டர் டி.வீ. பழனிவேல்

பல் டாக்டர் டி. வீ. பழனிவேல் FDSRCS (England)

கிளிப் Orthodontics
Costmetic Dental
முரசு சிகிச்சை
பல்வலி நிற்பாட்டல்
உட்பட எல்லாவிதமான
சிகிச்சைகளும்

புதிய முகவரி - Eastham
290 High Street North
(Manor Park - Eastham)
London E12 6SA
Byron Avenue அண்மையில்
6Kumar இற்கு எதிர்பக்கம்

Tel: 0208 552 1626

புலம்பு

அணுகுமுறை

ஒரு நாட்டின், ஒரு இன மக்களின் பிரச்சினை எந்த வகைப்பட்டது எந்தத் தரத்தையுடையது எந்தச் சூழலில் நடக்கிறது என்பவற்றை ஆராய்ந்துதான் உண்மைச் சுத்தத் தோடு அணுகுபவர்கள் செயல்படு வார்கள். எம் சூழலில் எம் இனத் தின் பாதுகாவலர்களின் கைகளைக் கட்ட முயல்வது எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்தும். இதைச் செய்ய முற் படும் மேற்குலகு அறியாமையால் இப்படிச் செய்கின்றதா? நிச்சயம் இல்லை. அவர்களிடம் உள் சுத்தம் இல்லை உள் நோக்கம் உள்ளது.

— காசிநாதன்

என்னத்தை கண்டோம்?

உரிமைக்குரல், பேரணி, ஆர்ப் பாட்டம் எண்டு நாங்களும் வேலை மினக்கெட்டு கத்திக்கொண்டு திரிய அவங்களும் தங்கட பாட்டிலை அலுவல்களைச் செய்யிறாங்கள். போதாக்குறைக்கு மற்றவயளும் பிபிசிக்கு முன்னாலை நிக்கிறது அங்கை இங்கை எண்டு தொடங்கி ட்டினம். இதிலை என்னதை கண் டோம் எண்டு விளங்கேல்லை?

— பவன்

எங்கள் தாயகத்தில் எமக்கே கூடுதல் வலிமை

ஒருபக்கம் ஒரு அரசாங்கம், மறு பக்கம் ஒரு விடுதலை அமைப்பு. உலகம் · அரசின் பக்கம் ஆனால் நியாயம் அமைப்பின் பக்கம். அரசு க்கோ கூலிப்படைகள். அமைப்பு க்கோ உறுதி படைத்த போராளிகள். போர் வரப்போவது அமைப்பின் சொந்த இடத்தில். அதை வைத்தே 50 வீத வெற்றி நிச்சயிக்கப்பட்டு விட்டது என்று கூறலாம்..

— கருணா

மட்டக்களப்பான்

மட்டக்களப்பான் தத்துவமும் பேசுவார்போல் தெரிகிறதே. அவர் உள்ளத்தைத் தொடும் பிரச்சனை களைத் தொடும்போது எழுத்து நடை மாறுகிறதே. மாறட்டும். பிரபஞ்சமே மாறும்போது அவர் தமிழ் மாறுவதில் என்ன ஆச்சரியம் உண்டு.

— யாழினி

புரியாத ஜன்மங்கள்

இலங்கை மக்கள் எதையும் புரிந்து கொள்ளமாட்டார்கள் போல் தெரிகிற தே. நாடு பொருளாதாரத்தில் அதல பாதாளத்தை நோக்கி விரைகிறது. வீட்டிலிருந்து மக்குச் சிந்தனை பற்றிப் பேசுகிறார்கள். யதார்த்த த்தை எப்போ புரிந்து கொள்ளப் போகிறார்கள். நாடு சின்னாபின்னப் பட்டு பிரிந்த பின்பா?

— பாண்டிருப்பான்

அரசியல் வாரிசு குடும்பம்.

யார் இந்தக்கருணாநிதி? அவர் ஒரு அரசியல்வாதி. அரசியல் வேறு தன் குடும்பம் வேறு என்று வித்தியாசப் படுத்தாத தூய அரசியல்வாதி. தலையில் வைத்து சே சொல்லும் தலைவர் அல்ல. ஆனாலும் பாரதப் படை அப்பாவிகளைக் கொல்லும் பணியை முடித்து நாடு திரும்பும் போது அதை எடுத்துக் காட்டுமள விற்கு முதுகெலும்புடைய தலைவர்.

— கயல்விழி

மூன்றாவது ஆண்டு.

மூன்றாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கப் போகிறீர்கள் என்று கேள்விப்படுகிறோம். அதைக் கொண்டாடுமுகமாக என்ன செய்யப் போகிறீர்கள்? புதிதாக பத்திரிகை யில் என்ன மாற்றம் கொண்டு வரப்போகிறீர்கள்?

— புவனேசன்

தமிழரின் சங்கங்கள்.

லண்டனில் தமிழ் மக்களிடையே எத்தனையோ சங்கங்களும், மன்றங் களும் இருக்கின்றன. இவை என்ன செய்கின்றன? இவற்றால் என்ன பயன் என அறிந்து உங்கள் வாசகர் களுக்கு அறியப்படுத்தலாமே.

— சந்திரன்

பாட்டும் பரதமும்.

பாட்டுப்போட்டிவைக்கப்போகிறீர் களாமே? ஏன் நடனப்போட்டி, வாத்தி யப் போட்டி என்று அவற்றையும் சேர்த்துக் கொள்வதுதானே. அப் போதுதான் என்னைப் போன்றவர் களும் இதில் பங்குபெற முடியும்.

— அகிலன்.

அலசுவாரம் எழுதுவது யார்?

அலசுவாரம் பகுதி சிலநேரம் சுவாரசியமாக இருக்கிறது. சிலநேரம் படிக்க அலுப்பு தட்டுகிறது. அதை எழுதுவது உண்மையில் தென் தமிழீ ழத்து ஆளா? டீட்டக்களப்பு தமிழில் தொடங்கி தமிழ்நாட்டு சினிமா தமிழில் முடிவடைகிறது.

— ராகவன்

உள்ளூர் பூராயங்கள்

உங்கள் பத்திரிகையில் உள்ளூர் பூராயங்கள் மிக அரிதாகவே வருகிறது. மட்டை போட்டு பிடிபட்ட வையள், காங் மோதல்கள், கோயில் அடிதடியள் பற்றிய செய்திகள் ஏன் வருவதில்லை? நல்ல பிள்ளைக்கு நடிக்கிறீங்களோ அல்லது பயமோ.

— லதா

பெயர் மாற்றம்

இதழ்43 இல்பதஞ்சலிநவேந்திரன் ஒரு முக்கிய விடயத்தை தவறவிட்டு விட்டார் என்று நான் நினைக்கின்றே ன். முதலில் அவர் தன் மனைவியை ஒரு கணம் மறந்துவிட்டார் போலும். அவர் மனைவியின் பெயர் Mrs. Navendran ஆகையால் Navendran என்பது தான் Family Name. அதைத்தான் Surname என்றும் கூறுவது. அவரின் மகனின் Family Name, Kumaran. குமரனின் வருங்கால மனைவியின் பெயர் Mrs.Kumaran. ஆகையால் மகனின், அவர் மனைவியின் பெயர் Kumaran ஆகும். அவர்களின் Surname Kumaran (That is a separate family) எங்கள் முறை தமிழரின் பாரம்பரிய முறை Chain Like. இதுதான் முக்கியம். மேல்நாட்டவருக்கு இதுதான் எம்முறை என்று கூறி செயல்பட்டால் ஒரு கரைச்சலும் இல்லை. இதுக்கு துணிவில்லாத மனிதருக்குத்தான் இந்த பெயர் மாற்றத் தடுமாறல்.

— நடராஜா

டாவினும் டாவின்சியும்.

'டாவின்சி' 'டார்வின்' என்று போட்டு எல்லோரையும் குழப்பிக் கொண்டி ருக்கிறீர்கள்! இவர்கள் எல்லோரும் யார் என்று ஒரு கட்டுரை எழுதி எமது குழப்பத்தை தீர்த்து வையுங்கள்.

— சுபோதினி

Subscription

I had been a regular reader of your paper and I read your articles in the Teens Page with interest. Some of the articles are very controversial and thought provoking. It is specially interesting to the younger generation of Tamils living in this country. My complaint is that sometimes I am unable to get the paper because it is 'sold out' before I could go to the shop. So I am herewith sending you a cheque for £18 along with a subscription form. Please send my paper regularly from the next issue.

- *Janahan*

கனடாத் தமிழருக்கு ஜே!

கனடாவில் தமிழ் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து பெரிய ஊர்வலம் ஒன்றை நடத்தியிருக்கினம். எல்லா ரும் ஆச்சரியப்பட்டுப் போச்சின மாம். லண்டனில எங்கட இளசு கள் ஒருத்தனோட ஒருத்தன் சண்டை போடத்தான் முன்னுக்கு நிக்கிறாங் கள். பெட்டைகளை விட்டுக் கலைக் கவும் ஏதோ, 'ஷோ' காட்டவும்தான் இவயள் பழகியிருக்கினம். மானம் கெட்டு நிக்குதுகள். இதை யாரிட்ட சொல்லி அழ?

— மங்கையர்க்கரசி

றோயல் மெயிலில் வந்த கடிதம் ...

அன்பு நண்பன் பவாவிற்கு...

என்ன மச்சான் கனடா மக்கள் ஒரு கலக்கு கலக்கிவிட்டார்கள், எங்களுக்கு ஒரே ஆச்சரியம்.. எந்த ஒரு புலம்பெயர் நாடுகளிலும் நடக்காத அதிசயம்.. இங்குள்ள பத்திரிகை வானொலி மட்டுமல்ல உலகெங்கும் உள்ள ஊடக வியலாளர்களையும் வியக்கச் செய்துவிட்டது.. கனடா மக்களின் உரிமைக் குரல் நிகழ்ச்சி. 35000 மக்கள் ... ஒன்றுபட்டு எமது உரிமைக்காக குரல் கொடுத் ததைக் கண்டு, புலிகளை தடை செய்தவை.. தடைசெய்யத் தூண்டினவை எல்லாம் வாயடைத்து... மூச்சடைத்துப்போயிருப்பீனம்.. அநேகமாய் உங்கட பாராளுமன்றமே கொஞ்சநேரம் பதறியிருக்கும் என்று நினைக்கிறன்.

மச்சான் கனடா தமிழரை நினைக்க நினைக்க தேகமெல்லாம் புல்லரிக்கு தடாப்பா... சே... இந்த லண்டனுக்கு ஏன் வந்தன் எண்ட மாதிரிப் போயிட்டு தெடாப்பா? அதுவும் இளைய வயதினரின் எழுச்சியைப் பார்த்ததும் விசா இல்லாத எனக்கே வீரம் வந்திட்டுதாப்பா.. இந்த மக்கள் சக்தி இருக்கேக்க எங்களுக்கு எவன் தடை விதிச்சாலும் கவலை இல்லை மச்சான். இந்த 35000 மக்களும் பயங்கரவாதிகள் எண்டா உவையள் சொல்லப் போயினம்.. சொன்னாலும் பரவாயில்லை அடுத்த ஊர்வலத்தில் இத்தொகை இரண்டு மடங்காகும் என்பதை என்னால் உணர முடிகிறதடாப்பா?

இஞ்சையும் 30ம் திகதி உரிமைக்குரல் நிகழ்வொன்று வைச்சம் கணிசமான மக்கள் வந்தவை. கனபேர் ஏன் மற்ற நாடுகள் போல் திங்கள் கிழமை இங்கை வைச்சிருக்லாம் எண்டு அங்க வந்து கதைச்சுக் கொண்டிருந்தவை. உனது மனதிலும் இந்த கேள்வி எழுந்திருக்கும்..திங்கள் மச்சான் எங்க ளுக்கு இங்க வங்கி விடுமுறை அந்த தினத்தில் வைச்சால் நிறைத் தமிழர்கள் வந்திருப்பார்கள்.. ஆனால் அன்று பிரித்தானிய அரசாங்க உத்தியோக த்தர்கள்.. மற்றும் அரசதரப்பு பிரதிநிதிகள் .. இங்கிலாந்து மக்கள் என நிறையப் பேருக்குத் தெரியாமல் போயிருக்கும். அதுதான் சாதாரண ஒரு நாளில் இதை ஒழுங்கு செய்திருந்தார்கள்.

வேற என்னடாப்பா... இந்தக் கடிதங்கள் எழுதேக்க உந்த அரசியலுகளைப் பற்றி எழுதாமல் என்னைப் பற்றியும் உன்னைப் பற்றியும் எழுதுவம் என்றுதான் நினைச்சனான். ஆனால் இப்ப மச்சான் இதை எப்படியடாப்பா அரசியல் என்று மற்றவைமாதிரிச் சொல்லுறது. இதுவேவெங்கட்டை வாழ்வாகிப் போய்விட்டது. நாளும் பொழுதும் நாலு அஞ்சு தமிழர் எண்டு சுடுறாங்கள் எங்கட புத்திஜீவிகளையும்... மாணவர்களையும். வியாபாரிகளையும் ஏன் எமது இனத்தின் முதுகெலும்புகளை எதிரி முறித்துக் கொண்டிருக்கிறான். இவர்களில் யாராவது ஒருவர் எனது உறவினராகவோ உனது உறவின ராகவோ.. அல்லது நண்பரின் உறவினராகவோ இருக்கிறார்கள். இதைப் பார்த்துக் கொண்டு எப்படி மச்சான் சும்மா இருக்கிறது. எனக்கும் போய் பயிற்சி எடுக்க வேணும் போல கிடக்குதடாப்பா..

உந்த உலக அமைப்புகள் எல்லாம் போர்நிறுத்தம்... கண்டன அறிக்கை அது இது என்று விடுகீனம். ஆனாலும் மச்சான் தமிழரின்ரை முகத்தில குத்திப் போட்டு முதுகைத் தடவீனம். உவையள் இனி போர்நிறுத்தத்தைக் கண்காணிக்காமல் போரை மட்டும் கண்காணிச்சுக் கொண்டு கதை எழுதட்டும். உலகத் தமிழர்கள் எல்லாரும் ஒன்றாகிவிட்டால் உவையள் ஒண்டும் செய்ய ஏலாது. இனி ஒவ்வொரு மாதமும் உரிமைக்குரல் எழுப்பி உந்த உலகக் கும்பகர்னணை கூக்குரலிட்டே எழுப்புவம்.

மற்றது, நீ எனக்காக நாட்டுக்குப் போயிடாதை... உனக்காகவும் போயிடாதை உந்த ஒட்டுக் குழுக்கள் இப்ப கனடா மக்களைக் கண்டால் புண்ணிலை புளி பூசின மாதிரி இப்ப நிப்பாங்கள். உன்னைக் கண்டால் என்ன நடக்கும் என்று தெரியும்தானே மச்சான். எனக்கு கலியாணம் நடக்காட்டியும் பரவா யில்லை.. என்ர வாடகை வீட்டில உன்ர படம் தொங்குற நிலைமையை ஏற்படுத்திப் போடாதை. என்னால தாங்க முடியாது. விரைவில எமக்கு விடுதலை வரும். உந்த தாண்டிக்குளம், புளியங்குளம் என்று நாங்கள் லைனில நிண்டு போகாத நிலை வரும். நேர போய் எங்கட நிலத்தில் கால் வைக்கிற நிலை விரைவில் வரும். அது வரைக்கும் நாம் நிம்மதியாக இருக்க முடியாது நித்திரை கொள்ள முடியாது. எங்கள் இனத்தின் விடிவுக்காய் உழைப்போம். எம்மால் இயன்றதைச் செய்வோம்.

வேற என்ன மச்சான்.. ஏதோ உணர்ச்சி வசப்பட்டு எழுதியிட்டான் என்று மட்டும் நினைகாதை.. இது எனது உள்ளத்திலிருந்து எழுந்த வரிகள டாப்பா?

வேற என்ன அடுத்த மடலில் சந்திக்கிறேன்

நண்பன்
சிவா.

HERBA NATURELLE

London Norbury இல் மூலிகை மருத்துவர்

அஞ்சலா ஜெகநாதனின் இயற்கை மூலிகை மருத்துவ நிலையம்

- தலைமுடி உதிர்வு, சொடுகு, மயிர்ச்சிதைவு
- எக்ஸிமா, ஆத்மா, தோல் வியாதிகள்
- மகப்பேறின்மை ஆண், பெண் உடற்கோளாறுகள்
- மற்றும் எல்லா நோய்களுக்குமான சிகிச்சைகளும் மருந்துகளும்

Herbanaturelle Ltd உள்ளிட்ட உலகின் முன்னனி மூலிகை மருந்து நிறுவனங்களின் தயாரிப்புகளும் கிடைக்கும்

- விளையாட்டு உடலிற்கான உணவுகள்

ஆரோக்கிய வாழ்வு

மும்மாதமொரு இதழ்
ஆரோக்கிய வாழ்வுக்கு முக்கியமான விபரங்களை உள்ளடக்கியது. வாசித்து, அறிந்து பயன் பெறுவீர்.
WWW.herbanaturelle.comல் பெற்றுக் கொள்ளலாம்.

புதிய அறிமுகம்

சில நோய்களுக்கு வழமையான உணவுகள் காரணமா?
Allergy / Intolerance Test மூலம் ஒவ்வாமை / சகியாமைக்கு காரணமான உணவைக் கண்டறியலாம்.

Natural Health Centre 1410, London Road, Norbury SW16 4BZ
Tel: +44 (0) 20 8765 9015 | Email: sales@herbanaturelle.com | Web: www.herbanaturelle.com

ஒரு பேப்பர்
ORU PAPER
FRIDAY, JUNE 02, 2006, ISSUE 48

புலத்தில் தெரியும் எழுச்சி

இவ்வாரம் ஐரோப்பாவிலும், கனடா, அவுஸ்திரேலிய நாடுகளிலும் தமிழ் மக்கள் திரண்டு வந்து பல எழுச்சிப் பேரணிகளை நடாத்தினர். அதே சமயம் ஐரோப்பிய ஒன்றியம் விடுதலைப் புலிகளை தடை செய்வதாக திங்களன்று அறிவித்தது. பல மாதங்களாகவே எதிர்பார்த்த ஒரு விடயமாக இருந்தாலும் ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் 3 லட்சத்துக்கு அதிகமான ஈழத் தமிழர்களை பொறுத்தவரை இது வேதனை தரும் விடயமாகவுள்ளது. விடுதலைப் புலிகளை தனிமைப்படுத்துவதற்காக எடுக்கப்பட்ட இத்தீர்மானத்தால் இலங்கைத் தீவு முழுமையான யுத்தத்துக்கு தள்ளப்படுவது தவிர்க்க முடியாதது ஆகிவிட்டது.

பேச்சுவார்தை மூலமான தீர்வு, பலகட்சி ஜனநாயகம், மனிதவுரிமைகளை பாதுகாத்தல் போன்ற மேற்குலகின் சனாநாயக கோட்பாடுகளை போரினால் சின்னாபின்னப்படுத்தப்பட்டு இன்னமும் உயிராபத்தை எதிர்நோக்கியிருக்கும் மக்களினத்தால் முழுமையாக பின்பற்ற முடியாமல் போனதில் ஆச்சரியமில்லை. ஆனால் இவற்றுக்கு அமைவாக விடுதலைப் புலிகள் அமைப்பு செயற்படவில்லை எனக் காரணங் காட்டி அதனை தடைசெய்தமை எந்த வகையிலும் நியாயமற்றது. மனிதவுரிமைகளை எள்ளளவுக்கும் மதிக்காத, சுனாமி நிவாரணக் கட்டமைப்பு போன்று காலங் காலமாக தமிழ் மக்கள் பிரதிநிதிகளுடன் செய்யப்பட்ட ஒப்பந்தங்களை என்றைக்குமே நடைமுறைப்படுத்தாத சிறிலங்கா அரசுடன் மேற்குலகத்தில் நடைமுறையில் உள்ள சனநாயக வழிமுறைகளை எவ்விதம் கடைப்பிடிக்க முடியும்? அப்படி அணுக முயல்வது தற்கொலைக்கு ஒப்பான தாகத்தான் இருக்கும்.

ஒரு தேசிய இனம் தன்னை பாதுகாத்துக் கொள்ள ஆயுதம் ஏந்துவது தடுக்கப்படுகிறது என்றால்.. அங்கு தினம் தினம் குழந்தைகள், பெண்கள் உட்பட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்படுவதனை தடுக்க இந்த அரசாங்கங்களும் அனைத்துலக நிறுவனங்களும் என்ன மாற்று வழிகளை வைத்திருக்கின்றன? இதில் வேடிக்கை என்னவென்றால் இந்த மனிதவுரிமை மீறல்களை செய்து வரும் சிறிலங்கா அரசுக்கு அண்மையில் ஐ.நா.வின் மனிதவுரிமை சபையில் அங்கத்துவம் வழங்கப்பட்டிருக்கிறது.

இன்று பலநாடுகளில் தடைசெய்யப்பட்ட இயக்கமாகிவிட்டாலும் அமைதி முயற்சி என்ற பெயரில் சர்வதேச வலைப்பின்னல்களில் மாட்ட எடுத்த முயற்சிகளிலிருந்து விடுதலைப் புலிகள் வெளிவந்து விட்டார்கள். இனி அவர்கள் தேச விடுதலையை முன்னரிலும் தீவிரமாக முன்னெடுப்பார்கள். இந்நாடுகளில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் இயங்க முடியாவிடினும், புலம்பெயர்ந்து வாழும் ஒவ்வொரு தமிழரும் தமிழ்த் தேசியத்தின் பிரதிநிதியாக நின்று செயற்படும் காலம் வந்துவிட்டது.

ஒரு பேப்பர்

வணக்கம்!

இம்மாதம் ஒரு பேப்பர் முன்றாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது. மழலை மொழி கடந்து இனி புரியும் மொழியில் ஒரு பேப்பர் பேசப் போகிறது என்கிறார் ஒரு பேப்பர் குடும்பத்தில் மூத்தவரான பாலா. உங்கள் பேப்பரில் தாராளமாக காணப்படும் எழுத்துப் பிழைகளை கவனித்தாலே போதும் வேறு ஆலாபனைகள் வேண்டாம் என நீங்கள் சொல்வது கேட்கிறது. தங்கை ஊர்மிளா பிழையின்றி அடித்தாலும் தயாரிப்பு வேகத்தில் அங்கொன்று இங்கொன்று தவறுகள் ஏற்பட்டு விடுகின்றன. இருப்பினும் இந்த அச்சு பேயை இந்த இதழிலிருந்து எந்த சாமியையும் துணைக்கு அழைக்காமல் கலைத்து விடுவது என்று முடிவெடுத்துள்ளோம்.

எங்கள் சிறி ஒரு பேப்பர் ன் dummy copy யை தயாரித்துவிட்டு இதுதான்டாப்பா பேப்பர் என்று சொன்ன நாளிலிருந்து சும்மா சும்மாவாக 48 இதழ்கள் வெளிவந்து விட்டன. இந்த இரண்டு வருடங்களில் நாங்கள் எதிர் நோக்கிய பிரச்சனைகள் பல. எங்களுக்கு முத்திரை குத்த முயன்றவர்கள் தாங்கள் விரும்பியபடியெல்லாம் முத்திரை குத்தினார்கள்.. தொடர்ந்தும் குத்தி வருகிறார்கள். தமிழைக் கொல்வதாகச் சிலரும்.. பத்திரிகா தர்மத்தை சக்கை வைத்து கிளப்புவதாக சிலரும் ஒப்பாரி பாடினார்கள்.. பிழைப்புக்காக நாங்கள் தமிழ் தேசியத்தை தூக்கிப் பிடிப்பதாக சொன்னவரும் உண்டு..

ஆனால் இந்தப் பேப்பரை முந்தியடித்து கொண்டு படித்துவிட்டு அடுத்த பேப்பர் எப்போது வரும் என எதிர்பார்த்து காத்திருக்கும் உங்களின் அபிமானத்தால் இந்த பொல்லாப்புகள் எல்லாம் அடிபட்டுப் போய் விடுகிறது.

ஒரு பேப்பர் வெறுமனே 10ம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள ஒரு சிறு குழுவினரால் வெளியிடப்படுவதில்லை. தங்கள் பெயர்களை பதிய விரும்பாத பலரின் நேசக்கரங்கள் எங்களை பற்றி நிற்பதனால்தான் 40 பக்கங்கள் கொண்ட பத்திரிகையாக குறித்த நாளில் உங்கள் கரங்களை வந்தடைகிறது. இதற்காக நித்திரையை தவிர்த்தவர்கள் உணவை துறந்தவர்கள் என கண்டங்கள் கடந்து எங்களுடன் சிலுவை சுமப்பவர்களுக்கெல்லாம் எங்கள் உளமார்ந்த நன்றி.

Kids Paper க்கும் Teens Paper க்கும் ஆக்கங்களை அனுப்புவோரையும் அவர்களது பெற்றோரையும் நாங்கள் மறந்து விடவில்லை. அவர்களுக்கும் நன்றி. மற்றைய பெற்றோருக்கு ஒரு வேண்டுகோள் உங்கள் பிள்ளைகளின் எழுத்து முயற்சிக்கு ஊக்கம் கொடுங்கள். அவர்களது எழுத்தாற்றலை வளர்க்க ஒரு பேப்பர் களும் அமைத்துத் தருகிறது.

ஒரு பேப்பர் ரை ஒசியாகத் தர முடிவது விளம்பர தாரர்களின் ஆதரவினால்தான் என்பதில் வியாபார இரகசியம் ஏதுமில்லை. ஒரு சமூகப் பத்திரிகை யின் வளர்ச்சிக்கு உறுதுணையாய் நிற்கும் அவர் களுக்கு நன்றி சொல்வதில் கௌரி அக்காவுடன் நாங்களும் இணைந்து கொள்கிறோம்.

இது உங்கட பேப்பர் . . இதை இன்னும் திறமாக்க உங்கட்ட ஏதும் 'ஐடியா' இருந்தா சொல்லுங்கோ. போனிலையும் சொல்லலாம். இமெயிலிலையும் அனுப்பலாம். எப்படியாவது சொன்னால் போதும். 'றை' பண்ணுறம்.

ஒரு பேப்பரின் பயணம் தொடர்கிறது ...

சந்திப்போம்...

ஒரு பேப்பர் காரன்கள்+காரிகள்

EDITORIAL

The Need for Historical Revisionism

The Rwandan Genocide was the slaughter of an estimated one million people during a period of 100 days from 6th of April through mid-July 1994. Most of the killings were carried out by the majority Hutus against Tutsi minority.

For many, the Rwandan Genocide stands out as historically significant. This is not only because of the sheer number of people that were murdered in such a short period of time, but also because of the way that many Western countries responded to the atrocities. Despite intelligence provided before the killings began, and international news media coverage reflecting the true scale of violence as the genocide unfolded, virtually all the so called ethical and moral guardians of the civilised world declined to intervene.

The United Nations did not authorize UNAMIR(a UN peace keeping force) to act in bringing the killing to a halt. Despite numerous pre- and present-conflict warnings by Canadian Lieutenant-General Roméo Dallaire, the UN peacekeepers on the ground were asked to ignore the murderous militias and paramilitaries.

In the weeks prior to the attacks, the UN did not respond to reports of paramilitaries amassing weapons and rejected plans for a pre-emptive interdiction. This failure to act became the focus of bitter recriminations towards the United

In the weeks prior to the attacks, the UN did not respond to reports of paramilitaries amassing weapons and rejected plans for a pre-emptive interdiction

Nations, Western countries such as France and the United States, and individual policymakers, including President Clinton, who described US inaction as "the biggest regret of my administration."

Today Tamil Diaspora sees parallels between machinations of Hutu led Rwanda of 1994 and Sinhalese led Sri Lanka of 2006.

The insecurity, organised chaos, institutional racism and violence all have been systematically directed against the Tamil Nation after a four years break.

In areas like Trincomalee there are systematic intimidation and killings of Tamils. These are carried out by the agents of the Sri Lankan state in order to make these areas Tamils free ("I am personally in favour of getting rid of all Tutsi... without the Tutsi all of Rwanda's problems would be over" a Rwandan cabinet minister to have said during a cabinet meeting prior to the genocide).

The international players all know of the current situation in the Northeast but are indifferent and impassionate towards Tamils.

Since the Tsunami through actions and inactions the international players have made Sinhalese Buddhist hegemony more assertive towards their final solution, that is the destruction of Tamil resistance .

Each one sided International condemnation of the LTTE, every failure of the international community to stand by agreements such as the P-TOMS, every instance where incidents of high profile violence against Tamils are followed by indifferent international silence, legitimises and strengthens the Sri Lankan nation state with its Sinhala Constitution, Sinhala Parliament, Sinhala Judiciary, Sinhala bureaucracy and Sinhala armed forces.

By doing so the international community is making the Sinhalese Nation's need for a historical revisionism led solution to the civil war unnecessary.

The international players all know of the current situation in the Northeast but are indifferent and impassionate towards Tamils.

As we, the Tamil Diaspora having had the first hand experience of the Sri Lankan institutional racism have tried our best to inform the international community for years and years.

Since 1983 we have been writing letters to our elected representatives, holding public rallies, marches, exhibitions and seminars explaining the situation there.

Again we have tried this week. Where ever we have made home we went out, in pouring rain, freezing cold and scorching sun we, the hard working, tax paying, decent Tamils in our thousands tried our best to reason, argue and inform, again.

Even after all these the Western blamelessness is carrying on with a brazen detachment of reality and double speak.

So what do we do now?

We can not give up is the answer.

We have worked very hard to make our people in our homeland to achieve remarkable success in their resistance. With our assistance the people on the ground have fought, provided financial support to acquire skills and materials to build a conventional army, forced the Sri Lankan armed forces to withdraw from nearly 70 percent of our homeland.

With out skills and resources they are building an administration and law-and-order machinery. We are the only ones can and will help them to guarantee their own security.

Thus we will carry on in what ever ways we could help them to be safe and secure.

In order to do so we will make every endeavour to stir our people's reason, intellectual curiosity, our imagination and most of all our sense of community.

This is not defiance, belligerence or destructive ethno-nationalism. This is simple survival as a community, just like the Jews and the Tutsis of Rwanda.

உலகை உலுக்கிய உரிமைக்குரல்

இளந்திரையன்
(ஒரு பேப்பருக்காக)

"சட்டச் சட டட்டா என்று கொட்டிக் கனைத்தது வானம்
எட்டுத் திசையும் பொடிபட
எழுந்தது தமிழ் முழக்கம்"

தமிழரின் உரிமைக் குரல்
உலகை உலுக்கிய சேதி
கேட்டாயோ? ஆர்த்தெழுந்த
அலைகடலின் அலை கரங்கள்
உலகத்தின் முகத்திலறைந்த சேதி
கேட்டாயோ..? .

பதுங்கவில்லை தமிழ் வீரம்....
பதறவில்லை பாராளும் எண்ணம்
என்பதை அறிந்து கொண்டாயோ?

ஒரு கோடியில் குடியிருந்த
தமிழின் குரல் பன்னிரு
திசைகளில் பதறி எழுந்ததை
பார்த்தாயோ?...
தீராத் தாகம் கொண்டு ...
தாயக மோகம் கொண்டு.....
அண்டங்கள் அதிர
ஆர்த்தெழுந்ததைப் பார்த்தாயோ?

உலகே!

உண்மையொன்று
சொல்லுகின்றோம்....உதிரத்தில்
ஊறியது எம் உணர்வு...

உதறியெறிவதோ கதறியழுவதோ
உணர்வுள்ள தமிழன் செயலல்ல....
இதை அறியாது,

எத்தனை தடைகள் போட்டாலும்
அத்தனையையும் பொடிப்
பொடியாக்கி எழுவோம்.....

நாம் எத்தனை முறை விழுந்தோம்
என்பது கணக்கல்ல..... அத்தனை
முறையும் எழுந்தோம் என்பதே
கணக்கு... அதுவே புதிய
வழக்கு....

எத்தனை முறை எமை
எரித்தாலும் அத்தனை முறையும்
உயிர்ப்போம் .... பீனிக்ஸ் பறவை
போல ....

உயிர்க்குலையின்
உலைக்களத்தில்
கொதிக்கின்றோம்....
தமிழ் உணர்வுடன்...

உஷ்ணக் காற்றின் எரிமலையாய்
எழுகின்றோம் தாயக
உணர்வுடன்....

சிறு மழை பொழிந்து
தணிக்குமோ எம் தழல் வீரத்தை

சிறு நரி குரைத்து சிதைக்குமோ
சூரியனின் சீற்றத்தை.....

பன்னிரு நாடுகளின் எண்ணறு
வீரர்கள்.... எழுந்தே வந்தனர்...

காடுகள் கலங்கிடவே..... கடல்கள்
பிரிந்து வழி விடவே....

எழுந்து வந்தனர்.....
இறங்கி வந்தனர்.....

போக்கிரி உலகத்தின் போர்த்திய
தோல் கிழித்திடவே...

புலியாய் இறங்கி வந்தனர்....
புதிதாய்ப் பிறந்து வந்தனர்...

புத்தனின் தேசத்துப் புல்லுரிவிகள்
புறமுதுகிடவே...

சிங்கத்தின் சிங்களம் சிதறி
ஓடிடவே....

சித்தனின் படையொன்று ...
சித்தமாய் இறங்கி வந்தது.....

பிரளயம் படைத்த தலைவனின்
கரத்தை இறுக்கிக் கொண்டது..

காரிருள் கிழித்த கரிகாலனின்...

களத்தில் வலிமை கோர்த்தது.....

அணைக்கக் கரங்கள் இருந்தால்
வாருங்கள்..இல்லையேல்

மூடிக் கொள்ளுங்கள் உங்கள்
முக்காடுகளை...

காத்திருக்கும் வரை நாம்
காற்றாகவே இருக்கின்றோம்

புறப்பட்டு விட்டால் புயலென்று
புரிய வைப்போம்.....

சர்வ தேசமே ! புரிந்து கொள்...

நாம் புல்லுரிவிகள் அல்ல..
புதிய தேசத்தின் புதல்வர்கள்.....

நாம் பயங்கர வாதிகள் அல்ல
பண்பாடு நிறைந்தவர்கள்....

அன்பினால் அடித்தால் அடுத்த
கன்னத்தையும் காட்டுவோம்.....

அராஜகத்தால் எதிர்த்தால்
அடித்த
கையையும் ஒடிப்போம்.....

சர்வ தேசமே ! உணர்ந்து
கொள்

அலட்சியம் காட்டுவதற்கு நாம்
அபலைகள் அல்ல...

நசித்துப் போடுவதற்கு நாம்
நல் இரத்தம் இல்லாதவர்கள்
அல்ல....

சர்வ தேசமே ! உனை
மதிக்கின்றோம்..
சம தளத்தில் நீ நடக்கும்
வரை.....

சர்வ தேசமே ! உனை
வரவேற்கின்றோம்

நம் விருப்புக்குரிய
விருந்தினராக.....

சண்டித் தனம் காட்டினால்
சங்கடப் படுவாய்.....

நல்ல தனம் காட்டினால்
நன்றியோடு நினைக்கப்
படுவாய்...

இது தொடக்கமே.....
தொடக்கம் மட்டுமே....
முடிவில்லாத தொடக்கம்

சுற்றும் பூமி சுற்றும் வரை...
சுழலும் காற்று இருக்கும் வரை....

நதியும் கடலும் ஓடும் வரை....
எரிக்கும் சூரியன் இலங்கும்
வரை....

இல்லையென்று சொல்லாமல்
தமிழன் இருப்பான்..

இனிய தமிழால் அவன்
கதைப்பான்....

உரிமைக் குரல் சொல்லிய சேதி
இது கேட்டாயோ?

உலகே ! ....
இது தமிழன் குரல்.....
தமிழின் குரல்....

புதுயுகத்தை தோற்றுவித்த
புதுத்தமிழன் வருகிறான்
விழிகொடுத்து வழிநடத்த
வீறு கொண்டு வருகிறான்

EDITORIAL: BANGKOK POST EDITORIAL, MAY 24, 2006

US, EU Blacken Hopes for Tamils

President George W Bush is leading the White House and persuading his allies in misusing the label "terrorist" when referring to those minorities who are fighting, sometimes violently, their oppressors. These "Davids" of the world, in most cases, are only standing up to their "Goliaths" in the only way left to them after all else has failed.

Desperate people do desperate things. The world has witnessed many instances where minority groups - discriminated against, taken advantage of, and who want to attempt to improve their lot for their children's future - have resorted to violence against their oppressors. It is a human reaction that when requests and negotiations fail, people will fight, often physically, for their rights. Often when a government is the oppressor, the United Nations, a super power or a neighbouring alliance of countries, will put pressure on that government to show restraint and end the discriminatory practices.

The United States has correctly branded Osama bin Laden, al-Qaeda and the pilots and hijackers aboard the 9/11 planes as terrorists. But President George W Bush is leading the White House and persuading its allies in misusing the label "terrorist" when referring to those minorities who are fighting, sometimes violently, their oppressors. These "Davids" of the world, in most cases, are only standing up to their "Goliaths" in the only way left to them after all else has failed.

> These "Davids" of the world, in most cases, are only standing up to their "Goliaths" in the only way left to them after all else has failed

It is extremely hypocritical that while Mr Bush touts democracy as being a main reason for the invasion of Iraq, when the Palestinians duly elect their democratic government in a free and fair vote, Mr Bush and his White House colleagues refuse to deal with them. The Hamas government is labelled a terrorist organisation, when in fact the Palestinians are in a desperate fight against their oppressors.

Last Thursday, under pressure from the US, the European Union agreed to label the Tamil Tigers in Sri Lanka as a terrorist organisation by June 1, unless it renounces violence. Yet the Colombo government historically discriminates against Tamils in Sri Lanka, limiting their education opportunities, denying them a place in government employment and restricting them in many other areas. This week, men in soldier's uniforms gunned down an entire Tamil family and the second-highest Tamil Tiger leader was assassinated. Late last month, the Sri Lankan navy moved to close the shipping lane in the north which provides the only link to the outside world that the Tamils have. This vital transport route, if closed, would bring starvation and further destitution to the Tamils, so they retaliated with every means that they had available and a navy vessel was sunk with the loss of some sailors' lives.

> This week, men in soldier's uniforms gunned down an entire Tamil family and the second-highest Tamil Tiger leader was assassinated.

When the tsunami struck Asia, it wiped out many homes and infrastructure in the region which is under the control of the Liberation Tigers of Tamil Eelam (LTTE), but international aid remains blocked and certainly no government expenditure has been forthcoming to this desperately poor area.

In June 2003, the US, EU, Norway and Japan raised $4.5 billion in pledges of aid for the Colombo government but tied much of it to the progress of peace talks with the LTTE. Peace broker Norway has failed to bring the parties together for months as the supposed cease-fire continually is broken. Because no progress has been made in peace talks, it is unlikely these pledges will be called upon any time soon. This quartet of powerful nations is to meet again on May 30 to decide their future role in Sri Lanka.

The LTTE's political-wing chief, S P Thamilselvan called the EU move "shocking and surprising", and added that the Tamil people were "banking their hopes" on the peace process. For the US and EU to be blacklisting the already downtrodden LTTE is humiliating for them and sending them further into global isolation. The Tamils began their fight in 1972 and reports suggest 60,000 lives have been lost since then, with more than 200 dead in April alone. Blacklisting puts travel restrictions on their leaders, freezes bank accounts and puts in place other hurdles at a time when the only solution appears to be just the opposite.

When the four big powers meet on May 30, they need to find a way to give the Tamil people some hope for the future. Because if not, desperate people do desperate things.

Peace – The difficult yet necessary path

By: Jayadeva Uyangoda

A large-scale break out of hostilities between the government of Sri Lanka and the LTTE seems to be now inevitable. As things stand right now, the decision by the European Union on the question of listing the LTTE as a terrorist entity is crucial in shaping the agenda of events in the next few weeks to come.

Mr. Erik Solheim, the Norwegian Minister in charge of Sri Lanka's peace process, has given expression to an increasing sense of pessimism felt by the international actors, concerning the prospects for Sri Lanka. He spent two days, May 25 and 26, in Colombo, along with the special peace envoy, Mr. Jon Hanssen-Bauer.

Then on May 27, he flew to New Delhi to consult the Indian government. As AFP reported on that day, he has said in New Delhi that Sri Lanka "could be heading back to all-out war."

Solheim has also commented that Sri Lanka's peace process was "more difficult" than he thought. These are indeed strong words coming from a man who knows the mind of both the Sri Lankan government and the LTTE. One may also note that Solheim as well as the Norwegian diplomats have always been very cautious in making public statements about the failures in their peace-making task in Sri Lanka.

Banning

Meanwhile, the proposed banning of the LTTE by the EU is most likely to be a defining event in the conflict. It will certainly force the LTTE into a period of isolation and in turn to a behaviour of isolationism.

Both the international community and the government appear to work on the assumption that the LTTE leadership might become flexible in response to a coordinated campaign of international isolation. It would be interesting to see how this strategy works. Tigers might be less likely to be flexible under conditions which they see as coercion. This is a major policy dilemma for any government in dealing with the LTTE.

In the coming phase of isolation and isolationism, the LTTE might be tempted to act unilaterally. There are already warnings of such unilateralism. In an extreme scenario, the LTTE can withdraw from all their international engagements, including the dialogue with the SLMM and the Norwegian facilitator.

Such an action will amount to withdrawing from the CFA, without actually saying it in writing. The LTTE leaders probably think that by such action they would be able to turn the tables on the government as well as the international community.

> If the JVP leadership is really committed to preventing an eventual UN intervention, the best course of action is to prevent a large-scale war from breaking out.

Show down

Meanwhile, it appears that both the government and the LTTE are willing to risk a major military show down. If the war breaks out, it will create immense destruction to both sides. The tragedy is that the two sides know it, but take little concrete action to arrest the sliding back to war. Such is the way things happen in this age of unreason.

What will eventually happen after a mutually destructive war between the government and the LTTE? One distant possibility is the realization of what many Sinhalese patriotic forces are opposing at present, namely the entry of the UN peacekeeping troops to separate the two warring sides from fighting. Those who oppose such a development seem to behave in a manner that will actually create conditions for it.

The unkind dialectic of politics is that one often gets outcomes one does not want. If the JVP leadership is really committed to preventing an eventual UN intervention, the best course of action is to prevent a large-scale war from breaking out.

But their thinking appears to be based on the assumption that in a full-scale war, there will be a real chance to defeat the LTTE militarily. As this thinking goes, an external military intervention to separate the two warring sides will only prevent such a favourable outcome.

Mutual bleeding

The second, more realistic possibility is that after a lot of bleeding, the two sides, tired and exhausted of war and violence, might ask the international community to come and mediate in the conflict.

This scenario of mutual bleeding will interestingly create a new strategic equilibrium between the government and the LTTE on an 'I lose-you also lose' framework. This would be an original contribution that the government of Sri Lanka and the LTTE would be making to the theories of conflict resolution: A lose-lose outcome is as important in defining conflict dynamics as is a win-win outcome.

This is where Sri Lanka has to learn lesson from Nepal. A country that does not boast of its achievements as we Sri Lankans do, Nepal has shown a tremendous example of a low-cost path to political change and reform.

There is a low-cost path to conflict management in Sri Lanka. It is the path of political engagement. Return to political engagement is not only a low-cost path to peace. It is also the most humane and rational option.

Window of opportunity

The reported statements made by President Rajapakse insisting that he does not consider war as an option can constitute a new, though narrow, window of opportunity for re-opening the path to political engagement.

But the effects of these statements need to be further strengthened by elaborating a broad framework statement for a new process of political engagement between the government and the LTTE.

This 'framework statement' can have three main components. It should fist re-iterate the government's assurance to fully implement the CFA as well as the commitments made in Geneva in February this year. By making this point, President should invite the LTTE's reciprocity. Secondly, the framework statement should propose broadening of the scope of political engagement, from talks on the CFA and de-escalation to political negotiations suspended in 2003. Thirdly, it should propose a political-constitutional framework for ethnic conflict resolution, conceived in terms of extensive regional autonomy.

Time, indeed, is running out for Sri Lanka. More than ever, the fate of Sri Lanka depends on the decisions made by one person, Sri Lanka's Head of state.

One can only hope that President Rajapakse has the strength to continue to defy the counsel given to him by some of his advisors and allies for a military solution, and without delay inaugurate a new phase of political engagement with the LTTE. This is difficult, but necessary. Even if does not work fully, it is a path worth taking.

(Source: Daily Mirror - May 30, 2006)

OXFORD COLLEGE
5 Morden Court Parade,
London Road, Morden,
Surrey SM4 5HJ
Tel: 020 8687 2484
Mob: 07886 907 793
email: info@theoxfordcollege.com

Skills for life
இலவச ஆங்கில வகுப்புகளும்
குடியுரிமைக்கான (Citizenship)
ஆங்கில வகுப்புக்களும்,
சிறுவர்களுக்கான Tuition
வகுப்புகளும் நடத்தப்படும்

அலுவலக வேலைவாய்ப்புக்கான இலவச கணனி மற்றும் ஆங்கில பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

♦ City and guilds இன் கணனிநெறி IT Level I, II & III மற்றும் ESOL சான்றிதழ்கள் பயிற்சியின் இறுதியில் வழங்கப்படும்

♦ 18-54 வயதுக்குட்பட்ட ஆண், பெண், இருசாராரும் தமது தொழில் வாய்ப்பை அதிகரித்துக் கொள்ளலாம்.

♦ லண்டனில் உள்ள பல்வேறு நிறுவனங்களில் அலுவலகப் பயிற்சிகளும் ஒழுங்கு செய்து தருகிறோம்

EDITORIAL: EELAM NATION

Tamil Aspirations for Human Rights are a letter to Santa Claus

"Like a juvenile delinquent with indulgent parents, the U.N. will persist in its course toward destruction until it is decisively held to account," said Miami Republican Representative. Ileana Ros-Lehtinen. Calling the new Human Rights Council an improvement she said was "farcical" and its composition "irresponsible."

In no part in the world are the Human Rights of a people so abused by their government as in the case of the Tamils of Sri Lanka with such abuses taken for granted by the international community. The abuses have gone on for more than thirty five years and the people put up with them with fatalistic resignation as if it is all a part of their lot.

The Commission on Human Rights in Geneva where violators like Zimbabwe, Sudan and Libya regularly got themselves elected and then worked from the inside to block commission condemnations of their abuses has now been replaced ("cloned" is a better word) with a "higher status". The new Human Rights Council has Sri Lanka in it along with other violators of Human Rights: Pakistan, Bangladesh, China, South Korea, Indonesia, Russia, and Saudi Arabia.

Dismal record

Hardly six months had passed since Rajapakse came to power of which four of them were clouded with the dismal record of blatant abuses of Human Rights, the Permanent Representative of Sri Lanka to the UN, with the servility characteristic of a sycophantic political stooge, described the election of Sri Lanka to the Human Rights Council as "ample manifestation of the trust placed by the international community on the Government of President Mahinda Rajapaksa, and his commitment to democracy and human rights, both locally and internationally". If the killings of five Tamil students in Trincomalee in January, the aerial bombings on the Tamil speaking people in April are not Human Rights abuses then what in the world are they? Even with Sri Lanka's election to the Council abuses go unabated with impunity as evidenced in the recent killings of the 13 Tamils civilians including a four-month-old baby and a four-year-old child in the Kayts area

Sri Lanka, famous for creating ministries at the drop of a hat lost no time in creating a Ministry for Disaster Management and Human Rights. It is disaster whichever way you look at it. The ministry was created not because of the immensity of Human Rights but because of the lack of it, a scarce resource calling for good management. The minister Mahinda Samarasinghe at its first meeting of the Human Rights Commission, the Sri Lankan version, recently set up, stated: "This has to be maintained by proving that the Government does not allow human rights violations". With the government as the very perpetrator it is not a question of the government "allowing". It is matter of refraining.

Human Rights are now a matter of convenience to most of western democracies. The US focussed its disproval only in regard to the election of Cuba, whose violations of human Rights, if any, defy any comparison to those of Sri Lanka. Cuba even with the fifty years of the crippling sanctions placed by the US has now emerged as a third world country having the best free medical facilities comparable to any industrialised country including the US. In Saudi Arabia at least two hundred persons are beheaded every year but they are good because the US buys most of its oil and Britain sells most of its arms. China with its sweat shops and its exploitation of its workers with appallingly low wages, a bench mark to other western countries is said to be on its way to democracy. About Indonesia the least said the better. Vladimir Putin of Russia who was responsible for more atrocities in Chechniya than those committed in Kosovo was effusively referred to by Tony Blair as being a "friend and partner".

Biggest offenders

Leaders who profess to be the greatest defenders of Human Rights are the biggest offenders. US and Britain are cases in point. In order to mitigate the severity of their own guilt in war crimes committed in the guise of fighting terrorism they have sought to devalue the gravity of their own human rights abuses thus affording greater licence for rogue states to act with added impunity. The new definition on torture given by Alberto Gonzales who is now the US Attorney-General, by his memo of 2002 devaluing its gravity led the international law Professor Jordan Paust to write:" Not since the Nazi war have so many lawyers being so clearly involved in international crimes concerning the treatment and interrogation of persons detained during the war" and the 2002 memo " is an unprincipled plan to evade the reach of law and to take actions of Geneva law while seeking to avoid criminal sanctions". The direct tortures in Guantanamo Bay, the outsourcing of torture to non Western countries through the process of "rendition" and the Human Rights crimes committed in Faluja by the US army in Iraq should go down in history books. as some of the greatest abuses of Human Rights.

With regard to Britain, let us go no further than to refer to Tony Blair's latest assault against civil liberties in the attempt to override a range of existing laws such as the 1998 Human Rights Act following a High Court ruling, on 10 May 2006 relating to the case of nine Afghanis, that the government was guilty of an "abuse of power" in its efforts to subvert the rule of law. In November 2005, the Home Secretary, granted the Afghani refugees temporary admission to the UK on the basis that they would not be able to work or travel abroad and must report regularly to authorities.

In the High Court ruling on May 10, Mr. Justice Sullivan quashed the Home Secretary's decision as unlawful and described the Home Office's continued efforts to deport the nine, despite legal rulings, as "inexcusable." Justice Sullivan said: "It is difficult to conceive of a clearer case of conspicuous unfairness amounting to an abuse of power by a public authority."

Thanks to the strong justice system in Britain. The helpless Afghanis got their share of justice. The Tamil people can only wait for Santa Claus.

(Courtesy: www.eelamnation.com)

Mindless Optimism

By: K. Sooriyakumaran

For the first time in modern Sinhalese history a southern politician has been elected as the all powerful Sri Lankan president. And that is Mr Mahinda Rajapakse.

He is one of the most patient, clever, pragmatic and Machiavellian Sinhalese politician of our times. He has cleverly studied the Sinhalese political undercurrents and moves accordingly. He has learnt from the mistakes of Mr Premadasa. Thus he has acquired the political support of the Buddhist Sinhalese and has appointed his relatives, friends and admirers to powerful positions. By doing so he is strengthening his power base within the state and the party machinery.

He is not doing so just to be the president for the next 5 to 10 years. He wants to occupy a historical position as the person unified the divided Buddhist Sri Lanka. A modern day 'Dutta Gemunu' if you wish.

The only factor which can make his ambitions disintegrate is the LTTE and he knows it well.

Thus he is making moves accordingly to tame the Tiger. The restructuring the armed forces, harnessing the support of the international community to strengthen the State and very importantly weakening the Tamil resistance by a shadow war by Tamil paramilitaries are all part of his plan.

Power base

In order to do so he has appointed Sinhalese war heroes (General Sarath Fonseka etc) as the commanders of the armed forces, strategically deploying Tamil paramilitaries and employing very experienced and clever diplomats to lobby the international community.

Thus we have 'Team Rajapakse' consisting of Mr Rajapakse, his brother Gothabaya, retired DIG Kotagadeniya, Dr. Palitha Kohona, Dr Jayantha Dhanapala, Mangala Samaraweera, Ketheesh Loganathan and others.

The LTTE has identified Team Rajapakse's calculations well but the international community does not seem to do so. The international community is dazzled by this team's star players and their performance. Thus it is betting on the Sri Lankan nation state.

In order to make things clear to everyone the LTTE moved swiftly since Geneva talks. It has sent repeated messages to every one, especially to Team Rajapakse about the folly of taking too many variables as constants.

The taster came when the commando units of the LTTE destroyed three Karuna paramilitary camps and killed around 20 operatives. Team Rajapakse seems to think Karuna as a magic formula for some of their military ills. As Karuna was the perceived hero who destroyed Kumaratunge's Operation Jayasikurui they seem to think that with his assistance the Sri Lankan armed forces will be able to break the back of the LTTE, at last.

Thus LTTE showed the real strength of the Karuna operatives by destroying their camps. But again this seems to have made no difference in Team Rajapakse's calculations and the Karuna illusion is carrying on. The killing of Col Ramanan seems to have strengthened this belief of Karuna magic.

Supply route

The second one was the attack on the naval convoy off the seas off Vadamaratchi east. Almost 30 to 40% of all Sri Lankan military assets are strategically deployed in Jaffna peninsula which is 1000 square kilometres. The only reliable supply route to Jaffna is the sea lanes from Trincomalee to KKS. Everyone knows that if and when the conventional war starts the most militarily efficient strategy for the LTTE will be to take control of these Sri Lankan military assets.

Again this showing off their ability by the LTTE in blocking the vital sea supply route seems to have made no dents in Team Rajapakse's self confidence. It continues to think that because the LTTE could not destroy the MV Pearl Cruise II the Sea Tigers as weak and thus incapable of blocking their supply route. It sincerely believes that the Sri Lankan Navy will be able to supply their troops in Jaffna peninsula if and when the war starts.

All these believes, illusions and self confidence of Team Rajapakse are based on mindless optimism. Mindless optimism is a coping mechanism during desperate times than anything concrete or realistic.

ஸ்ரீ முத்துமாரியம்மன் ஜோதிடம்

(Specialist International Astro Palmist)

சாஸ்திரி இராமகிருஸ்ணகுமார் அவர்கள்

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள இவர் கைரேக்கை, முகநாடி, ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக தொழில், கல்வி, குடும்பம், திருமணம், குழந்தை பாக்கியம், மற்றும் . உங்கள் பிரச்சனைகளைக் கூறுவதுடன் நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பவை, பற்றிய விபரங்களைத் தெரியப்படுத்தி பரிகாரமும் கூறுகிறார். இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்தி வாழ்க்கையில் எல்லா நலன்களும் பெற்று வாழுங்கள். எத்தனையோ சாஸ்திரிகளிடம் உங்கள் பலன்களைக் கேட்டிருப்பீர்கள். இவரிடம் ஒருமுறை கேட்டுப் பாருங்கள்.

Tel: **020 8423 8323** Mob: **07947 371 502**

Sastry Ramakrishnakumar International Astro Palmist

Reader - New Arrival to London. An expert sastry at your service, past, present & future of your life, will be read over to you from palm reading, face reading & chart reading, prediction in business, education, job, love, marriage, family problem, sickness, promotion. We also undertake shanthi pooja and lakshmi pooja (prayers) etc. We also provide you protection amenties. Tamil, Hindi & English languages

SRI MUTHUMARIYAMMAN JYOTHIDAM

New Shanker Superstore (Near South Harrow Tube)

231-233 Northolt Road, South Harrow HA2 8HN

ஒரு பேப்பர்
ORU PAPER

எண்ணும் எண்ணங்கள்
யாவினும் வெற்றி!

ஆசிரியர் குழு:
சேயோன் - திரு
சிறி - சுஜீத்

பொறுப்பாசிரியர்
- கோபி -

விளம்பரம்
கௌரி - பாலா

அச்சு
ஊர்மிளா

வடிவமைப்பு
jasmine studio

முகப்பு வடிவமைப்பு
seven zero graphics

விளம்பர வடிவமைப்பு
ரஜீவன் - கிரி - ஹபீப்

இணையத்தள வடிவமைப்பு
ரஜீவன்

தமிழ் எழுத்துரு உதவி
சுரதா யாழ்வாணன்

நிதி – நிர்வாகம்
செல்வி - முருகானந்தன்

வழங்கல்
உதயகுமார்-கதிர்-கரன்

உங்கள் தொடர்புகட்கு:

தொலைபேசி (Tel)
020 8640 4604
020 8286 9327

தொலைநகல் (Fax)
020 8640 6972

ஆக்கங்கள் மற்றும்
அஞ்சல்வழித்தொடர்புகட்கு:

பணிமனை முகவரி
Oru Paper
45'B' Crusoe Road
Mitcham CR4 3L J
Surrey

மின்னஞ்சல்:
info@orupaper.com

இணையம்:
www.orupaper.com

'Oru Paper' is a bi-lingual paper published from London by Jasmine Studio Ltd. on the 1st and 3rd Fridays of each month The views expressed are those of the contributors and do not reflect the views of editors or its publishers. All information including advertisements are presented in good faith. However the general public is informed that the publisher accepts no responsibility for any loss or damage whatsoever caused by errors or omissions.

சற்று மாறுதலுக்காக

தடைகள் யாவையும் தகர்ப்போம்

சேயோன்
(ஒரு பேப்பர்)

இறுதியில் அது நிகழ்ந்து விட்டது. ஐரோப்பிய ஒன்றியம் நமக்கு மேல் தடையை இட்டு விட்டது. பேச, எழுத, வாசிக்க, நிற்க, இருக்க, நடக்க, உண்ண, உடுக்க, உறங்க எல்லாவற்றுக்கும் தடை. சுவாசிக்கக் கூடத் தடை.

இந்தா அந்தா என்று இழுத்தடிக்காமல், தடை விதித்தது நல்லது. அப்போதுதான் ஓர்மம் எழும். உரம் பெறுவோம். வாழை போல வெட்ட வெட்ட முளைக்கலாம். சங்கு போல சுடச் சுட வெளுக்கலாம். ஒன்றைக் கவனியுங்கள். ஏகாதி பத்திய நாடுகள் எதுவும் விடுதலைப் போராட்டங் களை ஏறெடுத்தும் பார்த்ததில்லை, ஏனென்றும் கேட்டதில்லை. ஆரம்பக் காலங்களில் மக்கள் கொல்லப்படுவார்கள். நகரங்கள் அழிக்கப் படும். கிராமங்கள் எரிக்கப்படும். ஏகாதிபத்தியங் களுக்கு அவை ஒன்றும் உறைக்காது. ஒரு சொல் கேளார். மக்கள் சிந்திய இரத்தம் ஆறாய் ஓடி, அவர்கள் காலை நனையாத வரை, அப்படி ஒன்று நடந்ததா என்று கேட்பார்கள்.

ஆனால், இந்த ஒடுக்குமுறைக்கெதிராக மக்கள் துடித்தெழுந்து, தடி பொல்லுகளுடன் புறப்பட்டால் இந்த ஏகாதிபத்தியங்கள் விழித்துக் கொள்ளும். சிலிர்த்துக் கொள்ளும். துடித்தெழுந்த மக்களின் தடி பொல்லுகளை பறித்துத் தூர எறிவதில் மும்முரமாக நிற்கும். இது காலம் காலமாக நடந்து வரும் கதை. யாவற்றுக்கும் ஜனநாயகம் என்ற சொல் உண்டு. ஏகாதிபத்தியங்கள் இந்த ஜனநாயகத்தின் பெயரில் அத்தனை அட்டுழியங்களையும் செய்யும். சும்மா போகிற போக்கில் ஒரு சின்ன உதாரணம். பிரித்தானியப் பாராளுமன்றத் தேர்தலில் சுமார் 45 வீத வாக்குகளைப் பெற்ற ரொனி பிளேயர் பிரதம மந்திரி ஆகிறார். ஆனால் பாலஸ்தீனத்தில் 90 வீதத்திற்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்ற ஹமாஸ் அமைப்பினரை ஆட்சி செய்ய ஜனநாயத்தின் பெயரால் இந்த ஏகாதிபத்தியங்கள் மறுத்து நிற்கின்றன.

ஏன் அதிக தூரம் போவான்? நமது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 90 வீதத்திற்கு மேலான வாக்குகளைப் பெற்றிருக்கிறது ஆயினும், அதன் குரலை யாரும் செவிமடுக்கிறார்களா? இப்படி நெஞ்சை வருத்துகிற உதாரணங்கள் நிறைய வற்றை எம்மால் அடுக்க முடியும்.

இந்தியா, பிரித்தானியா, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா என்று எல்லா நாடுகளும் எங்கள் மீது தடையை விதித்து விட்டன. ஜேர்மன், பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றியம்தான் தடையைப் போடவில்லை என்றிருந்தது. அதுவும் போட்டாகி விட்டது. இனி என்ன மானுட விரோதிகள் அனைவருக்கும் மகிழ்வுதான்.

இந்த ஏகாதிபத்தியங்களுக்கு நாம் என்ன செய்தோம்? இந்த நாடுகளில் வாழ்வில் என்ன இடையூறு விளைவித்தோம்? எந்த விதமாக இந்த நாடுகளுக்கு நாம் குழப்பம் விளைவித்தோம்? சொல்லுங்கள்.

நம் பாட்டைப் பார்த்தபடி நாம் இருந்தோமே! நமக்கு ஆயிரமாயிரம் துக்கங்கள் வந்து சேர்ந்தன. அவற்றை நம் முதுகில் சுமந்தபடி நாம் திரிந்தோம். இந்தச் சுமைகளை இறக்கவோ பாரம் குறைக்கவோ இந்த ஏகாதிபத்திய நாடுகளிடம் நாம் எப்போதாவது கையேந்தினோமா? ஏதும் ஓர் சிறு உதவியாகிலும கேட்டோமா?

எமக்கு வந்த அத்தனை கொடுமைகளையும் நாமே எதிர்கொண்டோம். முகம் திருப்பவில்லை, மனம் சலிக்கவில்லை, எங்கள் நிலத்தில், எங்கள் பலத்தில், எங்கள் கால்களில் நாம் தங்கி நின்றோம்.

இன்னொருவர் முதுகில் ஏறவோ, இன்னொரு வர் கால்களால் நடக்கவோ, இன்னொருவர் பலத்தில் தங்கி நிற்கவோ நாம் ஒடுக்கப் படவில்லை. தலைவர் அப்படி நம் மக்களை பழக்கவுமில்லை.

இப்போது எம்மேல் தடைபோடுகிறாய். தடை போட நீ யார்? அல்லைப்பிட்டியில் நடந்த அவலம் கண்ட நேரத்திலும் எம் மீது தடைபோடுகிறாய் என்றால் இந்தத் தடைக்கு நாம் எள்ளளவும் மரியாதை செலுத்தோம். இந்தத் தடையை தகர்த்தெறியத்தான் நாம் உன்னுவோம்.

நான்கு வயதுச் சிறுவனும் நான்கு மாதக் குழந்தையும் அவர்களது தாயும் தந்தையும் ஒன்றாய்க் கொல்லப்பட்ட அவலம் கூட இரக்கம் தரவில்லையெனில், சரி பரவாயில்லை. அப்படித் தான் ஏகாதிபத்தியம் இருக்கும். ஆனால் இனி ஒன்றும் கதைக்க ஒரு சொட்டும் உரிமை கிடையாது.

நல்லது நண்பர்களே நாம் எதிர்கொள்வோம். ஆயிரம் தடை வரினும் அத்தனையையும் எதிர் கொள்வோம். நாம் இரும்பு என்று இவர்களுக்கு எடுத்துச் சொல்வோம். நாம் உருக்கு என்று உலகுக்கு எடுத்துக் காட்டுவோம். நாம் சும்மா ஆனவர் அல்லர், சோற்றுக்காகத்தான் வாழ்பவர் அல்லர்.

வீறு கொண்டவர் நாம், வேங்கை போல் எழுவோம். அமுக்கு, அமுக்கு. இன்னும் சற்றே அதிகம் அமுக்கு. அப்பொழுதான் அழுத்தம் அதிகரிக்கும். வெடிப்பு நிகழும். அதுதான் வேண்டும்.

இதுதான் காலம். இதுதான் நேரம். இன்னும் நாம் எங்கள் கைகளை, எல்லோரினதும் கைகளை இறுகப் பற்றுவோம். ஒன்றாய் எழுவோம். உறுதியாய் எழுவோம். ஓர்மமாய் எழுவோம்.

வலியோர் சிலர் எளியோர் தமை
வதையே புரிகுவதா ?
உதவாதினி ஒரு தாமதம்
உடனே விழி தமிழா.

LETTERS TO THE EDITOR

Fact finding!

"The following correspondence sent by our regular commentator Sachi Sri Kantha, to the Sunday Times (Colombo) had gone unpublished. We felt that this short communication is of relevance to the readers."

The Editor,
Sunday Times
Colombo.

Dear Sir:

On the Eye fluid analysis of Suicide Bomber

I read with interest the news report of Marisa de Silva with the caption, 'Suicide bomber's eye fluid to be tested in reputed overseas laboratory' [Sunday Times, May 7]. It has been announced that "In a final attempt to determine whether the female suicide bomber who targeted the Army Chief was in fact pregnant", a collected sample of her eye fluid will be used in analysis. Any analytical scientist interested in deriving accurate results from conducted tests cannot violate the cardinal scientific principle of testing a control sample identically in the analysis. In this context, I'd like to know whether any information is available on the following two vital details.

First, is a proper control sample of eye fluid - that of a young, non-pregnant Sri Lankan woman who had died in an accident on or around April 25th - is available to the Judicial Medical Officer's office?

Secondly, can the authorities reveal to the public the time lapse between the death of woman suicide bomber and the surgical extraction of eyeball carried out by the medical officers? Related to this, can it be assured that the surgical extraction of eyeball of the control sample [assuming if one is available now] also followed the near identical time lapse following death?

If these two details are ignored, the outcome of analysis of suicide bomber's eye fluid would be nothing but dubious.

Sincerely,

Sachi Sri Kantha

May 9, 2006.

• • •

Massacre of the innocents

The recent brutal massacres at Kayts were about the most despicable acts of the past two decades of war.

The incident where several members of a family were gunned down in their sleep occurred, close to a strong navy camp and in view of reported, prior incidents it is most difficult to accept the navy and EPDP claim, that they were not involved and that outsiders entered this heavily guarded area at night to carry out a senseless and dastardly act. The perpetrators deserve the worst form of condemnation.

According to reports, the family killed were said to be Tiger supporters. Even if this was so, did it warrant the killing of four-month-old and-four-year-old children and women under any circumstances?

What sort of brutes in human form carried out this horrific act? The Navy and EPDP stand indicted in public opinion. Brutal and senseless killings of this sort only antagonise the general populace and cause much ill-feeling and hatred. Plans of revenge and retaliation must already be made.

Is this the new war chinthayana indicating how the war is going to be fought?

We stand condemned internationally and such animalistic actions cause irreparable damage to our image abroad.

All this apart, there is a natural law of retribution, which the perpetrators who carried out the vile deed, those who authorised it, and going higher, those who condoned the despicable acts, will feel the effects thereof. They and the members of their families are bound to suffer retribution which is sure, though it may be slow in coming.

God save Sri Lanka

A.A.B
Attidiya

(Courtesy-The Sunday Leader)

• • •

தமிழர் பிரச்சினைக்கு மகிந்தவின் தீர்வு.

ஆதாரம்:
D.B.S.Jayaraj
(www.transcurrent.com இல்)

இலங்கைச் சிறுபான்மையினரின் பிரச்சினைக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவினால் தீர்வுகாண முடியாமல் இருப்பதற்கு அவர் சார்ந்திருக்கும் இனத்துவேசக் கட்சிகளான JVP, JHU, PNU ஆகிய அரசியல் கட்சிகளே காரணம் என்ற ஒரு கருத்தும் அதைத் தீர்ப்பதற்குத் தேவையான திட்டங்களோ தெளிவான கொள்கைகளோ ஜனாதிபதியிடம் கிடையாது என்ற கருத்தும் நிலவி வந்தது.

இப்போது பதவியேற்று 6 மாத காலங்கள் சென்ற நிலையில் மகிந்த ராஜபக்சவிடம் தேசியப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு திட்ட வட்டமான கொள்கைகளும் அவற்றைக் கொண்டு நடாத்த ராஜதந்திர உத்திகளும் உள்ளன என்பது புலனாகிறது. அது சர்வதேச நாடுகளின் ஆதரவை இலங்கை அரசாங்கத்துக்குப் பெறல், அவ் ஆதரவுடன் புலிகளுக்கெதிரான போரைத் தொடங்கி அவர்களை நிர்மூலமாக்குதல் என்பதே.

இவ்விரண்டு நோக்கங்களுமே மகிந்த ராஜபக்சவின் தேசியப் பிரச்சினையின் தீர்வுக்கான திட்டங்கள்.

ஆனால் இவரின் இத்திட்டங்கள் வெற்றி பெறத் தடையாக இருக்கக் கூடிய காரணிகள் இருக்கின்றன.

> சர்வதேச நாடுகளின் ஆதரவை இலங்கை அரசாங்கத்துக்குப் பெறல், அவ் ஆதரவுடன் புலிகளுக்கெதிரான போரைத் தொடங்கி அவர்களை நிர்மூலமாக்குதல்

இவரை, இவரது திட்டத்திலே ஒளிந்திருக்கும் ஆபத்தை உணர்ந்து அதை தடுக்கக் கூடிய சர்வ தேச சமூகம் ஒரு காரணி. இரண்டாவது காரணி விடுதலைப் புலிகளும் அதன் ஆதரவாளர் களுமான தமிழ்ப் பொதுமக்களுமாகும்.

சிலவேளைகளில் சிறுபான்மையினரின் அபி லாசைகளை அடக்கி அவர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக ஆக்கும் இத்திட்டத்திற்கு தடையாக விடுதலைப் புலிகள் மாத்திரமே இருக்கக் கூடும். அப்படியான ஒருநிலை உருவாகும் சந்தர்ப்பத்தில் பெரும்பான்மையான தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளை ஆதரிப்பர். அரசாங்கத்துடன் சேர்ந்து கொண்டு தமிழர் நலனில் அக்கறை காட்டாத ஒரு சில தமிழ்க் குழுக்களைத் தவிர்ந்த மற்றை யோர் யாவரும் விடுதலைப் புலிகளின் பின்னால் அணிவகுத்து நிற்பர்.

50 ஆண்டுகளுக்கு முன் SWRD பண்டார நாயக்க எதிர் கொண்ட நிலைமை போன்றதே தற்போது மகிந்த ராஜபக்ச எதிர்கொள்ளும் நிலை என்று பலர் கருதுகிறார்கள். ஆனால் உண்மையில் அன்று இருந்த நிலைமையும் இன்று இருக்கும் நிலைமையும் முற்றிலும் வேறுபட்டதாகும்.

பண்டாரநாயக்க அதிகாரத்தைக் கைப்பற்று வதற்காக தமிழர் எதிர்ப்புச் சக்திகளை தூண்டி விட்டு அச்சக்திகளினாலேயே அழிக்கப்பட்டு இருந்தாலும், தனிப்பட்ட முறையில் அவர் ஒரு மேற்கு நாட்டில் கல்வி கற்று எல்லோரையும் நீதியுடனும், நியாயத்துடனும் கையாளும் ஒரு பரந்த நோக்கைக் கொண்டிருந்தவர்.

ஆனால் மகிந்த ராஜபக்சவோ தென்னிலங்கை மண்ணின் மைந்தன். தாம் துட்டகைமுனு, றோகண ஆகிய சிங்கள சரித்திர நாயகர்களின் வழித் தோன்றல் என்று நம்புபவர். நாட்டை எதிரிகளிட மிருந்து காப்பாற்றுவது தமது தார்மீகக் கடமை யாகக் கருதுபவர். சிங்கள பௌத்த மேலாண் மையை முழுதாக நம்புபவர். இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கே சொந்தம் என்றும், சிறுபான் மையினர் இவர்களின் தயவிலும் தாட்சண்யத் திலும் மாத்திரமே இந்நாட்டில் குடிகொள்ள அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்றும் நம்பு பவர். இப்படி வாழ அனுமதிக்கப்பட்டவர்கள், சில இடங்களில் செறிந்து வாழ்கிறார்கள் என்ற காரணத்திற்காக பாரம்பரிய வாழ்விடங்கள் என்று உரிமை கொண்டாடுவதையும், வேறு எவ்வித உரிமைகள் உள்ளவர்கள் என்பதையும் முற்றாக மறுப்பவர். இத்தகைய் ஒருவர்தான் மகிந்த ராஜபக்ச என அழைக்கப்படும் மகேந்திரா பேர்சி ராஜபக்ச ஆவார்.

இவர் சிறுபான்மையினரை அடக்கி அவர்களை இரண்டாந்தரப் பிரஜைகளாக வைத்திருக்க வேண்டும் என்பதில் தளராத கொள்கையுடையவர். இவருடைய கடந்தகால அரசியல் வாழ்க்கையை நோக்கில் இந்த உண்மை விளங்கும்.

அதிகாரப் பரவலாக்கல் என்றும், சமஷ்டி அரசியல் என்றும் உதட்டளவில் பேசிக்கொள்ளும் ஜனாதிபதி ராஜபக்சதான் 2000ம் ஆண்டு பிரேரிக்கப்பட்ட அரசியல் பரவலாக்கல் சட்ட மூலத்தை (Devolution Bill) எதிர்த்த சிங்கள பௌத்தவாதிகளுடன் சேர்ந்து தானும் அதை எதிர்த்தவர். தமிழர்களுக்கெதிராக உண்ணா விரதமிருந்த ஓமல்பே சோபித தேரோவை தலதா மாளிகைக்குச் சென்று சந்தித்து மரியாதை செலுத்தியவர். சுனாமியின் பின் P-TOMS க்கு எதிராக JVP யினரைத் தூண்டிவிட்டவர். லக்ஷ்மன் கதிர்காமர் பிரதம மந்திரியாக வரும் சந்தர்ப்பத்தை, அவர் தமிழன் என்ற காரணத்தைக் காட்டி தட்டிப் பறித்தவர்.

எனவே மகிந்த ராஜபக்ச தமிழ் மக்களுக்கு நீதியான ஒரு தீர்ப்பைக் கொடுக்க முடியாமல் இருப்பதற்கு அவர் தற்போது மாட்டிக் கொண்டி ருக்கும் இனத்துவேஷ அரசியல் கட்சிகளென்றால் அதை ஏற்றுக் கொள்ள முடியாது. ஏனெனில் இவ் இனத் துவேஷக் கட்சிகளின் கொள்கைகளும் இவரது நோக்கங்களும் வேறுபட்டவையல்ல.

இதுவரை மகிந்த ராஜபக்ச எப்படிப்பட்ட மனிதன் என்பதைப் பார்த்தோம். இனி அவரது திட்டங்கள் என்ன என்பதைப் பார்ப்போம்.

இவரது அரசியல் ஆசைகளுக்குக் குறுக்கே நிற்பதில் முக்கியமானவர்கள் விடுதலைப் புலிகள் என்பதை ராஜபக்ச நன்கறிவார். அதனாலேயே இடைக்கால நடவடிக்கையாக விடுதலைப் புலிகளை சர்வதேச அரங்கில் ஓரங்கட்டி அவர்களைப் பலவீனப்படுத்தி வருகிறார், நீண்டகால நடவடிக்கையாக விடுதலைப் புலிகளுக்கெதிரான போரைத் துவக்கி அவர்களை அழித்தொழிக்க விரும்புகிறார். இதனை நிறை வேற்றும் நோக்கிலேயே அவரது தற்போதைய நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

> மகிந்த ராஜபக்சவோ தென்னிலங்கை மண்ணின் மைந்தன். தாம் துட்டகைமுனு, றோகண ஆகிய சிங்கள சரித்திர நாயகர்களின் வழித்தோன்றல் என்று நம்புபவர். நாட்டை எதிரிகளிடமிருந்து காப்பாற்றுவது தமது தார்மீகக் கடமையாகக் கருதுபவர்

இதற்கு ஏதுவாக சர்வதேச நாடுகளின் ஆதரவை இலங்கை அரசாங்கத்துக்குப் பெறல், அவ்வாதரவுடன் புலிகளுக்கெதிரான போரைத் தொடங்கி அவர்களை நிர்மூலமாக்குதல் இவ்விரண்டு நோக்கங்களுமே மகிந்த ராஜ பக்சவின் தேசியப் பிரச்சினையின் தீர்வுக்கான திட்டங்கள். சர்வதேச நாடுகளைத் திருப்திப்படுத் துதல் அல்லது அவர்களின் கண்களில் மண்ணைத் தூவுதல் இத்திட்டங்களில் ஒன்றாகும்.

அதனாலேயே, சர்வதேச நாடுகளின் திருப்தியை பெறும் விஷயத்தில் சமாதானம், பேச்சுவார்த்தை, அரசியல் பரவலாக்கம், ஜனநாயகம், மனித உரிமை, சிறுபான்மையினர் உரிமை ஆகிய வார்த்தைகளை மந்திரம் போல் திரும்பத் திரும்ப உச்சரித்துக் கொண்டு செயலளவில் ஒன்றும் செய்யாதிருக்கிறார்.

இதற்கு முக்கிய உதாரணம். ஜெனிவாவில் நடந்த பேச்சுவார்த்தைகளும், அதன் பின், எதுவித செயற்பாட்டையும் முன்னெடுக்காமையாகும். தாம் சமாதானம் விரும்பி என்றும், வளைந்து கொடுக்கும் தன்மையுள்ளவர் என்றும் உலக நாடுகளின் வேண்டுகோள்களுக்கு சம்மதிப்பவர் என்றும் காட்டிக் கொண்டு செயற்பாட்டில் அதற்கு மாறாகவே செயற்படுகிறார் ராஜபக்ச.

இதன் எதிரொலியாக உயர்பாதுகாப்பு வலயங் கள் தொடர்ந்தும் பேணப்பட்டு வருகின்றன. தமிழ் அரசியல்வாதிகள் கொலை செய்யப்படுகின்றனர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான ஆயுதக் குழுக் களுக்கு தஞ்சமும் ஆதரவும் அளித்துவருகின்றார். அத்துடன் விடுதலைப் புலிகளை உலக அரங்கில் தனிமைப்படுத்தும் நோக்கத்துடன் அவர்களுக்கு தீவிரவாதிகள் என்ற பட்டத்தைச் சூட்டி புலிகளை தடை செய்ய முற்படுகின்றார்.

> முழுப் போருக்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வரும் அதே நேரம் உள்நாட்டில் ஒரு மறைமுகப் போரை அரசு நடாத்திக் கொண்டும் வருகிறது

இவ்விடயத்தில் இலங்கை அரசு விவேகமாகச் செயற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளை பயங்கர வாதிகளாகதடை செய்யவேண்டுவதற்கு அவர்கள் கூறிய காரணம், புலிகள் மீது கொண்டு வரப்படும் தடை அவர்களை பேச்சுவார்த்தை மேசைக்குச் செல்வதற்கு நிர்ப்பந்திக்கும் என்பதாகும்.

இந்த நிலைமைகளைப் பயன்படுத்தி ராஜபக்ச ஒரு முழுப் போருக்கு சிங்கள மக்களை ஆயத்தப் படுத்தி வருகிறார். போர் உபகரணங்களின் பட்டி யல் பிற நாடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. பிற நாடுகளிலுள்ள ராஜாங்க அலுவலகங்கள் அவ்வவ் நாடுகளின் ஆதரவைத் திரட்டுவதில் ஆர்வமாக உள்ளன. சில நாடுகளிடையே உள்ள பேதங் களை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்த முயற்சி கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முழுப் போருக்கான ஆயத்தங்கள் மேற் கொள்ளப்பட்டு வரும் அதே நேரம் உள்நாட்டில் ஒரு மறைமுகப் போரை அரசு நடாத்திக் கொண்டும் வருகிறது. நடைபெறுகிற சில தாக்குதல் சம்பவங்களை விடுதலைப் புலிகளின் மீது போட்டு அதற்கு எதிரொலியாக தாம் நடவடிக்கை எடுப்பதாக உலக அரங்கில் காட்டிக் கொண்டு, ஒரு பாவமும் அறியாத தமிழ்ப் பொது மக்கள் மீது காட்டுமிராண்டித் தனமாக குண்டு மழை பெய்து வருகிறார்.

அத்துடன் விடுதலைப் புலிகளைத் சீண்டும் விதத்தில் விடுதலைப் புலிகளின் போராளிகளை யும் ஆதரவாளர்களையும் தமது கைக்கூலி களைக் கொண்டு கொன்று வருகிறார். இவற்றி ற்கு உதாரணமாக விக்னேஸ்வரனின் கொலையை யும் கேணல் றமணனின் கொலையையும் கூறலாம். மேலும் சாதாரண மக்கள் மீது அரச படைகளின் கொலைகளும், கொடூரமும், புத்தூர், நெல்லியடி, அல்லைப்பிட்டி போன்ற இடங்களில் நடந்தேறி யுள்ளன.

இவைதான் ராஜபக்ச தமிழர்கள் விடயத்தில் கைப்பிடிக்கப் போகும் உத்திகளாகும்.

மகிந்த ராஜபக்ச தனது இலட்சியங்களை அடைவாரா? அதன் பொருட்டு போரை ஆரம்பித்து விடுதலைப் புலிகளை வென்று இலங்கையில் ஒரு சிங்கள பௌத்த மேலாண்மையை நிலை நாட்டுவாரா?

இக் கேள்விகளுக்கான பதில் இனி விடுதலைப் புலிகள் முன்னெடுக்கப் போகும் இராணுவ, அரசியல் தந்திரோபாயங்களிலேயே தங்கியுள்ளது.

ஆனால் ஒன்று மட்டும் உண்மை. மீண்டும் போர் தோன்றினால் அது ஓர் பாரதூரமான அழிவுக்கே நாட்டை இட்டுச் செல்லும்.

(தமிழில் - இராகு)

சத்தியம் செத்ததில்லை

சாந்தமாய்ப் படுத்ததில்லை

நிச்சயம் நெட்டுயிர்க்கும்

- அதன்

நிகழ்வுகள் நிலைத்து

நிற்கும்

ஒரு பேப்பர் ORU PAPER

நாளைய நாட்டுத்திறன்

சிறுவர் பாடல் போட்டி நிகழ்ச்சி

நீங்கள் ஒரு பாடகரா?

8–15 வயதிற்கு இடைப்பட்டவரா? உங்களது திறமையை வெளிப்படுத்த இதோ ஒரு சந்தர்ப்பம்!

'ஒரு பேப்பர்' மூன்றாம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதைக் கொண்டாடவும், இலைமறை காயாய் இருக்கும் இளம் கலைஞர்களை ஊக்குவிக்கவும் இதோ ஒரு பாடல் போட்டி!

போட்டியில் பங்கு கொள்ள நீங்கள் பாடி பதிவு செய்த ஒலிப்பேழை ஒலிநாடா அல்லது MP3 file ஒன்றுடன் பாட விரும்பும் 5 பாடல்களைக் குறிப்பிட்டு உங்களது பெயர், பிறந்த திகதி, விலாசம், தொலைபேசி இலக்கம் ஆகியவற்றுடன் June 30க்கு முதல் எமக்கு அனுப்பி வையுங்கள்.

கடைசிப் போட்டி பார்வையாளர்கள் முன்னிலையில் ஆண்கள் ஒரு பிரிவாகவும், பெண்கள் ஒரு பிரிவாகவும் போட்டி நடைபெறும்.

விபரங்களுக்கு:
Tel: 020 8640 4604
020 8286 9327
e-mail: info@orupaper.com

விலாசம்:
Oru Paper,
45B Crusoe Road,
Mitcham, Surrey,
CR4 3LJ

INDO LANKA SEAFOODS

Billingsgate Market

நேரடியாக இலங்கை இந்தியாவில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட உடன் மீன் வகைகள்
கடல் உணவு வகைகள் மரக்கறி வகைகள் பழங்கள்
மொத்தமாகவும் சில்லறைக்கும் பெற்றுக் கொள்ளலாம்

Fresh Fish
Seafood
Vegetable & Fruits
from Sri Lanka & India
Wholesale and Retail

K K S UK LIMITED
F4 & 3 Billingsgate Market
Trafalgar Way
London E14 5ST



A S FOOD & WINE
59 Kingston Road
South Wimbeldon
London SW19 1JN

Tel: 020 8542 8027 | Fax: 020 8542 1648 | Mob: 077 2361 4183

Email: bh_karan@hotmail.com

அமெரிக்காவின் ஏகாதியத்தியக் கனவும் ஈழப் போராட்டமும்

சுக்கிராச்சாரியார்
(ஒரு பேப்பருக்காக)

இன்றைய காலகட்டம் தமிழ்த் தேசியத்தின் விடுதலைப் போராட்டத்தினை ஒரு இறுக்கமான நிலைமைக்குள் தள்ளியுள்ளது. சுதந்திரத்துக்காக அவாவுறும் இனத்தின் அபிலாஷைகளை கருத்தில் எடுக்காத எந்தத் தீர்வுத் திட்டமும் அப் பிராந்தியத்தில் அமைதியைக் கொண்டு வர முடியாது.

தென் சூடானிய மக்களின் விடுதலைப் போராட்டமும் பலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டமும் இதற்கு நல்லதொரு உதாரணமாகும்.

இதே உதாரணம் மீண்டுமொரு முறை புதுப்பிக்கப்படும் வகையிலேயே இலங்கையின் இனப்பிரச்சனையில் சர்வதேசத்தின் அணுகு முறை தொடர்கின்றது. பிரச்சனையின் தீவிரத்தைப் புரிந்து கொள்ளாத வகையில் குறை மதிப்பீட்டுடனும் அலட்சியப் போக்குடனும் எடுக்கப் படும் நடவடிக்கைகள் இவ் வாறான பாரிய தவறினை மீண்டும் அரங்கேற்றப் போகின்றது.

சர்வதேச நாடுகள் என்ற கோதாவில் ஈழப்பிரச்சனையில் தலையிடும் நாடுகளின் தலமைப் பொறுப்பை வலிந்து ஏற்றுக் கொண்டிருக்கின்ற அமெரிக்கா தன் ஏக ஏகாதிபத்தியக் கனவுகளை வலிந்து திணித்து பிராந்தியங்களின் அரசியல் பலத்தினைத் தீர்மானிக்கும் முனைப்புடன் செயல் பட்டுக் கொண்டிருக்கின்றது.

பயங்கர வாதத்திற்கு எதிரான போர் என்ற அமெரிக்காவிற்கு அட்சய பாத்திரமாக அனைத்து அனுகூலங்களையும் வழங்கிக் கொண்டிருக்கும் ஒரு வழிப்பாதையில் பயணிக்கும் வரை இந்த அவலம் தொடரத் தான் போகின்றது.

இன்று அமெரிக்காவின் அதிரடி ஆட்டங்களுக்கு முண்டுகொடுக்கும் சர்வதேச நாடுகள் வரலாற்றில் தலை குனிந்து நிற்கப் போகின்ற காலம் ஒன்று வரத்தான் போகின்றது.

ஈழப் போராட்டத்தின் தலைமைச் சக்திகளான விடுதலைப் புலிகளைத் தடை செய்த அமெரிக்கா தன் நட்பு நாடுகளையும் விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடைகளைக் கொண்டு வர நிர்ப்பந்தித்து அதில் வெற்றியும் கண்டிருக்கின்றது. அந்த வரிசையில் ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் தன் நட்பு நாடுகளான பிரித்தானியா, ஒஸ்ரியா போன்ற நாடுகளின் மூலம் தன் எண்ணத்தை ஈடேற்ற முயற்சித்துக் கொண்டிருக்கின்றது.

அமெரிக்காவின் அழுத்தத்துக்கு அடிபணியப் போகின்ற ஐரோப்பிய ஒன்றியம் என்ன காரணத்திற்காக உருவாக்கப்பட்டதோ அக் கொள்கையில் இருந்து விலகி அமெரிக்காவின் எடுபிடியாகவே செயற்படப் போகின்றது. தன்னிடம் இருந்து கைநழுவிப் போன உலகின் பொருளாதார அரசியல் நடவடிக்கைகளை தீர்மானிக்கும் முதன்மைச் சக்தி என்னும் நிலையை மீண்டும் அமெரிக்காவிடம் இருந்து மீட்டெடுக்கும் ஐரோப்பாவின் கனவு ஈடேறாமலேயே போகப் போகின்றது. அமெரிக்காவின் அபிலாஷைகளுக்கு எவ் வளவு தூரம் ஐரோப்பிய ஒன்றியம் பலியாகியுள்ளது என்பதை ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்றம் வெளியிட்ட அறிக்கையிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

> இன்று அமெரிக்காவின் அதிரடி ஆட்டங்களுக்கு முண்டு கொடுக்கும் சர்வதேச நாடுகள் வரலாற்றில் தலை குனிந்து நிற்கப் போகின்ற காலம் ஒன்று வரத்தான் போகின்றது.

"இலங்கைத் தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகள் அல்லர். அரசியல் பன்மைத்துவமும் மாற்று ஜனநாயகக் குரல்களையும் வடக்கு கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் அனுமதிக்க வேண்டும். அப்போது தான் அனைத்து இன மக்களின் நலன்களும் பாதுகாக்கப்படும்.'

'ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் வாழும் தமிழர்களிடத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளால் மேற் கொள்ளப்படுகின்ற கட்டாய அறவிடலை ஒவ்வொரு உறுப்பு நாடுகளும் தங்களால் இயன்றளவிற்கு தடை செய்ய வேண்டும்'

'கடல் சார் நடவடிக்கைகள் மூலம் தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை பாரிய அளவில் மீறியுள்ளனர். குறிப்பாக மே 11 ஆம் திகதி கடலில் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளதில் பலர் கொல்லப் பட்டுள்ளனர். கண்காணிப்புக் குழுவினரும் பேராபத்திற் குள்ளாகியுள்ளனர்'

இவ்வகையான தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் தமிழ்த்தேசியப் போராட்டத்திற்கும் எதிரானதும் 30 ஆண்டுகால இனவிடுதலைப் போராட்டத்திற்கு குந்தகம் விளைவிக்கும் பல சரத்துகள் அமெரிக்காவின் தூண்டுதலில் அவ்வறிக்கையில் இணைக்கப்பட்டுள்ளது.

இந்துசமுத்திரப்பிராந்தியத்தின் நடவடிக்கைகளை எதிர்காலத்தில் முன்னெடுக்கும் இராணுவ தளப்பிரதேசமாக இலங்கையைக் கொண்டு வரும் அமெரிக்காவின் நடவடிக்கைகளில் அமெரிக்கா வெகுவாக முன்னேறியிருக்கின்றது. இதுவரை அமெரிக்காவிற்குப் பிடி கொடாமல் நழுவி வந்த இந்தியா, அமெரிக்காவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான 'அணு ஆயுத பரிமாற்றுத் திட்டத்தின் மூலம்' வகையாகச் சிக்கிக்கொண்டுள்ளது.

அது எவ்வளவு தூரம் என்றால் இலங்கைப் பிரச்சனையில் இந்தியாவின் நடவடிக்கைகளைக் கவனித்தே காய் நகர்த்தி வந்த அமெரிக்கா இன்று இந்தியாவையும் தனது நடவடிக்கைகளுக்கு துணை போக வலியுறுத்தும் நிலை வரை வந்துள்ளது. அண்மையில் 'இலங்கைப் பிரச்சனையில் எத்தகைய பங்காற்றுவது என்பதை முடிவெடுப் பது முழுக்க முழுக்க இந்தியாவைப் பொறுத்தது. இந்தியா சர்வதேச சமூகத்துடன் எந்தளவு இணைந்து செயற்படப் போகின்றது என்று இறுதியும் உறுதியுமான முடிவை இந்தியா தான் எடுக்க வேண்டும்' என்று தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்காவின் அரச பிரதிச் செயலர் ரிச்சேட் பௌச்சர் கூறியிருக்கின்றார். இது தொடர்பாக இந்திய அரசுடன் பேச்சு வார்த்தைகளில் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் கூறியிருக்கின்றார்.

இதிலிருந்து அமெரிக்கா இந்தியாவிற்கு அளிக்கும் செய்தி முடிவானதும் இறுக்கமானதுமாகும். அமெரிக்காவின் அபிலாஷைகளுக்கு எதிராக இந்தியா எடுக்கக் கூடிய முடிவுகளை அமெரிக்கா சகித்துக் கொண்டிராது என்பதை தெளிவாக சுட்டிக்காட்டியுள்ளது. இதையும் மீறி இந்தியா ஏதாவது செய்ய முற்பட்டால் சர்வதேச பயங்கர வாதத்திற்கு எதிரான அணியில் இருந்து இந்தியாவை விலக்கி வைப்பதுடன் இந்தியாவின் அணு ஆயுத ஆராய்சிகளுக்கு முட்டுக்கட்டைகளைப் போடுவதுடன் பாகிஸ்தானைப் பின்னணியாகக் கொண்ட காஸ்மீரத் தீவிர வாதத்தைத் தூண்டி இந்தியாவின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலையும் ஏற்படுத்துவதற்கும் அமெரிக்கா பின்னிற்காது. இந்தியாவின் கையறு நிலையைப் புரிந்து கொண்டே இந்திய மார்க்சிஸ்ட் கட்சி இலங்கைப் பிரச்சனையில் ஆர்வம் காட்ட வெளிக்கிட்டிருப்பது அமெரிக்காவின் இலங்கைப் பிரசன்னத்தை எவ்வகையிலாக தடுத்து நிறுத்தி விட வேண்டுமென்ற ஆசையினாலேயே.

'ஐக்கிய இலங்கை என்னும் கட்டமைப்புக்குள் கூட்டாட்சி முறையில் உரிய அதிகாரப் பகிர்வின் மூலம் அமைதி வழித் தீர்வு காண வேண்டும்' என்று இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீரவைச் சந்தித்தபோது மார்க்சிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஸ் கரத் கூரியுள்ளார்.

மார்க்சிஸ்டுகள் புரிந்து கொண்ட அளவு கூட இலங்கை இனப்பிரச்சனையையும் அமெரிக்காவின் அக்கறையின் தாற்பரியத்தையும் இந்திய கொள்கை வகுப்பாளர்கள் புரிந்து கொள்ளவில்லை என்றே தோன்றுகின்றது. அமெரிக்காவின் இலங்கையிலாலான தலையீடு பற்றி இவர்கள் இதுவரை வாயையே திறக்கவில்லை. இலங்கைப் பிரச்சனை இன்னும் இந்தியாவின் கரங்களுக்குள்ளேயே இருக்கின்றது என்ற மனப்பான்மையில் இவர்கள் இருப்பார்களாயின் இந்திய மக்களின் முன்னால் தலை குனிய வேண்டிய காலம் ஒன்றிருக்கின்றது.

அதேவேளை விடுதலைப் புலிகளின் மீதும் அபரிமிதமான நெருக்கடிகளை ஏற்படுத்தி தனது எண்ணத்தை ஈடேற்ற அமெரிக்கா முயலும். அமெரிக்காவின் அண்மைக்கால நடவடிக்கைகள் அதனையே சுட்டிக் காட்டுகின்றது.

அதேவேளை சிங்கள அரசாங்கத்தின் மீதும் தனது அழுத்தத்தைப் பிரயோகிக்கின்றது. சிங்களத் தலைமைகளிடையே முரண்பாடுகளைத் தூண்டி விட்டு குறைந்த பட்ச தீர்வினைக் கூட இனப்பிரச்சனை தொடர்பாக எடுக்க முடியா கையறு நிலையில் சிங்களத் தலைமை இருப்பதைக் காரணம் காட்டி அமெரிக்கா தன் பிரசன்னத்தை ஞாயப் படுத்தப் போகின்றது. இதைப் புரிந்து கொள்ளா சுயநல அரசியல் மனப்பான்மையில் சிங்கள அரசியல் கட்சிகள் தமக்குள் முட்டி மோதிக் கொண்டிருக்கின்றன.

ஐக்கிய நாடுகள் அமைதிப் படையின் வருகையை தவிர்க்க முடியாது என்னும் வகையில் ஐ.தே.கட்சியின் ராஜித சேனரத்ன கருத்துக் கூறியிருக்கின்றார். அமெரிக்காவின் நெருக்கத்திற்குரிய ஐ.தே.கட்சியின் ஆரூடம் அமெரிக்காவின் அடுத்த கட்ட நடவடிக்கைக்கான அறிக்கையாகவே நாம் எடுத்துக் கொள்ள வேண்டும். ஐ.நாடுகள் ஸ்தாபனத்தின் பாதுகாப்புச் சபையில் எடுக்கப்படக் கூடிய இலங்கைக்குப் படை அனுப்புவதற்கான தீர்மானத்தை மீறி இலங்கை அரசாலும் எதனையும் செய்ய முடியாது என்பதை இங்கு கவனத்தில் எடுக்க வேண்டும். ஐ.நா வில் அங்கம் வகிக்கும் உறுப்பு நாடு ஒன்றின் இறைமையைப் பாதுகாக்க ஐக்கிய நாடுகள் அமைதிப் படை உதவி புரியும் என்ற சரத்தின் கீழ் அங்கத்துவ நாடான இலங்கையும் கட்டுப்படும். 'இலங்கையின் இறைமைக்கான ஆபத்து' என்னும் வகையில் அமெரிக்கா கொண்டு வரப் போகும் தீர்மானத்திற்கு அமெரிக்காவின் அடிப்பொடி நாடுகளான சர்வதேசம் நிச்சயம் ஆதரவளிக்கும்.

'இலங்கையில் முழு அளவிலான யுத்தம் ஒன்று ஏற்படாத வரையில் ஐ.நாடுகள் படையின் தேவை இலங்கையில் அவசியமல்ல' என்று அவுஸ்திரேய ஊடகம் ஒன்றிற்கு பேட்டியளித்த ஜப்பானின் சிறப்புத் தூதுவர் யசூசி அகாசி கூறியுள்ளார். ஆகவே இலங்கையில் முழு அளவிலான யுத்தம் ஒன்று ஏற்படும் போது ஐ.நா அமைதிபடையின் பிரசன்னம் இலங்கையில் இருக்கும் என்பதை அவர் நிச்சயப்படுத்தியுள்ளார்.

அமெரிக்காவின் நட்பு நாடான ஜப்பானின் கருத்து நிச்சயமாக அமெரிக்காவின் முடிவினையே பகிரங்கப் படுத்துகின்றது.

இதே வேளை தமது சுதந்திரத்திற்கான போராட்டத்தில் ஈடுபட்டிருக்கும் தமிழ் ஈழ மக்களின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கப் போகின்றது. ஏற்கனவே இந்திய அமைதி காக்கும் படைகளினை வரவேற்று தங்களின் விரல்களைச் சுட்டுக் கொண்ட அனுபவம் தமிழ் மக்களுக்கு இருக்கின்றது.

அதே நேரம் வலிந்து திணிக்கப்படப் போகின்ற ஐ.நா வின் அமைதிகாக்கும் படைகள் என்ற போர்வையில் வருகின்ற அமெரிக்காவின் அத்து மீறலை எவ்வாறு எதிர்கொள்ளப் போகின்றோம்.

உண்மையான ஜனநாயகச் சக்திகளினதும் நியாயமான ஒரு இனத்தின் போராட்டத்திற்கும் ஆதரவான சர்வதேசச் சக்திகளையும் வென்றெடுப்பதற்கான நடவடிக்கைகளில் விடுதலைப் புலிகளும் தமிழ் மக்களும் எவ்வளவு தூரம் வெற்றி பெறுகின்றார்கள் என்பதிலேயே இதற்கான விடை அடங்கியிருக்கின்றது.

FAMOUS INDIAN ASTROLOGER
Pandit. THULASIDAS now in England

Pandit Read your Palm

Horoscope	Education
Past Present	Business, Employment,
Future & Family,	Personal Problems,
Children, Love, Life, Work	House Vastu etc.,

(Remove the Black Magic Dhustha Graha Dosha Nivarana Puja)
Pandit can speak, (Hindi, Tamil, Telugu, Malayalam & Kannada)

இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள இவர் கைரேகை, ஜாதகம் ஆகியவற்றைக் கொண்டு துல்லியமாக தொழில், கல்வி, குடும்பம், குழந்தை பாக்கியம், காதல், வாழ்க்கை, வணிகம், குடும்பத் தகராறுகள், வாஸ்து சாஸ்திரம், மற்றும் உங்கள் பிரச்சினைகளைக் கூறுவதுடன் நடந்தவை, நடப்பவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைத் தெரியப்படுத்தி பரிகாரமும் கூறுகிறார்.

Please Contact: **Pandit Thulasidas**
40a, Highbury Road, Leicester LE4 6FT
Mobile: **07944253155**

கனடாவின் உரிமைக் குரல்

பொன். விவேகானந்தன்
(ஒரு பேப்பருக்காக)

உலக உருண்டையின் எல்லாக் கண்டங்களிலும் தமிழர்கள் ஒரே நாளில் கிளர்ந்தெழுந்த வரலாற்று நிகழ்வு எதிர்பார்த்ததற்கும் மேலாய் எல்லா நாடுகளிலும் நடந்து முடிந்திருக்கின்றது. புதுப்புலத் தமிழர் கூடியும், கூடி ஒலித்தும் பல செய்திகளை உலகுக்கும் தாயகத்திற்கும் சொல்லியிருக்கின்றனர்.

நடைபெற்ற நிகழ்வுகளில், இடையூறுகளையும், எதிர்பார்ப்புகளையும் அதிகமாய்க் கொண்டிருந்தவை கனடாவில் நடைபெற்ற உரிமைக்குரல் நிகழ்வுகளாகும்.

ஏப்பிரல் 8ம் நாள் கனடிய அரசு விடுதலைப் புலிகள்மீதானதடைசட்டபூர்வமாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கனடியத் தமிழரின் அரங்க நிகழ்ச்சிகள் பலவற்றிற்கு அனுமதி மறுக்கப்பட்டிருந்தது. சில இடங்களில் தேடுதல்களும் நடத்தப்பட்டன. கனடிய அரசின் இந்த அணுகுமுறை, கனடிய தமிழருக்கு சற்று குழப்பத்தை ஏற்படுத்திய புதிய அனுபவமாக இருந்தது.

தொடர்ந்து கனடியத் தமிழர் பேரவை முன்னெடுத்த ஒற்றுமை வாரம் எதிர்பார்த்த அளவுமக்களால் நிறையவில்லை. ஏழு நாட்கள் நிகழ்ந்த இந்த நிகழ்வுகள் உணர்வாளர் பலருக்கும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.

கனடியத் தமிழர் தாயகச் செயற்பாடுகளில் இருந்து பின்வாங்கத் தொடங்கி விட்டனரா? தடையும் தொடர்ந்த நிகழ்வுகளும் கனடிய எழுச்சியில் ஒரு வீழ்ச்சியை ஏற்படுத்தியிருக்கின்றதா?

இந்த வினா தாயகத் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றிலும் எதிரொலித்தது.

இந்நிலையிற்றான் உரிமைக்குரல் அறிவிப்பு வெளியானது.

நாளும் நேரமும் குறிக்கப்பட்டன.

திங்கட்கிழமை 29ம் நாள், ஒட்டாவாவிலும் ரொரான்ரோவிலும் காலையும் மாலையுமாய் இரு நிகழ்வுகள்.

மக்களுக்கு இச் செய்தியினை எடுத்துச் செல்ல ஊடகங்களுக்கும் பரப்புரையாளர்களுக்கும் இருந்த கால எல்லை நான்கு நாட்கள் மட்டுமே.

மக்களை ஒன்றிணைத்து ஓரிடத்தில் குவித்தாக வேண்டும்.

கனடியத் தமிழ் வானொலி வரிந்து கட்டிக் கொண்டு களமிறங்கியது. CMR. TVI போன்றவையும் வழக்கமான நிகழ்வுகளை மாற்றியமைத்து பரப்புரைகளைத் தொடங்கின.

செயற்பாட்டாளர்கள் பம்பரமாய்ச் சுழன்றனர்.

கனடிய மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு எழுச்சிப் புயல் மையம் கொள்ளத் தொடங்கியது. கனடியத் தமிழர் சில ஆயிரமேனும் திரள்வர் என்ற எண்ணம் வலுவடையத் தொடங்கியது.

முதல் நிகழ்வு திங்கள் காலை ஒட்டாவாவில்....

பணிக்குரிய நாள்... குறைந்த மக்கள் தொகையைக் கொண்ட இடம். ஒரு ஆயிரத்திற் குள்தான் வருகை எதிர்பார்க்கப்பட்டது.

மொன்றியலில் இருந்து மக்கள் அலையலையாய் வந்திறங்கினர். இரண்டாயிரம் பேர் திரண்டனர். மூன்று மணி நேரம் முழக்கமிட்டனர்.

முழக்கமிட்ட இடம் கனடிய அரசின் நாடாளுமன்ற முன்றல்.

ஏப்பில் 8ம் நாள் விடுதலைப்புலிகள் மீதான தடை பிறந்த இடம்.

'நீங்கள் இட்ட தடையால் உற்சாகமடைந்த பேரினவாதம் கொன்றொழித்த குழந்தைகள் படம் காணீர்.'

என்ற கை நிறைந்த பாதாதைகையோடு, உள்ளிருந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் கேட்கக் கூவினர் அம் மக்கள்.

இந்நிலையில் திங்கள் காலை ரொரான்றோவில் அதிர்ச்சி தரும் செய்தியொன்று வெளியானது.

> நெய் இருக்கும் வரை
> தீ தீயாது.
> உயிர் இருக்கும் வரை
> நெய் தீராது.

ரொரான்ரோ போக்குவரத்துச் சபை திங்கள் காலை முதல் வேலை நிறுத்தம்.

ரொரான்றோவில் மக்கள் பெருமளவில் கூடுவதற்காய் நம்பியிருந்த பொதுப் போக்கு வரத்தின் வேலைநிறுத்தம் திடீர் தாக்கத்தை ஏற்படுத்தியது.

துவண்டு போகவில்லை ஏற்பாட்டாளர்கள். கனடியத் தமிழ் வானொலி வணிகர்களை ஒன்றிணைத்து நாற்பதிற்கு மேற்பட்ட பேருந்துகளை ஏற்பாடு செய்தது. நூற்றுக்கணக்கான பற்றாளர்கள் தமது வாகனங்களைப் போக்கு வரத்திற்காய்ப் பயன்படுத்த முன்வந்தனர்.

ரொரான்றோ போக்கவரத்துச் சபையின் வேலை நிறுத்தம் என்ற தடையை வெற்றியின் படிக்கல்லாக்க முனைந்தனர் ரொரான்றோத் தமிழர்கள்.

தடைகளை மீறி எழுச்சி கொள்ளத் தொடங்கினர் எம்மவர்கள்.

பணிக்குரிய நாள், பொதுப் பேருந்துகள், நிலக்கீழ் மின் தொடர் வண்டிகள் ஓடவில்லை. வீதியெங்கும் நெருங்கிக் கிடந்த வாகனத் தொடர்கள்..

இவையெல்லாம் கடந்து, மாலை 5 மணிக்கு முன்பாகவேபத்தாயிரத்திற்குமேற்பட்ட தமிழர்கள் மெல்லாஸ்மன் சதுக்கத்தில் கூடினர். ஆறு கடந்து ஏழு மணியாகியது.

எங்கிருந்து வந்தது இத்தனை மனித வெள்ளம்? அரை இலட்சம் வருமா? இருக் கலாம் வந்து போனவர்களையும் சேர்த்து.

தடை கண்டு தயங்கிய கூட்டமா இது?

தடை எத்தனை வரினும், அத்தனையையும் தவிடு பொடியாக்கப் புறப்பட்ட கூட்டமல்லவா இது.

மெல்லாஸ்மென் சதுக்கத்தில் பெருக் கெடுத்து ஓடியது உணர்ச்சிக் காட்டாறு. தாய்க உறவுகளுக்காய்த் தடை தகர்த்து எழுவோம் என்ற பெரும் செய்தியை உரத்துச் கூவினர் கனடியத் தமிழர்.

நெஞ்சுக்குள் அக்னிக் குஞ்சாய் காத்து வரும் விடுதலைச் சுடர் எந்தப் புயலுக்கும் பூச்சாண்டிக்கும் அணைந்து விடாது என்பதை மீண்டும் ஒரு தடவை உலகிற்கு உணர்த்தினர்.

ஆம்.. ஐயத்திற்குள்ளாகி இருந்த கனடியத் தமிழர் ஒருமைப்பாடு கட்டுக் குலையவில்லை என்ற செய்தியை நம்பிக்கையூட்டும் வகையில் தாயகத்திற்கும், தடையிட்ட பின்னுமா தமிழர் படையெனத் திரள்வர் என்ற ஆச்சரியத்தை கனடிய அரசுக்கும், ஈழத் தேசியம் என்பது உலகத் தமிழினத்தையும் உள்ளடக்கியது என்பதை இந்த உலகத்திற்கும், வயிற்றில் புலியை அல்ல புளியைக் கரைப்பதாய் எதிரிகளுக்கும் ஆழமாயும் அழகாயும் விளக்க மளித்தது இந்த மக்கள் வெள்ளம்.

மிக உன்னதமாய் அமைந்துவிட்டன கனடாவிற்கான இரு நிகழ்வுகளும். யாரும் யாருக்கும் நன்றி சொல்ல வேண்டியதில்லை. காலம் இட்ட கட்டளையை கருத்தோடு காரியமாக்கியிருக்கின்றோம். இந்த நிறைவு நாளைய நாட்களுக்கான எம் தளத்தைப் பலப்படுத்தும்.

நெய் இருக்கும் வரை தீ தீயாது.

உயிர் இருக்கும் வரை நெய் தீராது.

இன்றில்லையென்றாலும் ஒருநாள் உலகம் இதன் பொருளை உணர்ந்து கொள்ளும்.

"கானக்குயில் 2006"

லண்டனில் 14வது ஆண்டாக வெற்றிகரமாக
மேடையேறுகிறது ஸ்ரீமதி யோகா தில்லைநாதனின்

"கானக்குயில் 2006"

ஐங்கரன் International ஆதரவில், July மாதம் 1ம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு Logan Hall, University of London, Russell Square, 20 Bedford way, London WC1 - ல் இடம் பெறுகின்றது.

பரிசுகள் வழங்கி கௌரவிப்போர்:
Tharany Jewellers, Wilson Financial Services Ltd,
Ambal Jewellers, Veekay Autos, Rathy Jewellers
A Lanka Travels, Mega Super stores, Rasam Gayathri silks

சித்திராலயா இசைக்குழுவினர்

• இசைவல்லுனர்களடங்கிய லண்டனில் பிரசித்தி பெற்ற "சித்திராலயா இசைக்குழுவினர்" பின்னணி இசை வழங்குகிறார்கள்

• London Melodies, Rainbow இசைக்குழு ஆகியவற்றின் பிரதான பாடகரும் பல தென்னிந்திய பின்னணிப் பாடகர்களுடன் இணைந்து லண்டனிலும் ஐரோப்பிய நாடுகளிலும் பாடிய 1வது ஆண்டின் கானக்குயில் ஸ்ரீபதி பாலசிங்கம் சிறப்புப் பாடகராகக் கலந்து கொள்கிறார்.

• உங்கள் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட
1994ம் ஆண்டின் கானக்குயில் தர்சினி சிவகுதன்
1995ம் ஆண்டின் கானக்குயில் பாரதி ரமேஸ்குமார்
1999ம் ஆண்டின் கானக்குயில் அபிரா ஜெயரட்னம்
2000ம ஆண்டின் கானக்குயில் ரீனா வின்சென்ட்
2001ம் ஆண்டின் கானக்குயில் அன்ரனி பொல்கோ
2005ம் ஆண்டின் கானக்குயில் இந்து பத்மபாஸ்கரன்
2005ம் ஆண்டின் ஆன் கானக்குயில் யூட் தர்சன்
ஆகியோர் கௌரவ பாடகர்களாக பாடுகின்றார்கள்.

• லண்டன் மாநகரில் சிறந்த ஒலியிளை வழங்கும் Surya Sound ஒலி அமைப்பு வழங்குகிறார்கள்,
• Video, Camera, Alcohol மண்டபத்தினுள்ளே கொண்டுவர பாதுகாப்பு உத்தியோகத்தர் அனுமதி வழங்கமாட்டார்கள்.
• நிகழ்ச்சி தவறாமல் மாலை 6 மணிக்கு ஆரம்பமாகும் என்பதால் 5.45க்கு உங்களை உங்கள் ஆசனங்களில் காண விரும்புகிறோம்.

உங்கள் வாக்குகளால் 2006ம் ஆண்டிற்குரிய கானக்குயில்களை தெரிவு செய்ய July மாதம் 1ம் திகதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு முன்னதாக வாருங்கள்.

டிக்கெற் £10, £15 £5 (12 வயதிற்குட்பட்டவர்களுக்கு)

டிக்கெற் கிடைக்குமிடங்கள்
ஸ்ரீமதி யோகா தில்லைநாதன் 020 8390 5823 / 07956 133 528
Eastham - Rasam Gayathri Silks 020 8552 6060
Tooting - Ambal Jewellers 020 8672 9955
Wembley - Tharany Jewellers 020 8902 6777
Wembley - All in one Super Market, 537, High Road Wembley 020 8902 4590

மட்டைக் கிளப்பானின்....

அலசுவோம் -11

போன கிழமை ஊருக்கு சும்மா சுகம் விசாரிப்பமெண்டு எடுத்த இடத்தில கனகாலத்துக்குப்புறகு என்ர வெள்ளாமையளப் பாத்த முல்லைக்காறன் ராசையாகப் குஞ்சப்புவோட கதைக்கிறதுக்கு ஒரு சந்துர்ப்பம் கிடைச்சது பாருங்கோ. அவர்ர முத்த ரெண்டு பொம்பிளப் புள்ளையளும் கலியாணங் கட்டிக் குடும்பமா இரிக்கிதுகள். கடைசன்தான் நம்மட புள்ளையளோட சேர்ந்து திரிஞ்சவன். என்னோட நல்ல விருப்பம். படுவாங்கரைப் பக்கத்தில இருந்து ஊருக்கு என்னவும் விசயமா வந்தா அந்த நாளையில என்னையும் ஒளிச்சொளிச்சு வந்து பார்த்துக் கதைச்சுப் போட்டுப் போறவன். சின்னவயதிலயே போய் இயக்கத்தோட சேந்திற்றான். புறகு நானும் இஞ்சால வந்திற்றன். அவனப் பற்றி விசாரிப்பமெண்டுதான் ராசையாக் குஞ்சப்புவையும் கூப்புட்டுக் கதைச்சனான்.

தம்பியிர பாடென்ன குஞ்சப்பு எண்டு கேக்க, அவன்போய் எவ்வளவு காலம் தம்பி எங்களுக்கு பிரேதத்தையும் பாக்கக் கிடைக்கல்ல ஆமிக்காரன் கொண்டு போய் பத்த வச்சிப் போட்டான் எண்டார். என்ன நடந்த எண்டு கேட்டன். இப்பிடித்தான் வந்து போன இடத்தில ஆமியிற்ற மாட்டிற்றான். புடிபட்டு அவனுகளிட்ட சித்திரைவதைப்பட்டுச் சாகிறதக் காட்டியும் நஞ்சக் குடிச்சி நாமளாப் போயிருவமெண்டு கழுத்தில கிடந்த கிறனையிற்ற விழுங்கிற்றான் எண்டு ரெலிபோனுக்குள்ளால அழுது குழறத் தொடங்கிற்றார்.

அறியாமையும் அப்பாவித்தனமும் நிறைந்த அந்தக் கிராமத்தானின் உள்ளக் குமுறலைக் கேட்கப் பெரும் பாவமாக இருந்தது. இப்படி எத்தனை எத்தனை விலை மதிக்க முடியாத உயிர்களைப் பறிகொடுத்துப் போட்டு நட்ந்ததைக் கூடச் சரியாக விவரிக்கத் தெரியாமல் அந்த அப்பாவிச் சீவனுகள் நடைப்பிணமாய் வாழ்ந்து கொண்டிருக்கிது.

> தவிர்க்கவே முடியாதவோர் பரிணாம நியமத்தினுள் தக்கன பிழைத்தலும் தகாதன அழிதலுமாய், வல்லவன் வாழ்வான் என்னும் கோட்பாட்டு நியதியுட்தான் இச் சுழலும் உலகம் இயங்குகின்றது

குலை குலையாக் குலுக்கி உதிர்த்துறானுகள். இந்தக் குஞ்சு குருமானுகளையெல்லாம் உதிர்த்தி என்னத்தக் காணப் போறானுகளோ தெரியாது.

தர்மம் ஒருபோதும் அழியிறல்லை எண்டு சொல்லுற ாங்க அது ஏன் நம்மட தேசத்தில மட்டும் தினம் தினம் செத்துக் கொண்டே இரிக்குது.

துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனம் செய்யிற கிருஸ்ண பரமாத்மா:

'பரித்ராணாய சதுனாம் வினாசாய சதுக்ஸ்ருதாம்
தர்மசம் ஸ்தாபனார்த்தாய சம்பவாமி யுகே யுகே'

எண்டு, அதாவது அதர்மம் மேலோங்கிற நேரத்தில தர்மத்தை நிலைநாட்ட ஒவ்வோரு யுகத்திலயும் நான் அவதரிப்பேன் எண்டு கீதையில சொல்லியிரிக்கார். ஆனாத் தங்களப் பெரிய அவதாரங்கள் எண்டு சொல்லுற சாமிமார் எல்லாம் இந்த அனியாயங்களுக்கெதிரா மூச்சு விடுறானுகளில்ல.

இந்தப் புழுகுகளெல்லாம் மக்களைக் கிளர்ந்தெழ விடாமத் தடுத்துத் தடுத்துக் கடவுட் பூச்சாண்டிகாட்டி தங்கட ஆதிக்கத்த நிலைநாட்டிறதுக்காக அந்தக் காலத்தவன் விட்ட உடான்ஸுகள் பாருங்கோ.

உண்மையக் கொஞ்சம் திருத்தமான தமிழில சொல்லுறதெண்டா:

'தவிர்க்கவே முடியாதவோர் பரிணாம நியமத்தினுள் தக்கன பிழைத்தலும் தகாதன அழிதலுமாய், வல்லவன் வாழ்வான் என்னும் கோட்பாட்டு நியதியுட்தான் இச் சுழலும் உலகம் இயங்குகின்றது.'

அதனால், ஆதிக்க பலத்தினால் அடக்கி ஒடுக்கப்படும் மனிதக் குழுக்களெல்லாம் தம் சுய அடையாளங்களை விட்டு அப்படியே அழிந்து போக வேண்டியதுதான்.

ஆனாலும் அடக்குமுறைக் கெதிராகக் குமுறிப் பொங்கும் விடுதலை வெறியை இயற்கை நம் ஒவ்வொருவருக்கும் அளித்திருக்கிறது

ஆம்! நாம் மாடுகளல்ல மூக்கணம் போட, குதிரை களல்ல கடிவாளமிட யானைகளுமல்ல அங்குசத்தால் அடக்க. மனிதர்கள். வெறும் உயிர்ப்பும் பசியும் காமத்தினவும் கொண்டு காட்டில் அலைந்து மிருகங் களாக வாழ்வை முடித்து விட எங்களை இவ்வியற்கை படைக்கவில்லை. அறிவினால் ஆய்ந்துணர முடியாத வோர் அற்புதச் சக்தி புதைக்கப்பட்டுத் தன் சுயத்தை இவ்வுலகின் அனைத்து ஜீவராசிகளிலிருந்தும் வேறு படுத்தி நிற்கும் சிருஷ்டிப்பின் உச்சம். பிரகிருதித்தாயின் சிரத்து முடி மனிதம். அதிலும்:

வையமீன்ற தொன் மைந்தர் உளத்தினைக்
கையினால் உரை காலம் இரிந்திடப்

பைய நாவை அசைத்த பசுந்தமிழ் அன்னையின்
வயிற்றுப் பிள்ளைகள் நாம்.

இந்தியா, அமெரிக்கா, கனடா, ஐரோப்பா என்ன?
இச்செகத்துளோரெலாம் எதிர்த்து நின்ற போதிலும்

பச்சையூன் இயைந்த வேற் படைகள்
வந்தபோதினும்?

அச்சமில்லை அச்சசமில்லை
அச்சமென்பதில்லையே

எனினும், தமிழீழத் தாயகம்தான் தமி ழரின் தணியாத ஆசையென தமிழர்கள் திரண்டுவிட்ட இன்றைய சூழ்நிலையில், அத்தகைய ஒரு தாயகம் தமிழருக்கும் இல்லை, இருக்கவும் விடமாட்டோமென்று, இன்றைய இலங்கை அதிபர் மகிந்த ராஜபக்சவின் சிந்தனையில் உதித்தது நகைப்புக்குரியதாகும்.

இச்சிந்தனையின் சித்தாந்தத்தில் ஊறிய சிங்கள பேரினவாதக் கட்சிகள் மீண்டும் கலவரங்களை களப்படுத்தி தமிழரின் இடம் பெயர்வுகளை மறைமுகமாகச் செயற்படுத்தி வருவது, அங்கிருந்து வரும் செய்திகள் சிந்திக்க வைக்கின்றன.

பாடல் பெற்ற ஸ்தலமான திருகோணமலை தமிழரின் பூர்வீக பூமியாக வரலாற்றுச் சான்றுகள் இருப்பினும், தனிச் சுதந்திரத்துடன் நடமாட முடியாத ஒரு அவல வாழ்க்கையை அங்குள்ள பரம்பரைத் தமிழர்கள் அனுபவிப் பதை செய்திகள் கூறுகின்றன. அடிக்கடி நடக்கும் கொலைச்சம்பவங்கள், குண்டுவீச்சுக் கள், சுற்றிவளைப்புக்கள் அங்கு வாழும் தமிழர்களை இடம் பெயரச் செய்துள்ளதை அறிகிறோம். அங்கிருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்து இந்தியாவுக்கு அகதிகளாகச் செல்வதற்கு மன்னார் பகுதிகளில் தங்கியுள்ளதையும் அறிகிறோம். ஏற்கனவே வள்ளங்கள் மூலம் களவாக இந்தியா வுக்கு அகதிகளாகச் சென்ற விபரமும் அறிவோம். பாதுகாப்பு இல்லாத வள்ளங்களில் சென்றவர்களில் சிலர் கடலில் ஆபத்துக்குள் சிக்கி மரணமடைந்த செய்திகளும் மனதை நோகச் செய்கின்றன. திருகோணமலைப் பிரதேசத்தை விட்டு இடம்பெயரும் மக்களின் தொகை அதிகரிக்க அதிகரிக்க இலாபமடையப் போவது சிங்கள அரசு மட்டும்தான். இதுவே தமிழ் விரோத சக்திகளின் எதிர்பார்ப்பாகும்.

அல்லைப்பிட்டியில் நடந்த அனர்த்தம் காரணமாக, அங்குள்ள சிறு தொகை மக்க ளால் தொடர்ந்தும் அமைதியாக வாழ முடியாத காரணத்தினால், வன்னிப் பகுதிகளில் தஞ்சம் புகுந்துள்ள இடம் பெயர்வு ஒருபுறம் கவலை யாகவும் மறுபுறம் மகிழ்ச்சியையும் தருவது உண்மை. அல்லைப்பிட்டி மக்களின் இடம் பெயர்வால், அனாதரவாக விடப்படும் அல்லை ப்பிட்டி கிராமம், காலக்கிரமத்தில் சிங்கள அரசின் கெடுபிடியாளர்களினால் ஆக்கிர மிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் எழாமல் இல்லை. அதேசமயம், அல்லல்பட்ட அல்லைப் பிட்டி மக்களுக்கு ஆதரவு தர, தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய ஒரு பகுதி இடமளித்த இனிய செய்தி தமிழருக்கென ஒரு தாயகம் அவசியமென்ற ஒரு தேவையை வலியுறுத்தி வைத்தது மகிழ்ச்சி.

உயர் பாதுகாப்பு வலயமாகவும், இராணு வச் சோதனை நிலையங்களாகவும் புனித பூமிகளாகவும் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள தமிழர் தாயகப் பூமியிலிருந்து ஏற்கனவே பல்லாயிரக் கணக்கான தமிழ் மக்கள், இடம்பெயர்ந்து உள்ளூர் அகதிகளாக வாழும் நிலைமை தொடர்ந்த வண்ணம் இருக்கின்றது. இவர் களுடைய பாதுகாப்போ, இலகு வாழ்க்கையோ அரசுக்கு அவசியமில்லாதது என்ற வெளிப் பாட்டை கண்டுகொள்ள முடிகிறது. மக்களின் பாதுகாப்புக்கென அமர்த்தப்பட்ட அரச படை களினாலேயே பாதுகாப்பு முறியடிக்கப்படும் செயல்கள் உலகில் எங்கும் காணமுடியாத காட்சி, ஒவ்வொரு தமிழனையும் உலுக்கு கின்றது. அங்குள்ள படைகளின் பாதுகாப்பை நிச்சயப்படுத்து முகமாகவே தினமும் இடம் பெறும் கொலைகளும், விரட்டல்களும், சுற்றி வளைப்புகளும் அரங்கேறுகின்றன. சுருங்கக் கூறினால், அரசபடைகளின் அத்துமீறல்களும், அடாவடித்தனங்களும் தமிழ் மக்கள் தமது பூர்வீக பூமியை விட்டு மெல்ல மெல்ல இடம் பெயர வேண்டுமென்பதே குறிக்கோள்.

20 வருடங்களுக்கு முன்னர் இடம் பெயர்ந்த ஈழத் தமிழ் மக்கள் அன்னிய நாடுகளில் தஞ்சம் புகுந்து அகதிகளாக வாழ்ந்த வாழ்வு மாறி, புகுந்த நாடுகளையே நிரந்தர வதிவிடமாக ஏற்றுக்கொண்டுள்ள காரணத்தினாலும், வடக்கிலும் கிழக்கிலும் இடம்பெறும் அரச வன்செயல்களால் உள்ளூரி லேயே அகதிகளாக்கப்பட்ட காரணத்தினா லும், தமிழர் தாயகத்தின் 30 வீதத்திற்கு மேற்பட்ட நிலத்தை பறிகொடுத்த நிலையிலும், உலக நாடுகளின் அனுதாபம் அருகிவிட்ட அளவிலும் தமிழருக்கு பாதுகாப்பு தரக்கூடிய தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தையாவது கட்டிக் காக்க வேண்டிய ஒரு கடப்பாடு தமிழ் மக்கள் மீது சுமத்தப் பட்டுள்ளது, தவிர்க்க முடியாத கடமையாகும். புலம் பெயர்ந்த தமிழ் மக்கள் புரிந்து கொள்ள வேண்டிய உண்மை இது.

அதிநவீன வசதிகளுடன் சொகுசு தொடர் மாடிக்கட்டடம் விற்பனைக்கு

Luxury Apartments in Wellewatte, Colombo



- 3 Bedrooms & 2 Bathrooms
- 2 Bedrooms & 2 Bathrooms
- 1 Bedroom & 1 Bathroom
- Imported high quality fittings & glazed tiles for Bathrooms
- Hot water geyser
- Ground floor reserved car park
- Roof top garden
- A/C provision in all rooms
- Rust proof powder coated window
- Elevator to all floors
- Stand by generator
- Modern fire protection system
- Garbage shoot in every floor
- Intercom security system
- Mahogany cabinets Pantry with granite work top
- Provision for washing machine connection
- Telephone and television outlets
- Fully secured 8 feet parapet wall right around



Sri Lanka Office
Provisix International (Pvt) Ltd
No. 6, I.B.C. Road
Colombo 06, Sri Lanka
Tel : ++ 94 714528484
e-mail : m.somasundaram@provisix.com

Canada Contact :
Tel : ++ 1 514 8928804 (After 4pm & weekend)

Australia Contact
Tel : ++ 61 2 98963521
++ 61 4 22471129

Provisix Limited - United Kingdom
458, Alexandra Avenue
Harrow, Middlesex, HA2 9TL,
United Kingdom
Tel : ++ 44 2088683646
Fax : ++ 44 2088683666
Mobile : ++ 44 7715323010
++44 7774455156
e-mail : provisix@provisix.com

3 Bedrooms from 84 laks
2 Bedrooms from 73 laks
1 Bedroom from 43 laks

Only selected units Available

For call back please e-mail us



Aukland Rogers Pharmacy

Pharmacy

Tel: 020 8672 6737
Fax: 020 8772 7993

THE NATIONAL PHARMACEUTICAL ASSOCIATION

892 Garratt Lane
Tooting
London SW17 0NB

- Prescription Medicines
- Dental Care
- Foot Care
- Hair Care
- Cosmetics
- Baby Foods
- Baby Toiletries
- Skin Care



- Toiletries
- Feminine Hygiene
- Fragrances
- Hair/Fashion Accessories
- Health Foods
- Herbal Medicines
- Films/Batteries

Instant Passport/Driving License/ID Card Photos

Health Care Advice
Pregnancy Testing

One person dies from a smoking related disease every 4 minutes in Britain!

Most people killed by tobacco started smoking when they were teenagers.

Don't give up giving up.



Young people often start smoking because they think it's glamorous and grown up, and don't think that they'll be smoking for life. But don't underestimate the addictive nature of nicotine.

Smoking contributes to cancer, heart disease, bronchitis, strokes, stomach ulcers, leukaemia, gangrene, asthma, wrinkles, bad breath…
Don't Worry! It's not too late!
Stopping smoking is not easy ! But we can help!

புகைத்தலை நிறுத்த, மறக்க எங்கள் உதவியை நாடுங்கள். NHS அங்கிகாரம் பெற்ற அனுபவம் உள்ளவரின் சேவை உங்களுக்கு உண்டு. இலவச சேவை

உடன் தொடர்பு கொள்ளுங்கள்



உங்கள் சகல மருந்து வகைகளையும் தமிழில் கலந்துரையாடி பெற்றுக் கொள்ள வசதி உண்டு

Email: aukland.rogers.chemist@npanet.co.uk
Web: www.tamilpharmacy.com

யாழ் களம் பெருமையுடன் வழங்கும்

ரசிகையின்...

பட்டிமன்றம்

பெற்றோர்களுக்கும் இளம் பிள்ளைகளுக்குமிடையே இடைவெளி ஒன்று உருவாகி அது கால வளர்ச்சியில் விரிவடைவதை உணர முடிகிறது. ஆகவே இந்த இடைவெளிக்கு காரணம் பெற்றோரா? பிள்ளைகளா? சூழலா?

நடுவர்
இளைஞன்

பிள்ளைகள் அணி	பெற்றோர் அணி	சூழல் அணி
சாத்திரி (அணித்தலைவர்)	**தல** (அணித்தலைவர்)	**நிதர்சன்** (அணித்தலைவர்)
ரமா	**கஜீந்தன்**	**சிநேகிதி**
சோழியன்	**புயல்**	**கூடர்**
நாரதர்	**ஈஸ்வர்**	**சாணக்கியன்**

புதியதோர் உலகம் செய்வோம்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இளைஞன் (நடுவர்)

'பெற்றோர்க்கும், பிள்ளைகளுக்கும் இடையில் தோன்றி விரிவடைந்துவரும் இடைவெளிக்குக் காரணம் பிள்ளைகளே' என முழங்கிச் சென்றார் 'பிள்ளைகளே' அணித் தலைவர் சாத்திரி.

பட்டிமன்றத் தலைப்பில் 'தாய்நிலத்திலா' அல்லது 'புலம்பெயர் நிலத்திலா' என்று எதனையும் வரையறை செய்யாவிட்டாலும், புலம்பெயர் மண்ணை மையமாக வைத்தே தனது கருத்துக்களை சொல்வதாக முன்னறிவித்தார்.

'தலைப்பில் எழுப்பப்பட்டிருக்கும் கேள்விக்கு விடை அனைவருக்கும் தெரியும் - அது: இடைவெளிக்குக் காரணம் பிள்ளைகளே என்பது - இருந்தும் நடுவர் தொடங்கி எதிரணியினரும் குழம்பியிருக்கின்றனர்' எனக் கூறினார்.

தொடர்ந்தவர், நடுவர் தலையையே உருட்டத்தொடங்கிவிட்டார். அட்டா, ஐயையோ என்று விழிகளை உருட்டி - 'மவுசை' உருட்டிப் பார்த்தால்:

பிள்ளைகளின் தேவைகளை அறிந்து, அவர்கள் கேட்பதை, அவர்கள் விரும்புவதை பூர்த்தி செய்கின்றனர் பெற்றோர். தமது பிள்ளைகள் மீது நம்பிக்கை வைத்து தம்மால் முடிந்தளவு அவர்களை மகிழ்விக்கின்றனர். ஆனால், சிறுவயதில் 'அம்மா நண்பி கொண்டு வந்த பேனா பிடிச்சிருக்கு அது வாங்கித் தாங்கோ' என்று கேட்கத் தெரிந்த பிள்ளைகளுக்கு, இளவயதை அடைந்ததும் பல விடயங்களை ('அம்மா அந்த நண்பியை பிடிச்சிருக்கு சேர்த்து வையுங்கோ' என்று கேட்கத் தெரியாமல்) மறைக்கத் தொடங்குகிறார்கள். எனவே, முதலில் பிள்ளைகளே இடைவெளியை உருவாக்குகிறார்கள் என்று தனது கருத்தை அற்புதமாக முன்வைத்தார்.

'சேர்த்து வையுங்கோ' என்று கேட்டால் போல சேர்த்து வைத்து விடப் போகிறார்களா என்று மற்றைய அணிகளில் இருக்கிற பிள்ளைகள் குமுறுவது புரிகிறது.

இள வயதையடைந்ததும் பிள்ளைகள் பெற்றோரிடம் பல விடயங்களை மறைப்பதற்கு காரணம் என்ன? பயமா? அல்லது அலட்சியமா? - இனி வாதாட வருகிற அணியினர் தான் சொல்ல வேண்டும்.

'பெற்ற மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு' என்கிற முதுமொழி ஞாபகம் வருகிறது. பார்ப்போம், மற்றைய அணியினர் ஏதும் புதுமொழியுடன் வருகிறார்களா என்று.

இறுதியாக: (தமது)எதிரணியனரின் வாதங்களையும், நடுவரின் தீர்ப்பையும் கேட்காமலே தமது அணிக்குத்தான் வெற்றி எனக் கூறி நம்பிக்கையோடு விடைபெற்றார்.

சாத்திரியின் கருத்துக்களை வாசித்த 'பிள்ளைகள்' எல்லாம் 'பொங்கியெழும் பிள்ளைகள் படையாக' புறப்படக் காத்திருக்கிறார்கள். எனவே 'இடைவெளி உருவாகி விரிவடைவதற்கு காரணம் பெற்றோர்களே' என்று வாதாட வந்திருக்கும் அணித் தலைவர் 'தல' அவர்களை களமேடைக்கு அழைக்கிறோம்.

தல (அணித்தலைவர்)

நடுவர் அவர்களே...! எமதணியினரே...! எதிரணியினர்...! பார்வையாளராக இருக்கும் உறவுகள் அனைவருக்கும் அன்பான வணக்கம்...! வணக்கம்..!

எதிரணியின் ஒன்றின் தலைவர் சாத்திரியார் அவர்கள் தனது தலைப்புரையை வைத்து விட்டார்...எனது தலயும் உருட்டியதை பார்த்தேன்.... ரசித்தேன்.... அதை எதிர்த்து சொல்ல அல்லது மறுத்து பேச எமது அணியினர் காத்திருப்பதால் நான் எமதணியின் ஆணித்தரமான வாதத்துக்கு அல்லது கருத்துக்கு நேரடியாகவே போய்விடலாம் என நினைக்கிறேன்.....

இளையவர்கள் என்பவர்கள் முகம் பார்க்கும் கண்ணாடி மாதிரி அவர்களிடம் எப்படி உணர்வுகளை பிரதிபலிக்கிறோமோ அப்படியே அவர்களும் தங்களை பிரதிபலிக்கிறார்கள்... உணர்வுகளை உள்வாங்கி பிரதிபலிக்கும் முகத்தில் அன்பை கொண்டுவந்து பிள்ளைகளிடம் அன்பாக பேசாத பெற்றோரிடத்தில் பிள்ளைகள் அன்பாக இருக்காதது அவர்களின் தவறும் கிடையாது....

ஒரு பாடல் எனக்கு ஞாபகத்தில் வருக்கிறது...

எந்த குழந்தையும் நல்ல குழந்தைதான்
மண்ணில் பிறக்கையிலே
அவர் நல்லவராவதும் தீயவராவதும்
அன்னை வளர்ப்பினிலே...!

இதில் தீயவராவது மட்டும் அல்ல அன்பானவராக குடும்பத்தோடு ஒத்தவராக பெற்றோரை மதிப்பவராக வரவும் அன்னை அணைப்பு தேவைப்படுகிறது.... அன்பாக வளரும் எந்த குழந்தையும் தன் எதிர்காலத்தை பற்றி கவலை கொள்வதில்லை... அதானால் பிள்ளைகள் எப்போதும் பெற்றோரை மதித்து ஒன்றி வாழ்கிறார்கள்... அன்பு இல்லாத விடத்து அந்தப் பிள்ளை தன் எண்ணப்படி வாழத் தலைப்படுகிறார்கள்.... பெற்றோரையும் மதிப்பது கிடையாது...!

அன்பு மட்டும் பிள்ளைகளுக்கு போதுமா எண்றும் எனக்கு ஒரு கேள்வி எழுகிறது..? அதுக்கு பதிலை சிந்தித்து பார்த்தேன். அதையும் தாண்டி பிள்ளைகளின் விருப்பு ஆர்வம் சிந்தனை என்பன வேறு படும்போது.... அதுக்கு ஒவ்வாத சிந்தனை உள்ள பெற்றோர் தாங்கள் விரும்புவதை திணிப்பதனால் இளையவர் விலகுவதும் ஒண்றும் விளங்காத விடயம் அல்ல..!

தான் பெரிய விளையாட்டு வீரராக வர வேண்டும் என இளயவை ஒருவர் நினைக்கிறார். ஆனால் பெற்றோர் அவர் வைத்தியராகத்தான் வரவேண்டும் என நினைத்தால் எப்படி அவனால் அதை செய்ய முடியும்...?? இயற்கையிலேயே விஞ்ஞானப்பாடம் மண்டக்குள் ஏறாமல் இருந்தால், அவன் படப்போகும் பாடு தான் என்ன...?? விரும்பும் விளையாட்டு ஆசையை படுகுழியில் போட்டு மூடும் கொடுமையை அவனால் சீரணிக்க முடியாமல் பெற்றோரை வெறுப்பதையோ இல்லை ஒதுங்குவதையோதான் அவனால் செய்ய முடியும்.... கடைசியில் பரீட்சையில் தோத்துப் போகும் அவனால் எதிர்காலத்தில் என்ன செய்ய முடியும்...?? பின்னர் சூழலின் பிடிக்குள் சிக்கி எதிர்காலத்தை சிதைந்து போக விட்டு விடும் பரிதாபத்தை பெறோரால் தடுத்து நேர் படுத்த முடியாதது அல்லவே...! தங்களின் விருப்பு வெறுப்பை பிள்ளைகள் மீது காட்டும் பெற்றோர் எதை சாதித்து விடுகிறார்கள். அவர்களை அன்னியபடுத்துவதை விட..??

இளையவர் சூழலால் கெட்டு போய்த்தான் குடும்பதில் ஒட்டுவதில்லை என்றும் பலர் சொல்லலாம் அது உண்மையா என்றால், இல்லை என்றே சொல்ல வேண்டி இருக்கிறது.... ஒருவன் கெட்டுப் போகிறானா...??? அதுக்கும் சரியான கவனிப்பு இல்லாமல் அவனுக்கு உறுதுணையாக எப்போதும் இருக்காத பெற்றோரால்தான் அவன் வீதிக்கு வருகிறான்....

இயந்திர வாழ்க்கை கொண்ட தற்கால உலகில் அன்பாக வளர்ப்பதா...??? ரீவி சீரியலும் பக்கத்து வீட்டு புதினமும் கேட்கவே நேரம் போதாத உலகில் பிள்ளைகளின் உணர்வை புரிந்து கொள்ள பெற்றோருக்கு நேரம் இருக்கிறாதா எண்று வேறு ஒரு பட்டிமன்றம் வைக்கலாம் அதில் அவ்வளவு சிக்கல்... ஆகவே அதை இப்போ விட்டு விடலாம்...

குடும்பம் என்பது என்ன...??? கணவன் மனைவி பிள்ளைகள்... இதில் ஒருவர் தவறு செய்யும் போது மற்றயவர் அவருக்கு புரிவது போல பேசி தீர்ப்பதுதானே வழமை... இதில் தகப்பனால் இல்லை தாயாரால் ஒரு பிள்ளை அளவுக்கு மீறி கண்டிப்பதனால் அவனின் தவறு என்ன என்று சரியாக புரிய வைக்க படாததால்த்தான் அவன் வஞ்சிக்கப்படுவதாக சிந்திக்கிறான்... விலகி வெளியிலேயே காலத்தை கழிக்கிறான்... சூழலின் பிடிக்குள் சிக்கி சின்னா பின்னமாகிறான்..பெற்று வளர்க்கும் பெற்றோரே இளையவரின் வளர்ச்சிக்கும் தாழ்ச்சிக்கும் காரணமானவர்கள்....

அன்பு செலுத்தினால் மட்டும் பிள்ளைகள் சீரழிந்து குடும்பத்தில் இருந்து விலகுவதில்லையா...??? விலகுகிறார்கள்...!

பட்டினத்தார் பர்டிய பாடல் ஒண்று ஞாபகத்தில் வருகிறது..!

துள்ளித்திரியும் காலத்திலே என்
துடுக்கடக்கி
பள்ளிக்கு அனுப்பிலன் என் தந்தையாகிய
பாதகனே...!

என்று வருகிறது....

விடலைப் பருவத்தில் தீயதை எல்லாம் பிள்ளைகளை தீண்டி விடாது நல்ல அறிவுரையும் அவரது வளர்ச்சிக்கு உறுதியான படிகளை எடுத்து காட்டாத, பிள்ளைகளில் அக்கறைப்படாத பெற்றோரால்த்தான் பிள்ளைகள் சீரளிந்து பெற்றோரை மதிப்பது கிடையாது... அவர்கள் சொல்வது சரியானது என எண்ண தோன்றுவது கிடையாது....! இதை அனுபவத்தில் கண்டவர் பலர் சொல்ல கேட்டு இருக்கிறோமே..!

ஈழத்தில் நடக்கும் சமூகம் சார்ந்த இனப் பிரச்சினையினால் இடம் பெயர வைத்த சூழல் குடும்ப இடைவெளிக்கு காரணம் எண்று சிலர் சொல்ல முற்படலாம்....

ஆனாலும் அங்கு பிரச்சினைக்கு அடிப்படையாய் தோன்றிய நிலைமையை தடுக்காது சமூக அக்கறையோடு செயற்படாத இளையவரின் பெற்றோரே அல்லது பெற்றவரின் பெற்றோரே காரணம் எண்று கூறி வாய்ப்புக்கு நன்றி கூறி வணங்குகிறேன்... வணக்கம்...!

தொடரும்.

EURO UNION
Mortgages
Commercial Loans
Accountants
Solicitors
In association with Anthony Financial Consulting which is authorised and regulated by financial services authority
77, Hoe Street, Walthamstow, London E17 4SA
Tel: 020 8509 0911 | Fax: 020 8509 0912

NO MORTGAGE NO FEE
▲ 100% Mortgages
▲ 90% No proof of Income Required
▲ More than 100% Mortgages for council tenants
▲ Unlimited Arrears in your Loans or Current Mortgages!!! we still can get you 80% Loan

Call us now
020 8509 0911

Your home is at risk if you do not keep up your repayments in a mortgage or other loan secured on it

Commercial Loans
(வர்த்தக கடன்கள்)
Freehold or Leasehold
Businessக்கு
80%
வரை கடன் வசதி!
வியாபார நோக்குடன்
Off-licence, Restaurant,
கடைகள் அல்லது Take away
போன்றவை வாங்க வேண்டுமாயின்
எம்மை கடன் நாடுங்கள்

LETTERS TO THE EDITOR

ஒரு பேப்பரில்தான் குறை!

விமர்சனம் என்பது யாரும் எழுதலாம். ஆனால் அதை எழுதுபவர் குறைந்த பட்சம் தான் விமர்சிக்க வந்த விடயம் பற்றிய ஒரு சிறிய ஆய்வையாவது நடாத்தி விட்டு அதைப்பற்றி எழுதுவதே சாலச் சிறந்தது. ஒரு பேப்பரின் கடந்த இரண்டு பதிப்புகளிலும் டாவின்சி கோட் பற்றிய விவாதம் நன்றாகவே சூடு பிடித்திருந்தது. நான் இன்னமும் படத்தை பார்க்கவில்லை. ஆனால் டான் பிறவுனின் நாவலை முற்று முழுதாக வாசித்தவன் என்ற வகையில் எனது சிறிய கருத்தை இங்கு வைக்க முனைகிறேன். லியனாடோ டாவன்சிக்கும் சார்ல்ஸ்டாவினிற்கும் வித்தியாசம் தெரியாமல் ஒரு பேப்பர் வாசித்த அனைவரையும் முட்டாளாக்கி விட்டார் கவனப்பரியன். ஜேஸ்ப் ஸ்ராலினின் பதில் மிக அருமை. ஆனால் அடி முட்டாள் கவனப்பரியனின் விமர்சனத்திற்கு பதில் அளித்த ஜோஸப் ஸ்ராலின் நிச்சயமாக டாவின்சி கோட் படித்திருக்க மாட்டார். ஆதனால் நான் அவரை குறை கூறவில்லை. நான் குறை சொல்ல வந்தது ஒரு பேப்பரையே! மக்களை முட்டாளாக்கும் வகையில் அடிப்படை ஆய்வைக் கூட செய்யாது வரும் அனைத்து ஆக்கங்களையும் போடும் ஒரு குப்பை தொட்டியாக ஒரு பேப்பரை தயவுசெய்து மாற்றி விடவேண்டாம்.

டாவின்சி கோட்டில் வரும் லியனாடோ டாவின்சி ஒரு பிரபல ஓவியர். லியனாடோ டாவின்சி. இத்தாலியல் 1452 இல் பிறந்தவர். அவர் ஒரு பிரபல ஓவியர், கட்டிடவரை கலைஞர், கணக்கியலில் பிரபலமான இவர் ஒரு 'தத்துவவியலாளரும் கூட. ஒரு கத்தோலிக்கராக இருந்து போதும் இறந்த மனித உடல்களை வெட்டி அதை படமாக வரைந்து தனது அழகியல் கலையால் மருத்துவத்திற்கும் சேவை செய்தவர். டாவினின் ஓவியங்களில் மிகவும் பிரபல்யமான மொனலீசா மற்றும் லாஸ்ர் சப்பர் (இயேசுவின் கடைசிப் போசனம்) ஓவியங்களில் டாவின் இரகசியமாக பல செய்திகளை உலகிற்கு சொல்லிவைத்து சென்றுள்ளார் என்பதே டாவின்சி கோட்டின் முக்கிய அம்சம்.

பரிணாம வளர்ச்சியை பற்றியோ குரங்கிலிருந்து மனிதன் வந்தான் என்பது பற்றியோ டாவின் சி கோட்டில் டான் பிறவுன் எதுவுமே எழுதவில்லை. டான் பிறவுனின் ரசிகன் நான். அவரது இன்னுமொரு நாவலான ஏஞ்சல்ஸ் அன்ட் டீமன்ஸ் (Angels and Demons) என்ற நாவலில் தான் உலகம் எப்படி ஆரம்பித்து (Bigbank theory) என்பது பற்றிய ஒரு கருத்தாடல் வருகிறது. அதில் பௌதீகத்ததையும் மதத்தையும் அவற்றின் உறவுகள் பற்றி சுவையான பல தகவல்களை மிக அருமையாக தந்துள்ளார் டான் பிறவுன். டவின்ஸி கோட்டை விட மிகவும் ஒரு அருமையான நாவல் ஏஞ்சல்ஸ் அன்ட் டீமன்ஸ். டான் பிறவுனின் கற்பனையில் வந்த டாவின்சி கோட் கந்தோலிக்கர்களுக்கு எந்த வகையிலும் எதிரானது அல்ல! மாறாக யேசுவை ஒரு இடது சாரியாக சித்தரித்துள்ளமையே இந்த நாவலின் சிறப்பம்சமாக நான் பாரக்கிறேன். டாவின்சி தன் ஓவியங்களின் மூலம் சொன்ன செய்தியும் அதுதான்.

சார்ல்ஸ் டர்வின் பரிணமா வளர்ச்சி ஆய்வின் தந்தை. ஒரு பிரபலாமன விஞ்ஞானி. இவருக்கும் டாவின்சி கோட்டிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. 1809 மாசி 12ம் திகதி இங்கிலாந்தில் பிறந்தவர் சார்ல்ஸ் டார்வின். கூர்ப்பு தத்துவத்தை உலகிற்கு தன் ஆய்வுகள் மூலம் நிரூபித்தவர். இவரைப்பற்றிய அருமையான கட்டுரையை ஜோஸப் ஸ்ராலின் எழுதியிருந்தார். கவனப் பிரியனின் கவனக் குறைவால் குறைந்த பட்சம் நமக்கு டர்வின் பற்றிய அழகான ஒரு கட்டுரை கிடைத்ததே. அதுவே நிம்மதி?. ஐயா கவனப்பிரியன் இனி வரும் காலங்களில் தயவு செய்து நீரும் குளம்பி மற்றவர்களையும் குளப்புவதை இத்துடன் நிறுத்துங்கள்.

- வாசுதேவன்.

தட்டிக் கொடுங்கள்!

ஒரு பேப்பரின் 45வது இதழில் 'இசைப்பிரியை' பானுமதி துரைசிங்கம் லண்டனில் நடைபெற்ற பாடல் போட்டி நிகழ்ச்சி ஒன்றின் விமர்சனம் ஒன்றை எழுதியிருந்தார். நானும் அந்த நிகழ்ச்சிக்கு சென்றவன் என்ற வகையில் நானும் எனது வாதங்களை இங்கு வைக்கலாம் என விரும்புகிறேன். பாலையும் தண்ணீரையும் கலந்து வைத்தால் பாலை மட்டும் பிரித்து எடுக்கமாம் அன்னம். ஆனால் இசைப்பிரியையோ மிகவும் பிடிவாதமாக மிக அற்ப சொற்பமாக கலந்து போயிருந்த தண்ணீரை மட்டும் பிரித்தெடுத்து விமர்சித்திருக்கிறார்.

1990இல் இருந்து இங்கு நடைபெறும் நம்மவர் இசைநிகழ்ச்சிகளுக்கு நான் பெரும்பாலும் சென்று வருகிறேன். முழு நேர வேலை செய்து கொண்டு பகுதிநேரமாக இந்த இசைத் துறையில் ஈடுபாடு கொண்டுள்ள அந்த கலைஞர்களின் அனைத்து நிகழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இந்த இசை நிகழ்ச்சி மிகவும் சிறப்பாகவே இருந்தது. என்னையும் அருகில் இருந்த ரசிகர்களையும் இரசிக்க வைத்தது என்றே கூறாலாம்.

இந்த நிகழ்ச்சியில் மற்றைய இசை நிகழ்ச்சியில் நடைபெறாத ஒரு சிறப்பம்சத்தை நான் கண்டதே இந்த விமர்சனத்தை எனக்கு எழுத தூண்டியது. புல்லாங்குழல் இசையை நீண்ட காலத்தின் பின் மேடையில் ஒரு இசை கலைஞர் வாசிக்க அதை ரசிக்கும் வாய்ப்பை எனக்கு இந்த இசை நிகழ்ச்சி தந்தது. அப்படி அருமையாக சுருதி சுத்தமாக புல்லாங்குழலை வாசித்தவரை கொண்டு ராகங்களை வாசத்து காட்டியது என்ன தப்பு? இசைப்பிரியை மாபெரும் இசை ஞானியாக இருக்கலாம் ஆனால் நிகழ்ச்சிக்கு வந்திருத்த 99 வீதமானவர்கள் சாதாரண ரசிகர்கள். அதை கிண்டல் பண்ணி எழுதியது வந்திருந்த ரசிகர்களையும் ஞானசூனியங்கள் என்று நக்கலடிக்கவோ என்னவே தெரியாது.

இதில் மிகவும் கவலைக்குரிய இன்னு மொரு விடயம் என்னவெனில் யார் போட்டியாளர்கள் என்று தெரியாத அளவிற்கு துணைப்பாடகர்கள் பாடலை வந்து கத்தி விட்டு போனார்களாம். அடுத்த வருடம் சுமாராக பாடிய போட்டியாளர்கள் துணை பாடகர்களாக வந்தால் போதும் என்று கூறியிருந்தார்.

நான் இந்த துணைப்பாடகர்கள் பாடிய பல நிகழ்ச்சிகளை பார்திருக்கிறேன். இவர்கள் பாடியதில் நான் ஒன்றும் பெரிதாக குற்றம் காண முடியவில்லை. ரசிக்கும் படி பாடினார்கள். மேடையில் நிதானமாக அனுபவத்துடன் பாடினார்கள். நல்ல கரகோசத்தையும் பெற்றார்கள். இதை விட வேறென்ன வேண்டும். சுருதி சுத்தமாக பாட வேண்டுமானால் பாடலை ஒரிஜினலாக படியவர்களையல்லவா நாம் அழைத்து வரவேண்டும்.

நம் பாடகர்கள் வளர்ந்து வரும் இசைக்கலைஞர்கள். அவர்களை நாம் தட்டிக் கொடுத்து வளர்க்கவேண்டும். ஆனால் இசைபிரியையே பாடவில்லை கத்தினார்கள் என்று அவர்களை பரிகசிப்பது அவர்களின் வளர்ச்சிக்கு நிச்சயம் கைகொடுக்காது. ஒரு விமர்சகர் குறைந்த பட்சம் இதையாவது தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

நம்மவர்கள் புலம் பெயர்ந்து வந்த சூழலில் பல இடர்கள் மத்தியில் தமது நேரத்தை ஒதுக்கி தம்மால் முடிந்தளவு ஒரு இசை நிகழச்சியை வழங்கும் போது அதன் குறை நிறைகளை மிக நிதானமாக சூழ்நிலைக்கு ஏற்ப அவர்தம் மனம் நோகாது அதே வேளை அவர்களை தட்டிக் கொடுத்து விமர்சிக்க வேண்டும். நீங்கள் சுப்புடு கணக்கில் விமர்சிக்க இந்த கலைஞர்கள் ஒன்றும் முழு நேர கலைஞர்கள் அல்ல.

இனிவரும் காலங்களில் நம் கலைஞர்களை அடித்து நொருக்குவதை விடுத்து அவர்தம் வளர்ச்சிக்கு வித்திடுங்கள். இதுவே இசைப்பிரியை நம்மவர் கலைஞர்களுக்கு செய்யும் ஒரு பெரிய இசைத் தொண்டாக அமையும்!

- சண்முகநாதன் (ஹரோ)

Kerala Ayurvedic Health Clinic

Free Consultation | Authentic and effective Kerala ayurvedic treatments
Qualified and registered Ayurvedic Physicians | Affordable Prices

Call 020 8902 1104 or 020 8902 1707

உங்கள் நோய்க்கு ஏற்ப அனுபவம் மிக்க பிரத்தியேக ஆலோசனைகளுக்கும்,
மருத்துவ சிகிச்சைக்கும் கேரளா ஆயுற்வேத மூலிகை மருத்துவரை நாடுங்கள்



Massage therapies by experienced and highly skilled therapists
Treatment is designed around your individual health needs
Only natural herbal medicines are used
No side effects at all
Wide range of therapies

- ✓ Frozen Shoulder
- ✓ Digestive Disorders
- ✓ High Blood Pressure
- ✓ Pulled Muscles
- ✓ High Cholestrol
- ✓ Trapped Nerve
- ✓ Paralytic Conditions

- ✓ Stress and Strain
- ✓ Back Pain
- ✓ Joint Pain
- ✓ Diabetes
- ✓ Migraine
- ✓ Stiffness
- ✓ Arthritis

Male & Female Therapists available
We can also speak in Hindi
Tamil & Malayalam



Open 7 Days a Week

1 Odeon Parade, Sudbury Heights Avenue, Greenford, Middlesex, UB6 0NA
5 mins walk from Sudbury Town - Piccadily Line www.kahc.co.uk

ஈழத்தமிழ் பெண் சிவராதை லோகநாதனின் சாதனை.



ஜேர்மனியில் 22 வருடங்களாக வாழ்ந்து வரும் பருத்தித் துறை தும்பளையைச் சேர்ந்த லோகநாதன், சுபத்திரா தம்பதிகளின் புதல்வி சிவராதை அவர்கள் தொழில்நுட்பவியல் துறையில் கண்டுபிடிப்பொன்றினைச் செய்துள்ளார். Youth researches ல் கலந்து கொண்டு மேற்படி சாதனையை நிகழ்த்தியுள்ளார். தனது கண்டுபிடிப்பு முயற்சியைக் கடந்த இரண்டு வருடங்களாகத் தொடர்ந்த சிவராதை வைகாசி 21ல் வெற்றி பெற்றுள்ளார்.

Rheinland Pfalz எனும் மானிலத்தில் Andernach எனுமிடத்தில் வாழ்ந்துவரும் இவர் அந்த மானிலத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இப்போட்டியில் கலந்து கொண்டார். தானே தனது சுயமுற்சியில் தயாரித்த மிகவும் மலிவான இரசாயனவியல் மாற்றங்களைக் காண்பிப்பதற்கானதும், மாற்றங்களை அளவிடுவதற்கானதுமான Photometer சிவராதையின் போட்டிக்கான ஆக்கமாகும். கணணியில் இதற்கான மென்பொருளினையும் செய்துள்ளார்.

இளையவர்களின் ஆய்வுகளை வளர்த்தெடுப்பதற்காக நடாத்தப்படும் இப்போட்டியை இவ்வாண்டு ஒருங்கமைத்தவர்கள் Stiftung Jugend forscht e. V. und die Sick AG (Waldkirch) ஆகும். ஜேர்மனியில் மிகவும் பிரபலம் நிறைந்த இப்போட்டியில் வருடா வருடம் பெருந் தொகையான இளையோர்கள் பங்குபற்றுவது குறிப்பிடத்தக்கதாகும்.

'இந்த இளம் பெண் மிகவும் அற்புதமான திறமையை வெளிப்படுத்துகிற அறிவையும் ஆற்றலையும் கொண்டிருக்கிறார்' என ஜேர்மனிய ஊடகங்களால் பாராட்டப்பட்ட இவர் இரசாயனவியல் பாடத்தில் மிகுந்த ஈடுபாடுள்ளவர். தன்னார்வத்தினால் இக்கண்டுபிடிப்பைச் செய்த இந்த யுவதி மருத்துவப் படிப்புக்கான தகுதியையும் பெற்றுள்ளார்.

21.05.06 அன்று Friburg இல் கல்வி ஆய்வுக்கான ஜேர்மனிய அமைச்சின் உயர் அதிகாரியின் முன்னிலையில் 'ஜேர்மனியின் மிகச் சிறந்த இளம் ஆய்வாளர்' எனும் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பெண்ணின் முயற்சியின் வேராகத் துணை நின்று தங்கையின் சாதனையை ஊக்குவித்தவர் இவரது சகோதரன் சிவகண்ணன் அத்துடன் மகளின் முயற்சிக்கு தங்கள் முழுமையான ஒத்துழைப்பை வளங்கிய இவரது பெற்றோரையும் இந்நேரம் நினைவில் நிறுத்தி அவர்களையும் வாழ்த்துகிறோம்.

முன்னரும் பல தடவை இத்தகைய வேறு போட்டிகளில் பங்குபற்றி பரிசில்களையும் பெற்றிருக்கும் சிவராதையை ஒரு பேப்பர் வாசகர்களும் வாழ்த்துவதில் பெருமையடைகிறோம். எங்கள் பிள்ளை வென்ற தான பெருமிதம் இந்த சிவராதை பெற்ற வெற்றி எங்களுக்கெல்லாம் மகிழ்வைத் தருகிறது.

ஜேர்மனியிலிருந்தும் இதர ஐரோப்பிய நாடுகளிலிருந்தும் லண்டனுக்குப் படையெடுக்கும் எம்மவர்கள் கூறும் காரணம் லண்டனில் தங்கள் பிள்ளைகளுக்கு ஏற்ற தகுதிகள் கிடைக்கின்றன என்பதும், ஆங்கிலத்தில் படித்தால்தான் எங்கள் பிள்ளைகளுக்கு எங்கும் மதிப்பு என்ற கருத்தும் இன்னும் இருக்கிறது. அதுவும் ஜேர்மனியென்றாலே நாசிகளின் நாடென்ற கருத்தும் இப்படி லண்டனுக்குப் பறக்கும் பலரிடம் இருக்கிறது.

ஆனால் லண்டனை விடவும் எத்தனையோ மடங்கு கல்வியிலும் கல்வித் தரத்திலும் ஜேர்மனி முதன்மையானது என்பதை இவர்கள் புரிந்து கொள்வதில்லை.

சிவராதையின் சகோதரன் சிவகண்ணன் ஜேர்மனியில் தரம்வாய்ந்த Heidelberg பல்கலைக்கழகமொன்றில் 3ம் ஆண்டு மருத்துவத்துறை மாணவனாகக் கற்று வருகிறார்.

இப்படி எத்தனையோ எங்கள் பிள்ளைகள் ஜேர்மனியில் பல்துறைகளிலும் கால்பதித்து சாதனைகளைப் புரிகிறார்கள் என்பதனைத் தனது செயலினால் உணர்த்திய சிவராதையை வரவேற்கிறோம். தொடர்ந்து இன்னும் பல சாதனைகள் புரிய எங்கள் தேசத்தின் மகளை வாழ்த்துகிறோம்.

- சாந்தி ரமேஷ் வவுனியன்

விருந்தினர் வந்தால்...

ராதா
(ஒரு பேப்பருக்காக)

குலாப்ஜாமூன்

தேவையான பொருட்கள்:

கோதுமை மா	– 2 Cup
அப்பச்சோடா	– ¼ தேக்கரண்டி
கட்டிப்பால்	– 1 Cup
சீனி	– 2 Cup
தண்ணீர்	– 3 Cup
ஏலக்காய்பொடி	– ½ தேக்கரண்டி
றோஸ் எசென்ஸ்	– ½ தேக்கரண்டி
நெய்	– பொரிப்பதற்கு

செய்முறை:

கோதுமை மாவை அப்பச் சோடாவுடன் கலந்து கட்டிப்பாணல விட்டு கையில் ஒட்டாத பதத்தில் குழைத்த பின் நெய்யை விட்டு மெதுமையாக வரும்வரை பிசைந்து மணி நேரம் மூடி வைக்கவும். பின் நெல்லிக்காய் அளவில் உருட்டி ஒரு நெய் பூசிய தட்டில் வைத்துக் கொள்ளவும்.

ஒரு அகலமான பாத்திரத்தில் சீனியைப் போட்டு தண்ணீரை விட்டு, அடுப்பில் வைத்து துழாவிக் காய்ச்சி, சீனி கரைந்து கொதித்து மெல்லியதாக தடித்து வரும் பதத்தில் இறக்கி ஏலக்காய் பொடி, ரோஸ் எசென்ஸ் விட்டு கலந்து சூடாக வைத்துக் கொள்ளவும்.

வேறு ஒரு பாத்திரத்தில் நெய் விட்டு சூடாளதும் உருட்டி வைத்துள்ள உருண்டைகளைப் போட்டு பொரித்தெடுக்கவும். பின் சீனிப்பாகில் போட்டு ஊற வைத்து பரிமாறவும்.

Grace அக்கா வீட்டு Kitchen...

கிரேஸ் அக்கா
(ஒரு பேப்பருக்காக)

முட்டையில்லாத கேக்

தேவையான பொருட்கள்

200gm பேரிச்சம்பழம்
200gm வால்நட் or முந்திரிப் பருப்பு
250 gm Butter
1 tin Condensed milk (conation)
1 t.sp Baking Powder
1 t.sp சீனி [தேவையெனில்]
125gm மா
125gm ரவை
1 t.sp Sodium bi carbonate
1 t.sp வனிலா
5 t.sp தண்ணீர்

செய்முறை:–

பேரிச்சம்பழத்தை விதை நீக்கி சிறு சிறு துண்டுகளாக்கி Sodium bi carbonate (அப்பச் சோடா) கலந்த நீரில் 5 மணித்தியாலம் ஊறவிடவும். சிறிதளவு பட்டரில் ரவையை வறுத்து அதனுடன் மிருது வாக்கப்பட்ட பேரீச்சம்பழம், மா, Baking Powder, உடைத்த பருப்பு ஆகியவற்றை நன்கு கலந்து வைக்கவும். மீதமுள்ள பட்டரோடு Condensed milk, Vanilla கலந்து நன்கு அடிக்கவும். நன்கு குழைத்து ஏற்கனவே தயாரித்த ரவைக் கலவையுடன் நன்கு சேர்க்கவும். Condensed milk உடன் 5 t.sp, தண்ணீர் சேர்த்து அடிக்கும்போது இலகுவாக அடிபடும். பட்டர் பூசி ஆயத்தப்படுத்திய கேக் tray யில் ஊற்றி 160 சூட்டில் அவனில் 1 மணித்தியாலம் வேக விடவும். வெந்த பிறகு வெளியில் எடுத்து ஆறிய பிறகு பரிமாறவும். (பட்டருக்கு பதிலாக மாஜரின் பாவிக்கலாம்)

Buy a House
in UK with
No Deposit
SP UNIQUE MORTGAGES
Suite 202 Oxgate Lance, Staples Corner
London NW2 7HJ
Tel: 020 8438 0680 or 0796 872 4452
Fax: 01582-539881
Co., Reg. 5113754 CCL. 567849

Earn £5000 per Month
Become an agent / Introducer

ILFORD Town Centre
FELTHAM
HARLAW

சி. புஸ்பராசாவின்

ஈழப் போராட்டத்தில் எனது (பொய்) சாட்சியம்

அவரது புத்தகம் மற்றும் அவரைப் பற்றிய ஒரு பார்வை

எங்கள் ஈழ மக்களது வரலாற்றில் மிகப் பெரும் ஒரு சாபக்கேடு எங்கள் வரலாறு பற்றி அவ்வப்போது போதுமான பதிவுகளை யாரும் மேற்கொள்ளவில்லை. அப்படி ஒரு சிலர் தங்கள் தனிப்பட்ட முயற்சியால் பதிந்து விட்டு போன பதிவுகளும் எதிரிகளால் அவ்வப்போது திட்டமிட்டு அழிக்கப் பட்டும் இங்கு புஸ்பராசா போன்றவர்களால் வேண்டுமென்றே திரிக்கப் பட்டும் எழுதப்படும் புனைகதைப் புளுகுகளே வரலாறாக தூக்கி பிடிக்கப்பட்டு தமிழின எதிரிகளின் தாராள விளம்பரத்தால் அவையே காலப் போக்கில் தமிழனின் வரலாறாகத் திட்டமிட்டு மாற்றப்படும் அபாயமும் இருக்கின்றது.

புஸ்பராசாவின் இந்த ஈழப்போராட்டத்தில் 'எனது சாட்சியம்' என்கிற புத்தகம் வெளியான போதே அதனை வாங்கிப் படித்த நான் மற்றும் பல நண்பர்களும் இந்த புத்தகத்தில் பல வரலாற்று திரிபுகளும் அதில் ஈழ போராட்டத்தில் ஆரம்பகால மென்முறை (சாத்வீகப் போராட்டம்)போராட்டத்திலிருந்து அதனை வன்முறை போராட்டமாக மாற்றிய ஆயுதப் போராட்டத்தின் தந்தை என்று புஸ்பராசா அவரகள் தன்னை தானே கோடிட்டு காட்ட முயற்சித்துள்ளார் என்பதும் அவரது புத்தகத்தில் தெளிவாக தெரிகின்றது.

அதனால் அந்தப் புத்தகத்தைப் பற்றியும் புஸ்பராசாவைப் பற்றியும் ஒரு விரிவான விளக்கமான ஒரு கட்டுரை எழுத வேண்டும் என்று நான் நினைத்தாலும் அவரது அந்தப் புத்தகம் வெளிவந்த ஆரம்பத்தில் தமிழர்கள் மத்தியில் பாரிய அளவிலான தாக்கத்தை ஏற்படுத்தாமல் எந்த இணையங்களிலோ அல்லது பத்திரிகைகளிலோ அதை பற்றிய விபர விவாத விளக்கங்களோ பெரிதாக வெளி வராததால் நானும் எனது கட்டுரை எழுதும் நோக்கத்தை கை விட்டு விட்டேன் ஆனால் புஸ்பராசாவின் இறுதிக் காலங்களில் இந்திய பிரபல சில தமிழ் பத்திரிகைகளிலான அவரது பேட்டிகள் மற்றும் ஐரோப்பாவில் சில வானொலி ஒரு தொலைக்காட்சி என்பனவும் அவரது பேட்டிகளை தொடர்ந்து வெளியிட்டதனால் அவரைப் பற்றி தெரிந்திராத பலரும் யார் அந்த புஸ்பராசா? அவர் புத்தகத்தில் என்ன எழுதியிருந்தார் என்று அறியப் பலரும் ஆர்வமாக இருந்தார்கள். அவரை பற்றிய விவாதங்களும் கட்டுரைகளும் இணையங்களிலும் பத்திரிகைகளிலும் மாறி மாறி அடிபடத் தொடங்கியது .

ஊரில் இருந்த வயதானவர்களிற்கு இவர் யார்? ஈழ போராட்டத்தில் இவரின் பங்கு என்ன? என்று நன்றாகத் தெரியும் ஆனால் இணையங்களில் உலாவுகின்ற எமது இளைய சமுதாயம் இவரது பேட்டிகளைப் படித்து விட்டு இவர்தான் ஈழப்போராட்டத்தின் தந்தையா? என்கிற ஒரு வித குழப்பத்தில் ஆழ்ந்து போயுள்ளனர். அதைவிட இந்திய பிரபல பத்திரிகைகளில் அவரது பேட்டி வந்தபடியால் உண்மையாகத்தான் இருக்கும் என்கிற ஒரு எண்ணம் இவரைத் தெரியாத பலருக்கு ஏற்பட்டது. இந்த விடயத்தில் புஸ்பராசாவும் அவரை இயக்கியவர்களும் அவர்களது நோக்கத்தில் ஓரளவு வெற்றி கண்டனர் என்பது உண்மைதான்.

'ஈழப் போராட்டத்தில் பல வரலாற்றுத தவறுகள் இருக்கின்றன விரும்பியவர்கள் எல்லாம் விரும்பிய படி விரும்பியவர்களிற்காக வரலாறு எழுதப்பட்டு விட்டது'என்று தனது புத்தகத்தின் முன்னுரையில் 15 வது பக்கத்தில் கூறிக் கொண்டு தானே தனக்கு விரும்பியதை விரும்பியபடி வரலாறாக எழுதிவிட்டு போயிருக்கிறார். எனவேதான் புஸ்பராசா அவர்கள் இறந்து விட்ட நிலையில் மீண்டும் அவரது புத்தகத்தின் மீதான எனது பார்வைக் கட்டுரையை எழுத வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இதற்காக ஆரம்பகால ஆயுதப் போராட்டத்திலிருந்து இன்று தனிப்பட்ட வாழ்க்கைக்குள் இருக்கும் பலர் மற்றும் புஸ்பராசா அவர்கள் தனது புத்தகத்தில் கூறியது போல ஈழ ஆயுதப் போராட்டத்தில் ஆரம்பத்தில் முக்கிய பங்கு வகித்த இளைஞர் கள் பலரும் இருந்த அமைப்பான தமிழ் மாணவர் பேரவையின் தலைவராயிருந்த யாழ் உரும்பிராயைச்சேர்ந்தசத்தியசீலன் ஆகியோ ருடனும் தொடர்பு கொண்டு தகவல்களைத் திரட்டி மற்றும் எனக்கும் தனிப்பட முறையில் புஸ்பராசா அவர்கள் பற்றித் தெரிந்த தகவல் களையும் தருகிறேன்.

புஸ்பராசா அவர்கள் இளமைக் காலத்தில் அவரது பிறந்த ஊரான மயிலிட்டியில் தமிழரசுக் கட்சியின் பிரமுகராக இருந்த சிவனடியான் என்பவருடன் இணைந்து மயிலிட்டி சனசமூக நிலைய இளைஞர்களுடன் தமிழரசுக் கட்சி சார்பாக வேலைகள் செய்யத் தொடங்கினார். இதுதான் இவரது ஆரம்ப அரசியலுடனான தொடர்பு.அந்த கட்சி சார்பாக நடக்கும் கூட்டங்களிற்கு ஒழுங்கு செய்தல். அன்று சிறீலங்கா அரசு கொண்டு வந்த தமிழருக்கு எதிரான சட்டங்களை எதிர்த்து தமிழரசு கட்சி நடாத்திய ஆர்ப்பாட்டங்கள் கூட்டங்கள் என்பவற்றில் பங்கு கொண்டார். அதனால் அந்த ஆர்ப்பாட்டங்களில் கலந்து கொண்ட வர்களை காவல் துறை வந்து அள்ளிக் கொண்டு போகும். அதில் இவரும் பலமுறை காவலில் வைக்கப்பட்டிருந்தார் என்பதும் உண்மை. இவரைப் போல அன்று ஏன் இன்றும் சிறிலங்கா அரசால் போராட்டத்திற்கு ஆதரவானவர்களையும் சந்தேகத்தின் பெயரிலும் பல நூற்று கணக்கில் தமிழர்கள் சிறைகளில் வாடினார்கள் வாடிக்கொண்டும் இருக்கின்றார்கள். அதே போல புஸ்பராசா சிறையில் இருந்த காலங்களில் ஆயதமேந்தி போராட புறப்பட்ட வேறு பல இளைஞர்களும் இதே காலகட்டத்தில் பிடிபட்டு இவருடன் இருந்த காரணத்தால் புஸ்பராசாவிற்கும் அவர்களுடனான தொடர்புகள் ஏற்படக் காரணமாய் இருந்தது.

அதைவிட சிறையில் இருப்பவர்கள் தங்கள் நேரத்தை போக்க தங்கள் கவலைகள் பிரச்ச னைகள் எல்லாவற்றையுமே மற்றவர்களிடம் பகிர்ந்து கொள்வது வழமை. அப்படி சிறையில் வாடிய ஆரம்பகால ஆயுதமேந்திய இளைஞர் கள் பலர் இன்று உயிருடன் இல்லை இருக்கும் ஒரு சிலரும் தங்கள் குடும்ப வாழ்வில் மூழ்கிப் போய் பெரிதாக எந்தவித பதிவுகளையும் எழுதாததினால் புஸ்பராசா அப்படி அவர்கள் பகிர்ந்த கொண்ட கருத்துக்கள் சம்பவங்களை எல்லாம் சேர்த்து தன்னிடமிருந்த எழுத்துத் திறமையினால் விடிந்து கோழி கூவுவதற்கு முதலே நாங்கள் எதிரியை தேடி ஆயுதங் களுடன் புறப்பட்டு விடுவோம் என்று தனது வாழ் நாளில் துப்பாக்கியால் ஒரு கோழியைக் கூட சுட்டிருக்காத இவர் தனது புத்தகத்தில் எங்களிற்கு பெரிய பூமாலையொன்றை சுத்து கிறார். எனவே மீதி விபரங்களை தொடர்ந் தும் படிப்பதற்கு... அடுத்த பேப்பர் வரை காத்திருங்கள்

தொடரும்....



நள்ளிரவுக் குறும்புகள்

காலம் எவ்வளவு அழகானது. அழித்து விடமுடியாத கோலங்களை மனதெங்கும் அள்ளித் தெளிக்கக் காலத்தால் மட்டுமே முடிகின்றது. இதில் ஆச்சரியம் என்னவெனில் காலம் இட்ட கோலங்களை காலத்தாலேயே அழிக்க முடிவதில்லை.

பாடசாலை விடுதிகளில் வாழ்ந்தவர்கள் இன்றும் சொல்வார்கள்..

'அந்த வாழ்வை மறக்க முடியாது.'

எப்படி முடியும்? ஒத்த வயதும் துடிப்பும் கொண்ட இளவயதுக் கூட்டம் ஒன்றாய் இருந்து விட்டால் அடிக்கின்ற கொட்டங்களுக்கு அளவேது? அவற்றையெல்லாம் மறந்துவிட்டால் வாழ்வில் மகிழ்வேது.?

அன்று ஒரு சனிக்கிழமை. பொதுவாக எமது மகிழ்ச்சிக்குரிய நாள். உறவினர்கள் பார்க்க வருவது..... உணவு வாங்கித் தருவது.... பணம் தருவது என பல எதிர்பார்ப்புகளைக் கொண்ட நாள்.

உறவினர்கள் எமக்குத்தான் வர வேண்டும் என்பதில்லை. நண்பர்களுக்கு வந்தாலும் நாம் கொண்டாடுவோம்.

அன்றைய நாளில் மிக மகிழ்ச்சி தருகின்ற ஒரு நிகழ்வு அபூர்வமாய் நடப்பதுண்டு.

வார இறுதி நாட்களில் அசம்பாவிதங்களுக்கான வாய்ப்பு அதிகம் என்பதால் எம்மோடனேயே இருக்கும் விடுதிக்காப்பாளர் மிக அபூர்வமாய் விடுப்பில் போய்விடுவதுதான் அந்தப் பெரு மகிழ்ச்சி.

அன்று அந்தப் பெரு மகிழ்ச்சிக்குரிய நாள்.

எம்மை அடக்கி ஆள மாணவர் தலைவர்கள் இருந்தாலும், அன்றைய நாளில் அட்டகாசங்கள் அளவுக்கு மீறிப் போகாமல் பார்த்துக் கொள்வார்களே தவிர, அடக்குவது சிரமமென அவர்களும் அறிவர்.

இரவு 10 மணிக்குப் பின்தான் குறும்புகள் களை கட்டத் தொடங்கும். நிலவொளியில் ஆங்காங்கு குந்தியிருந்து பேசத் தொடங்குவர் மாணவர். சிலவேளை விளக்கொளிகளில் கிளித்தட்டு விளையாடுவதும் உண்டு.

இவ்வாறு எல்லோரும் விழித்திருப்பதில்லை. பாதிக்குமேல் தூங்கத் தொடங்கியிருப்பர். விழித்திருந்து குறும்புகள் செய்யும் கூட்டத்தினரின் உச்சக்கட்ட செயற்பாடுகளுக்கு இறுதி நேர விருந்தாக அமைபவர்கள் தூங்கிக் கொண்டிருப்பவர்களே!

முதலில் உள்ளே சென்று அரைத் தூக்கத்தில் இருப்பவர்கள் யார்? ஆழத்தூக்கத்தில் இருப்பவர்கள் யார்? எனக் கணக்கொன்றை எடுப்பர்.

அதன் பின் தொடங்கும் திருவிளையாடல்.

மைப் போத்தல்கள்.. வெண்ணிறச் சாந்துகள் சகிதம் தூங்குவோரை நெருங்கி தம் ஓவியத் திறமைகளைக் காட்டுவர்.

சிலருக்குக் கால்களில் கமிறு கட்டி கட்டிலோடு பிணைத்து விடுவர்.

வேறு சிலரின் ஆடைகளை முற்றாகவே களைந்துவிடுவர்.

வேறு சிலரை அலாக்காகக் கட்டிலோடு தூக்கி இடம் மாற்றி விடுவர்.



- இருவத்திநாலு -

கும்பகர்ணத் தூக்கத்தார் சிலர் இருப்பர். அவர்கள் நிலை மிகப் பரிதாபமானது. கட்டிலோடு தூக்கப்படும் இவர்கள் வெளியே கொண்டு செல்லப்படுவர்.

தூக்கிச் செல்வோரின் சக்திக்கேற்ப, அக் கட்டில்கள் வைக்கப்படும் தூரம் மாறுபடும். கிணற்றடிக்கருகில், கழிவறைக்கருகில் என, இக் கும்பகர்ணர்கள் அன்றிரவைக் கழிப்பர்.

இக் கூத்துகளை இனிதே முடித்துக் கொண்டு, குறும்பர்கள் அதிகாலைப் பொழுதில் தூங்கச் செல்வர்.

பெரும் அல்லோல கல்லோலத்துடன் பொழுது விடியும்.

கொதிப்போர், கொந்தளிப்போர், அழுவோர், சிரிப்போர் என நவரசங்கள் நிறைந்ததாக ஞாயிறு காலைப்பொழுது அமையும்;.

பாதிக்கப்பட்டோர் கூடியிருந்து யார் செய்திருப்பர் என புலனாய்வு செய்வர்.

புலனாய்வின் முடிவில் சந்தேகப்பட்டு சிலரிடம் சென்றால், அவர்களும் மையால் தாடி மீசை வைக்கப் பட்டவர்களாக இருப்பர்.

அதிகாலைமில் கழிவறை செல்கின்றவர்களால் பலவந்தமாக எழுப்பப் படுகின்ற கும்பகர்ணர்கள் ஏகப்பட்ட கெட்ட வார்த்தைகளைப் பேசக் கற்றுக் கொள்வது அந்த அதிகாலைப் பொழுதில்தான்.

இரண்டு தரப்பிலும் நான் அங்கம் வகித்திருக்கின்றேன். இரண்டுமே அனந்தம்தான். தித்திப்பைத் தவிர வேறெதையும் தராத அந்த நினைவுகள் காலம் வரைந்த அழகிய கோலங்கள்.

மீண்டும் வரையலாம்

- கரிச்சான் குஞ்சன்.

கௌபோய் கந்தசாமியின்

எனக்குத் தடான்னா... உனக்குப் பொடா!

'இந்த அநியாயத்த கேக்க ஆளில் லையோ....'என்று அலறி அடித்துக்கொண்டு வந்த அவரைப் பார்த்த எனக்கும் என்னவோ ஏதோவென்று பயமாகத் தான் போய் விட்டது. அறந்து பறந்து வந்தவரை ஆற அமர இருத்தி வைத்து என்ன ஏதேன்று விசாரித்தேன். 'அப்பா வழி வந்த ஆச்சிக்கு ஊரைச் சுத்தி பனங் காணியும் ஊருக்குள்ளே தோட்டக்காணியும் எண்டு எக்கச்சக்க சொத்திருக்குது..... ஆச்சிக்குப் பிறகு வாரிசு வழியில எனக்குத்தான் மொத்தச் சொத்தும் எண்டு நினைச்சுக் கொண்டிருந்தன் .... எல்லாம் கனவாய்ப் போச்சுது....' சொன்னவர் விம்மி விம்மி அழத் தொடங்கினார்.

அடியும் தெரியாமல் நுனியும் தெரியாமல் இடையிலே ஒரு விடயத்தை தொடங்கினால் இப்படித்தான். என்ன ஏதென்று எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி இடியப்பச் சிக்கலில தலை தொங்கிப் போய் விடும். எனக்கும் இந்தக் கதி தான் ஏற்பட்டது. ஆச்சிக்கு ஆரோ பொல்லாத புத்தி மதியைச் சொல்லி ஆச்சியும் சொத்துப் பத்தையெல்லாம் வித்து வெளி நாடு வெளிக்கிடுதாக்கும் என்றும் ஒரு எண்ணம் ஓடி மறைஞ்சுது.

'வெளிநாடு வெளிநாடு எண்டு வந்தவை யெல்லாம் வேளா வேளைக்குச் சாப்பிடவும் நேரமில்லாமல் வேலை வேலையெண்டு நாயோட்டமும் சில்லறைப் பாய்ச்சலுமாய் இருக்கயிக்க ஆச்சி இஞ்சை வந்து என்ன செய்யப் போறா என்று கவலையும் வந்து சேர்ந்தது.. ஊரோடை இருந்து அல்லி மகாராணி போல ஆளடுக்கோட வசதியாய் வாழமாட்டாமல்..... விதி யாரை விட்டது ....' என்னையும் அறியாமல் ஒரு பெருமூச்சு வெளிக் கிளம்பியது. 'என்னை மாதிரி இஞ்சை எல்லாரும் விட்ட பிழை இது தானே.....முற்பிறப்பு பயனோ .. இல்லை முன்னெழுதினவன் நெத்தியில எழுதி விட்டதோ....' எண்ண ஓட்டம் தொடர்ந்து நான் முந்தி நீ முந்தி என ஓட்டம் போட்டது.

'இந்த அநியாயத்தைக் கேட்க ஆளில் லையோ..' என்று மீண்டும் ஆரம்பித்தார். 'அது தான் நான் இருக்கின்றேனே.. சொல்லும்..'என்று அவரை உற்சாகப் படுத்தி னேன். அதுவும் சரிதான் என்பது போல தலையை அசைத்தவர் தொடர்ந்து சொல்லத் தொடங்கினார். 'இந்த வெளி நாடுகள் எங்களின்ர தமிழ் ஈழத்தை தடை செய்தி ருக்கினமெல்லோ..' என்றவரிடம் 'அது தானே.. தெரிந்த விஷயமாச்சே.. அதுக்கும் உமக்கு நடந்த அநியாயத்துக்கும் ... என்ன சம்பந்தம்...' கேள்வியெழுப்பிய படியே அவரை ஆவலுடன் ஏறிட்டுப் பார்த்தேன்.

'அங்கை தானே அநியாயம் கிடக்குது...' சொத்துப் போன துக்கம் கோபமாய் வெளிப்பட்டது.' தமிழ் ஈழத்தை தடை செய்த நாடுகளை தடை செய்யிறது சரி... அதுக்குப் போய் எங்களையும் ஏன் அதுக்குள்ள சேர்ப்பான்...' மெள்ள மெள்ள விசயம் வெளிக்கிட்டது. எனக்குத் தடாவென்றால்.. உனக்குப் பொடா... தமிழ் ஈழம் எடுத்த முடிவு நியாயமானது தானே.

எங்களைத் தடை செய்யிற நாடுகளை நாங்களும் தடை செய்வோம் என்று புதிதாய் ஈழத்தில் பிறப்பிக்கப் பட்ட அறிவித்தல் தான் இவ்வளவுக்கும் காரணம் என்று விளங்கியது. 'கனடா தடை செய்தால் கனடாவைத் தடை செய்தால் போதாதோ.... பிறகேன் எங்களை யும் அதுக்குள்ள சேர்ப்பான்..' சொல்லிய படி என் முகத்தைப் பார்த்தார். ஓ ...ஹோ.. விசயம் விளங்கியது.

விளங்காதது போல அவரிடம் கேட்டேன். 'நீங்கள் பாஸ்போட் வைச்சிருக்கிறியளே..' மெள்ளக் கொக்கியைப் போட்டேன். 'இதென்ன கேள்வி கனடா வந்து பத்து வருஷமாச்சுது.... பாஸ்போட் இல்லாமல் இருப்பனே...வந்து மூண்டு வருஷத்தில சிற்றிஷன் எடுத்தனானெல்லோ...'

கனடிய சிற்றிஷன் என்ற பெருமையை மிதப்பாகவே காட்டினார். 'அப்ப அவை செய்யிறது சரிதானே..' நான் மெள்ள அவரை நோட்டம்விட்டேன். 'அதுஎப்பிடிசரி..யாரும்.. நாங்கள் தமிழரெல்லோ...' இழுத்தார். 'நீங்கள் தமிழராய் பிறந்தனீங்கள்.. ஒத்துக் கொள்ளிறன்... ஆனா இப்ப நீங்கள் சட்டப்படி கனடியன்... நீங்கள் கனடியன் என்றபடியால் கனடாவுக்குத் தடை என்ற ால்... உங்களுக்கும் தான்.

நிலமையைப் புரிந்து கொண்டவர்.. 'இதுக்கு நாங்கள்.. என்ன செய்யிறது..' என்று இறங்கி வந்து கேட்டார். 'என்ன செய்யிறது.. கனடா தடை போடும் போது... என்ன செய்தனீங்கள். நீங்கள் கனடியன் என்றால் மற்றவர்களைப் போல உங்கள் எதிர்ப்பைக் காட்டவும் ஈழத் தமிழ் மக்களுக்கு உங்கள் ஆதரவைக் காட்டவும் உங்களுக்கு உரிமை இருந்தது. அது எதையும் செய்யாமல் உங்களுக்கு உங்களுக்குப் பிரச்சனை என்றவுடன் கையைப் பிசைந்து கொண்டிருக்கிறியள். தனக்குத் தனக்கு என்றவுடன் சுளகு படக்குப் படக்கு என்று அடிக்குமாம் என்று சொல்வார்கள். இனி நீங்கள் மாமாவின்ர பிள்ளை பெரியபிள்ளை ஆகி விட்டது என்றும் டோகேலாது... ஊர்ப் பிள்ளையார் கொடி .. அம்மன் கோவில் தீர்த்தம் என்று போய் வெளிநாட்டுக் காசின் பலரைக் காட்டவும் ஏலாது. கனடியன் சிற்றிஷன் என்று பெருமை காட்டவும் ஏலாது.' சொல்லி விட்டு அவரைப் பார்த்தேன்.

'என்னன்னை இப்பிடிச் சொல்லிப் போட்டியள்.. ஒரு வழி சொல்லுவியள் எண்டு பாத்தா.... நீங்கள் பெரிய குண்டை யெல்லோ தூக்கிப் போடுறியள்.' ஆதங்கத்துடன் என்னைக் கேட்டார். 'என்ன வழி... தமிழ் ஈழத்தை தடை செய்த கனடிய அரசாங்கத்தைப் போய்க் கேளுங்கோ...' சொல்லி விட்டு நடையைக் கட்டினேன்.



வாழ்க்கைத் துணை

இலவச திருமண விளம்பர சேவை

இது புலம்பெயர் தமிழர்களுக்காக ஒரு பேப்பர் நடாத்தும் இலவச சேவை. இப்பகுதியில் விளம்பரம் செய்ய விரும்புவோர் உங்கள் விபரங்களை தொலைநகல் அல்லது மின்னஞ்சல் மூலம் எமக்கு அனுப்பிவையுங்கள். வெளியிட்டுள்ள விளம்பரங்களின் விபரங்களை அறிய விரும்புவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

பிரித்தானியா:
Tel: 020 8286 9327
Fax: 020 8640 6972

கனடா:
Tel: 416-297-4999
Fax: 416-335-6009

email: info@orupaper.com

மணமகள் தேவை

1. Sister living in England looking for her brother, working as an Engineer , British Passport holder, 37 years old, 5'7" tall a suitable bride. *Ref:764*

2. Sister living in England looking for her brother, a Professor in USA, a widower (No children) 40 years old, 5'11" tall looking for a bride with a degree. *Ref:763*

3.முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட 32 வயது 5'6" உயரமுடைய, 3 வருடங்களாக லண்டனில் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த வரனை லண்டனில் வசிக்கும் அக்கா தேடுகிறார். *Ref:762*

4. A Malaysian Tamil originally from Jaffna, 25 years old, 5'7" tall seeks a British Tamil bride. Ref:761

5. Jaffna born British citizen 48 years old, 5'5" tall, a divorcee looking for a bride, widow or divorcee also may be considered. Ref:760

6. Ceylon Tamil, a Professional Mechanical Engineer living in USA, a Canadian Citizen, 37 years old, 5'7" tall, a divorcee, looking for a suitable bride. Ref:759

7. சென்னை, தமிழ்நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட, 43 வயது லண்டனில் சுயதொழில் செய்யும் முஸ்லிம் நபருக்கு இரண்டாம் தாரமாக (இஸ்லாமிய சட்டப்படி) முஸ்லிம் பெண் தேவை*Ref:758*

8. Jaffna Parents looking for their son a Graduate 33 years 5'7"tall, living in London a suitable bride in UK/ Canada/Australia with Permanent resident. *Ref:758*

9.Jaffna Parents living in Canada looking for their son 29 years old,6' tall, a professional, born in Sri Lanka, brought up in Canada, a suitable educated bride willing to live in Canada. *Ref:757*

10.Jaffna born groom 39 years old 5'9" tall, a vegetarian & a Graduate working in UK on Work Permit seeks a suitable bride. *Ref:756*

11.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட தற்போது கிளிநொச்சியில் வசிக்கும் 24 வயது 5'7" உயமுடைய, உயர்தரம் கல்வி கற்ற மணமகனுக்கு லண்டனில் இருக்கும் சகோதரி ஸ்பொன்சர் செய்யக் கூடிய மணமகளைத் தேடுகிறார். *Ref:755*

12. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 37 வயது 6'உயரமுடைய UK பிரஜாவுரிமையுள்ள படித்த மணமகனுக்கு படித்த மணமகளை கனடாவில் வசிக்கும் பெற்றோர் தேடுகின்றனர்.*Ref:754*

13. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 43 வயது 5'9" உயரமுள்ள, கனடா பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் தகுந்த மணப்பெண்ணைத் தேடுகின்றார். *Ref:753*

14. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 46 வயது 5'7" உயரமுள்ள, நல்ல தொழில் புரியும் தாரமிழந்த மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். விவாகரத்து செய்தவர்களும் விரும்பத்தக்கது. *Ref:752*

15. Jaffna Parents looking for their son 29 years old 5'10" tall, UK educated, employed in civil service, a suitable bride. *Ref:751*

16. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'10" உயரமுள்ள, லண்டனில் Resident Permit உள்ள மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். *Ref:750*

17. Jaffna Parents living in the UK looking for their UK born son, a Graduate, 34 years old, 5'6" tall, a suitable bride from one of the western countries. *Ref:749*

18. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 53 வயது 5'1" உயரமுள்ள, Physiotherapist ஆக யாழ்ப்பாணத்தில் வேலைசெய்யும் விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு கனடாவில் தகுந்த மணப் பெண்ணைப் பெற்றோர் தேடுகின்றனர். பிள்ளைகள் உள்ள விதவைகளும் விண்ணப்பிக்கலாம். *Ref:748*

19. Vadamarachchi Parents looking for their son 35 years 5'6" tall self-employed as an estate agent, a PR holder, awaiting citizenship, a suitable bride. Ref:747

20. சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'11" உயரமுள்ள லண்டனில் வசிக்கும் மணமகனுக்கு லண்டனில் நிரந்தர வதிவிடவுரிமையுள்ள மணப்பெண்ணை பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 746*

21. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'11" உயரமுள்ள UK இல் PR உடன் வசிக்கும் மணமகனுக்கு கனடாவில் வசிக்கும் உறவினர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். *Ref: 745*

22.முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட 27 வயது 5'2" உயரமுள்ள, பிரான்சில் வதிவிடவுரிமையுடன் வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை உறவினர் கனடாவில் தேடுகின்றனர். *Ref:744*

23. மட்டுவிலைப் பிறப்பிடமாகக் கொண்ட 22 வயது 5'6" உயரமுள்ள, கனடாவில் ஸ்பொன்சர் செய்யக்கூடிய மணமகளை கனடாவில் வசிக்கும் உறவினர் தேடுகின்றனர். *Ref: 743*

24. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 6'2" உயரமுடைய, கனேடிய குடியுரிமையுள்ள படித்த மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 742*

25. Jaffna Parents living in Canada are looking for a suitable bride (in UK/ Canada) for their son, age 30, height 5'7" working for a business firm in UK on a work permit. *Ref: 740*

26.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 5'4" உயரமுள்ள, UK பிரஜாவுரிமையுள்ள BSc பட்டதாரி மணமகனுக்கு பெற்றோர் தகுந்த மணமகளை UK யில் தேடுகிறார்கள். *Ref: 739*

27. Sister living in UK, looking for her brother , 34 years, 5'6" height, BEng qualified working as a teacher a suitable Bride from UK/Canada/ Australia. *Ref.736*

28. தென்மராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது, 5'6" உயரமுள்ள, லண்டனில் 5 வருடங்களாக வசிக்கும் மணமகனுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகிறார்கள். *Ref:735*

29. Mannar parents seek for their son 28, 5'6", A/L, London AAT qualified, and working at the Off –licence in UK, a sutable bride. *Ref: 734*

30. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5'6" உயரமுள்ள, கனேடிய பிரஜாவுரிமையுள்ள பட்டதாரி மகனுக்கு கனடாவில் வசிக்கும் தாயார் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். *Ref: 731*

31. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5'11" உயரமுள்ள, கனடாவில் வர்த்தக நிலையம் வைத்திருக்கும் பட்டதாரி மகனுக்கு தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். *Ref: 733*

மணமகன் தேவை

1. யாழ்ப்பாணத்தில் வசிக்கும் 34 வயது 5'3" உயரமுடைய மணப்பெண்ணுக்கு கனடாவில் வசிக்கும் உறவினர் கனடாவில் மணமகனைத் தேடுகின்றனர். *Ref:1024*

2. யாழ்ப்பாணத்தில் வசிக்கும் 36 வயது 5'5" உயரமுடைய படித்த மணமகளுக்கு தகுந்த மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரி தேடுகின்றார். *Ref:1023*

3. மட்டக்களப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'5" உயரமுடைய, A/L படித்த தற்போது லண்டனில் Visit Visa இல் இருக்கும் சகோதரிக்கு சகோதரன் தகுந்த மணமகளைத் தேடுகின்றார். *Ref:1022*

4. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக கொண்ட 25 வயது 5'4" உயரமுடைய, தற்போது லண்டனில் பெற்றோருடன் வசிக்கும் Accountant மணமகளுக்கு லண்டனில் நிரந்தர வதிவுரிமையுள்ள மணமகனைத் தேடுகின்றனர். *Ref:1021*

5. Parents living in London a looking for their daughter 25 years old 5'4",a Graduate a Carnatic Music learnt, living in Colombo a suitable groom. *Ref:1020*

6. Jaffna Parents looking for their daughter 29 years old 5'2" tall, A/ L educated in Jaffna, learnt Music in Colombo, a suitable groom. *Ref:1019*

7. Aunt living in Canada seeks for her niece, 32 years old 5'5" tall, studied in Colombo, living in Canada a suitable groom. *Ref:1018*

8. தென்மராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 24 வயது 5'3" உயரமுள்ள, A/L படித்த மணமகளுக்கு வெளிநாட்டில் ஸ்பொன்சர் செய்யக் கூடிய மணமகனை கனடாவில் இருக்கும் உறவினர் தேடுகின்றனர். *Ref:1017*

9. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட 35 வயது 5'2" உயரமுள்ள, ஆசிரியராகக் கடமைபுரியும் மணமகளுக்கு தகுந்த மணமகனை உறவினர் தேடுகின்றனர். *Ref:1016*

10.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 42 வயது 5'4" உயரமுள்ள, வாழ்விழந்த படித்த மணமகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். *Ref: 1014*

11.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 44 வயது 5'7" உயரமுள்ள, Hotel Management படித்த கனடாவில் வசிக்கும் மணமகளுக்கு தகுந்த வரனை லண்டனில் வசிக்கும் சகோதரன் தேடுகின்றார். *Ref: 1013*

12.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'2" உயரமுள்ள, இலங்கைப் பட்டதாரியும், அமெரிக்காவில் வசிக்கும் மணமகளுக்கு பெற்றோர் தகுந்த வரனை அமெரிக்கா/கனடாவில் தேடுகின்றனர். *Ref: 1012*

13.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 23 வயது 5'5" உயரமுள்ள, தற்போது கொழும்பில் வசிக்கும் பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 1011*

14.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'7" உயரமுள்ள, தற்போது பிரான்சில் வசிக்கும் மணப் பெண்ணுக்கு தகுந்த வரனை பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 1010*

15.யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5'5" உயரமுள்ள, தற்போது பிரான்சில் வசிக்கும் மணப் பெண்ணுக்கு தகுந்த வரனை பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 1009*

16. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 34 வயது 5'1" உயரமுள்ள, தற்போது கனடாவில் வசிக்கும் Finance Accountant ஆக வேலை செய்யும் மணமகளுக்கு ஜேர்மனியில் வசிக்கும் சகோதரி தகுந்த மணமகனைத் தேடுகின்றார். *Ref: 1008*

17. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 22 வயது 5'4" உயரமுள்ள, கொழும்பில் AAT படித்துக் கொண்டு தனியார் நிறுவனமொன்றில் வேலை செய்யும் மணமகளுக்கு லண்டனில் வதிவிடவுரிமையுள்ள மணமகனை உறவினர் தேடுகின்றனர். *Ref: 1007*

18. முல்லைத்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட 20 வயது 5'2" உயரமுள்ள, A/L படித்த மணமகளுக்கு லண்டனில் வசிக்கும் தகப்பன் விசா உள்ள மணமகனைத் தேடுகின்றார். *Ref: 1006*

19. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5'2" உயரமுள்ள, யாழ்ப்பாணத்தில் வேலை செய்யும் மணமகளுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். *Ref: 1005*

20. கொழும்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்திய வம்சாவளியைச் சேர்ந்த 27 வயது 5'6" உயரமுள்ள, கொழும்பில் வேலை செய்யும் படித்த மணமகளுக்கு நிரந்தர வதிவிடவுரிமையுள்ள மணமகனை லண்டனில் வசிக்கும் சகோதரி தேடுகின்றார்.*Ref: 1004*

21. வடமராட்சியைப் பிறப்பிடமாகக் கொண்ட 35 வயது 5'2" உயரமுள்ள, தற்போது இந்தியாவில் வசிக்கும் படித்த மணமகளுக்கு பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். *Ref: 1003*

22. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5'2" உயரமுள்ள, தற்போது இந்தியாவில் வசிக்கும் படித்த மணமகளுக்கு தகுந்த மணமகளை பெற்றோர் தேடுகின்றனர். *Ref: 1002*

23. Jaffna born 35 years old 5'6" tall, a graduate working in Toronto looking for a suitable groom. contact sister in Canada. *Ref: 1001*

24. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 21 வயது 5'3" உயரமுள்ள, தற்போது கொழும்பில் வசிக்கும் சகோதரிக்கு கனடாவில் இருக்கும் சகோதரி தகுந்த மணமகனைத் தேடுகின்றார். *Ref: 1000*

25. Sisters, living in London looking for a suitable groom for their sister 42 years old, 5'3" tall, Jaffna Uni Graduate, in UK for the last 5 years. *Ref: 899*

26. Jaffna parents living in colombo looking for a suitable groom for their daughter 29 years 5' tall, ACS qualified worked in UK for 2 years, now in Colombo. *Ref:898*

27. யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மலேசியாவைப் பிறப்பிடமாகக் கொண்ட 31 வயது 5' உயரமுள்ள கனேடிய பிரஜாவுரிமையுள்ள ஆசிரியை ஆக வேலை செய்யும் B.Sc, B.T பட்டதாரி மணமகளுக்கு தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். *Ref:897*

28. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 26 வயது 5'2" உயரமுள்ள, கொழும்பில் Accountant ஆக பணிபுரியும் பட்டதாரி மணமகளுக்கு கனடா அல்லது UK இல் தகுந்த மணமகனை பெற்றோர் தேடுகின்றனர். *Ref:895*

29. Jaffna parents living in Canada are looking for a suitable professionally qualified bridegroom for their daughter, height 5'4", B.com Graduate, Major in M.I.S (Management Informaiton Systems). *Ref:893*

30. Jaffna Parents living in Canada looking for their son, 30 years, height 5'4", USA educated, professionally qualified, a suitable bride. Ref: 892

31. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 43 வயது 5'3" உயரமுள்ள, கனேடிய பிரஜாவுரிமையுள்ள கனேடிய அரசாங்கத்தில் வேலை செய்யும் மணமகளுக்கு படித்த மணமகனை கொழும்பிலுள்ள தாயார் தேடுகிறார். லண்டனில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது. படித்த தாரமிழந்தவர்களும் விண்ணப்பிக்கலாம். *Ref: 891*

32. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 28 வயது 5'5" உயரமுள்ள, Programme Planning Assistant ஆக யாழ்ப்பாணத்தில் வேலை செய்யும் பட்டதாரி மணமகளுக்கு லண்டனில் இருக்கும் சகோதரி லண்டனில் உள்ள பட்டதாரி மணமகனை தேடுகிறார். *Ref: 890*

33. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'2" உயரமுள்ள, Management பட்டதாரி, யாழ்ப்பாணத்தில் Accountant ஆக வேலை செய்யும் மணமகளுக்கு படித்த, நிரந்தர வதிவிடவுரிமையுடைய மணமகனை UK இல் வசிக்கும் சகோதரி UK/Canada/EU நாடுகளில் தேடுகிறார். *Ref: 889*

34. கொழும்பை பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'3" உயரமுள்ள, A/L, Computer உயர்கல்வி கற்ற இலங்கையில் வசிக்கும் மணமகளுக்கு லண்டனில் வசிக்கும் சகோதரி தகுந்த மணமகனைத் தேடுகிறார். *Ref: 888*

35. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 33 வயது 5'2" உயரமுள்ள, வவுனியாவில் வேலை செய்யும் பட்டதாரி மணமகளுக்கு பெற்றோர் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ தகுந்த மணமகனைத் தேடுகிறார்கள்.*Ref: 887*

36. யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட 29 வயது 5'2" உயரமுள்ள, விவாகரத்துப் பெற்ற யாழ்ப்பாணத்தில் வசிக்கும் சகோதரிக்கு லண்டனில் வசிக்கும் சகோதரன் தகுந்த மணமகனைத் தேடுகின்றார். *Ref: 884*

கவிதை

விடுதலை தே(போ)ரிழுக்க வாரீர்...

விடுதலைத் தேரை இழுக்கவும்—
எம்மண்ணில்
வீரப் போர் தொடுக்கவும்
விழலுக்கு நீரிறைக்கும்
வீணரை வீழ்த்தவும்
தலைவனும் தளபதிகளும்
தம்பியரும் தயார் !
தாயகத்தில் தமிழர்
தானையே தயார் !

கொழுந்துடன்,இலையும்,செடியுமாய்
கொட்டும் மழையில்நின்று
கோரக் கொலைகட்கெதிராய்
கோடாத நீதி கேட்கும் எங்கள் கோசம்
விழி மூடி மௌனிக்கும் உலகை
விழிக்க வைக்கும் —அதுவே
வடம் பிடிப்போரின்
வலிமை கூட்டும்.

போர்ப்பிரகாரம் இன்று
புவனமெங்கும் விரிந்துளது
அமெரிக்கா முதல் ஆஸ்திரேலியா வரை
அணிவகுக்கும் எம்மவரே..
உங்களில் எரியும் நெருப்பு
உள்ளே நின்று உயிர்விடும்
உயிர்கட்கு உறுதி சேர்க்கும்—பொங்கும்
உலையிலிட்ட தானியத்தை
உணவாயாக்கும்.

அங்கே ஓர் சிலர்
அத்தர் பூசி, ஆடம்பரமாயுடுத்து
அறியா~மை~க்கண்ணாடி அணிந்தபடி...
அவர்களும் நம்மவர்தான்,
அவலம் அவர் வாசல் வரவும்—தமிழ்
அன்னையின் வெற்றி நெருங்கவும்
அவரும் வருவார்—எம்
அணியில் சேர.

இதென்ன அநியாயம்
இங்கே ஓர் கூட்டம்
இன்னமும்
திருடவும்,தெருச்சண்டையிடவும்..
இழிசெயல் புரியவும்... இது
தவிர்க்க முடியாத மானுட தலைவிதி
தகுமொழி கூறின் தமிழனின் தலைவிதி.
அன்னைக்கு இழுக்கைத்தரும் அழுக்கர்கள்
அவர்களை வி(சு)ட்டுத் தள்ளுங்கள்

இன்றுடன் நில்லாமல்
இன்னமும் தொடருங்கள்
உங்கள் கோசம்
உயிர் கொடுத்து வடம்பிடிப்போர்க்கு
வலுச் சேர்க்கட்டும் !
வலம் வரும் தே(போ)ரினால்
வன்கொடுமை ஒழியட்டும் — புதிய
வாழ்வு பிறக்கட்டும் !

- சபா.விக்கிரமன்

நீதிபதிகளே!

உலகின் பழைய குடிகள் என்பதால்தான்
எமக்கிந்தப் புறக்கணிப்பா?
அரசு அவர் கையில் என்பதால்—
கொலை வெறியாட்டத்திற்கு அங்கீகாரமா?
போர் நிறுத்தம் — சமாதானம்
கண்காணிக்க வந்த நீதிபதிகளே!
சவக்குழிகளும் மனித எச்சங்களும்
கண்களில் படாது போனதேன்?
நாற்றமெடுக்கும் பிணவாடை
நாசித் துவாரங்களை அரிக்காததேன்?
சிறுதொகையினர் என்பதால் எம்மைச்
சீண்டிப்பார்க்க அனுமதித்தீரா?
கொடுமைகள் கண்டு கொதிப்பவனுக்கு
உங்கள் தர்மத்தில் தண்டனையா?
மனிதநேயம் மறந்து நடப்பதுதான்
நாகரிக உலகின் நவீனப் பண்பா?
—எங்கள் பாதுகாவலர்கள் இவர்கள்தான்—
இதை நாமே ஏற்றுக் கொண்ட பின்பும்
—தடைபோடும் தீர்மானம் —
அது உமக்கொரு கௌரவமா?
உலக இயங்குகையில்
பூமி பிழம்பாகுமென்றால்
உணர்ச்சிகளின் உக்கிரத்தில்
எரிமலை வெடிக்கும்!

- ந. ஹேமராஜ்

ஒரு போராளியின் ஏக்கம்

மறைந்திருந்து தாக்குதுவே எச்சில் கூட்டம்
மானமுள்ள மறவனுக்கோ மனத்தில் வாட்டம்
கறைபடிந்த சரித்திரத்தை மேலும் நீட்டா
கச்சிதமாய் முடிப்பதற்கு அவனோ ஏக்கம்
முறையெடுத்து முடித்திடென்று அண்ணன் சொல்வான் — ஏன்
முழு நாளும் செய்திக்காய் அவனும் காக்க
இறையாண்மை கொண்ட அந்த வீர மைந்தன்
இருப்பதுவும் அமைதியுடன் ஏனோதானோ...

கேட்டிடலாம் என்றபடி அவனும் செல்ல
கேள்வியது வரமறுக்க சிரித்தான் அண்ணன்
பாட்டியவள் சொல்வதுபோல் இருந்து பக்கம்
பக்குவமாய் புரியச் சில கதையைச் சொல்ல
மூட்டிவிட்ட அவன் கருத்தை மூளை ஏற்க
முதுகினிலே தட்டி அவன் அனுப்பி வைக்க
வாட்டிவிடும் தன் மனத்தின் உணர்வையெல்லாம்
வைத்திருக்கான் நாள் தினமும் மனத்தில் தேக்கி...

என்று அவன் தனையழைப்பான் என்று ஏங்கி
எத்தினமோ சேதி வரும் தினமும் காவல்
அன்று முதல் தலைகள் பல அடங்கி வீழும்
அத்தோடு சரித்திரத்தின் பாதி போகும்
நின்று கொள்ளும் கொஞ்சநாளே உமக்கும் காலம்
நின்றுவிடும் உம் மூச்சும் தெருவின் ஓரம்
வென்றுகளம் ஆடியவர் புரிவாய் நீயும்
வேள்விக்காய் வைத்திருக்கோம் வெட்ட எண்ணி...

- த.சு.மணியம்

இளசுகள் ஏங்களின் அவலம்

கடைக்குப் போனால் கால்சட்டை வாங்க —
காணவில்லையங்கே தொப்பிழ் மறைய...
என்ன செய்ய இளசுகள் நாங்கள்?

கையில்லாச் சட்டை போட்டால் பெருசுகளும் —
கொஞ்சம் தங்களுக்குமென்றால்...
என்ன செய்ய இளசுகள் நாங்கள்?

கோயிலோ குளமோவென்றால் மாமிகளெல்லாம்—
பஞ்சாபி...
என்ன செய்ய இளசுகள் நாங்கள்?

எங்களின் அட்டியலை அம்மாக்கள் —
அபகரித்தால்...
என்ன செய்ய இளசுகள் நாங்கள்?

அரைச்சாறியுடுத்தி அதற்கேற்ற கலரில் —
அணிகலன்கள் அணிய (பிளாஸ்ரிக்கில்தான்)
வைத்தார்கள் ஆப்பு அதற்கும் அம்மாக்கள்...
என்ன செய்ய இளசுகள் நாங்கள்?

எங்களின் இளமைக்கேற்ப இளமையையும் —
முடியையும் இலேசாக ஒதுக்க மாமிகளெல்லாம் —
இன்னும் கொஞ்சம் கூட...
என்ன செய்ய இளசுகள் நாங்கள்?

கைநிறைய வளையல் போட அதுவும் கைமாற—
ஒதுக்கிவிட்ட ஒற்றை வளையலை நாம் நாட —
இப்ப அதுகூட முடியவில்லை மாமிமாரின் ஆசையால்..
என்ன செய்ய இளசுகள் நாங்கள்?

கருமையான எம் கூந்தலை சுருட்டினால் —
சுருண்டதங்கே வழித்திழுத்தால் வழிந்ததங்கே —
இயலாமல் குழப்பியும் பார்த்தோம் ஓயோ —
அதுவும் முடியவில்லையே...
என்ன செய்ய இளசுகள் நாங்கள்?

கொண்டை போட்ட மாமியர்கள்; குலைத்துவிட்டார் —
எங்களைப்போல் நாளை குடும்மியை நாம் —
தேர்ந்தெடுத்தால் கொப்பியடிப்பாரா எங்களை...
என்ன செய்ய இளசுகள் நாங்கள்?

கலைபரங்கோ கல்யாணமோ படமோ பாட்டியோ —
பாட்டியெல்லாம் இளசுகளாய்...
என்ன செய்ய இளசுகள் நாங்கள்?

- வ.க.ணேஷ்

படைத்தவன் வாயடைத்துச் சென்றான்

படைத்தவன் பூமி வந்தான்
மனிதர்களைப் பார்த்து
ஒரு வரம் தருகிறேன்..
கேளுங்கள் என்றான்... ஆனால்
ஒரு நிபந்தனை என்றான்
உங்கள் அனைவரின்
எண்ணமும் ஒன்றாக
இருக்க வேண்டும் என்றான்
அனைவரும் சேர்ந்து சொன்னார்கள்
நான் மட்டும் நல்லா இருக்க வேணும்
படைத்தவன் வாயடைத்துச் சென்றான்..

- பூமல்

MORTGAGE ADVISORY Bureau

Are You Thinking of Selling or Letting Your Property!

Free Valuation: No Obligation!
No sale _No Fee / No Let No Fee
Free Property Management.
Rent Guaranteed Scheme

NO PROOF OF INCOME
MORTGAGES AVAILABLE ON AFFORDABILITY
CCJ'S ARREARS BAD CREDIT HISTORY
FIRST TIME BUYERS
REDUCE YOUR MONTHLY MORTGAGE PAYMENTS

100% MORTGAGES AVIALABLE
REMORTGAGES
RESIDENTIAL LOANS
COMMERCIAL LOANS
OVERSEAS PROPERTY LOANS

Independent Mortgage Advisors

0208 767 9399 / 07981 086 563

Your home is at risk, if you do not keep up your mortgage repayments or other loans secured on it. Written details upon request

என் ஞாபகப் பதிவிலிருந்து...

சுதந்திரா
(ஒரு பேப்பருக்காக)

1983 திருநெல்வேலியில தாக்குதலாம்.... பலாலியாமியளைப் பாதைமறிச்சு அடிச்சவையாம் புலிமாமாக்கள். எங்கும் பரபரப்பு. அம்பியப்பு வீட்டு வானொலியின் அருகில் ஒரே சனக்கூட்டம். சமாதிகோவிலடிச் சனம் முழுதும் அம்பியப்பு வீட்டு வாசலில்.

என்ன நடக்கப் போகுதோ...?

என்ன நடக்கப் போகுதோ...?

அங்கை வெலிக்கடையிலை வெட்டிப் போட்டாங்களாம்...?

கொழும்பெல்லாம் நெருப்பாம் , காடையள் கொழுத்திறாங்களாம்...!

கொழும்புத் தமிழரெல்லாம் யாழ்ப்பாணம் வருகினமாம்....!

'கறுப்பு யூலை
எங்கள் கன்னங்களெங்கும்
விழியருவி பெருகி விம்மல்களையும்
விடியலின் கனவுகளையும்
விழியேந்திய நாட்கள்..."

எங்களையும் வெட்டக் காடையள் வருவாங்களே...?

பிள்ளையாரே காப்பாத்து.

வேண்டுதலும் நேத்தியும் அந்த நம்பிக்கையில் துணியும் மனம்.

அந்த ரணம் அன்று தந்தவலி ஐயோ கடவுளே...!

எங்களுக்கேன் ஒருத்தருமில்லை....?

தமிழரெண்டாச் சுடுவினமாம் சிங்களவர்....

அந்தச் சின்ன வயசிலிருந்தே சிங்களவர் தமிழரைச் சுடுவதையும் வெட்டுவதையும் கேட்டுக் கேட்டே பயம் உயிரைத் தின்னப் பாதியிரவில் தூக்கம் போகும்.

ஊர் எல்லையில் ஊளையிடும் நாயின் சத்தம் உயிரை வறுத்தெடுக்கும். புலிமாமாக்களே வாருங்கள். எங்களைக் காப்பாற்றுங்கள். அழும் விழிகளில்....அவர்களில் சில முகங்கள் அமைதி தரும்.

பெரியமாமா என்னிலை உயிர். அம்மம்மாவும் என்னிலை நல்லபாசம். எனக்கெல்லாம் வாங்கித் தருவினம். தங்கைச்சிமார் பெரிசாச் சேராயினம் மாமாவோடை. மாமா கோயிலால் வருமட்டும் வாசலிலை நான் நிப்பன். மாமாவைக் கண்ட பிறகுதான் அம்மம்மான்ரை பாயிலை போய்ப் படுப்பன். ஒவ்வொரு நாளும் பின்னேரம் வீட்டுக்கு வந்தே மாமா தன்வீட்டுக்குப் போவார்.

அந்தவொரு காலைப் பொழுதின் விடியலை ஆமியின் வருகையே வரவேற்றது. ஊரங்குணை வயிரவர் கோவிலுக்குத் தென்கிழக்காக அமைந்த பெரியமாமாவின் வீட்டில் அன்று அழுகையொலி கேட்கும் என்பதை யாரும் நினைத்திருக்கவில்லை. இராணுவம் வெளியில் ஆட்களைப் பிடித்து அடிக்கிறார்கள் என்பதை அறியாத மாமா வெளியில் வந்தபோது யாருக்கும் தெரியாது அவர்களால் பிடிக்கப்பட்டு வதைக்கப்பட்டார். அந்த வதையில் வதைபட்டுக் கொண்டிருந்தோரில் அருளப்புவின் இரண்டாவது மகன் சிவத்தானண்ணையும் இருந்தார். பெரிய மாமாவின் மீது பெரும் மரியாதையும் உண்டு. ராசண்ணை என்று மாமாவை அழைக்கும் சிவத்தானண்ணைக்கு அவர்கள் சொன்னார்களாம்.

அடியடா அவனுக்கு...!

எங்கள் பண்பாடே முத்தோரை மதிக்கும் பண்பாடு. இன்னும் அருமையான விழுமியங்களைக் கொண்ட எமது பண்பாட்டில் வளர்ந்த சிவத்தானண்ணையால் எப்படி மாமாவை அடிக்க முடியும்....? அவர் அதற்குப் பின் வாங்க அவர் மீதான தாக்குதல் அதிகரிக்கத் தன் வேதனையால் அவர்கள் சொன்னது போல் பெரியமாமாவுக்கு அடித்தாராம். அன்றிலிருந்து சிவத்தானண்ணை மாமாவுடன் கதைக்கிறதேயில்லை. மாமா கண்டு கூப்பிட்டாலும் ஒளித்துவிடுவார். ஏனென்று கேட்ட நண்பர்களுக்குச் சொல்லி வேதனைப் படுவாராம். ராசண்ணையை நான் கை நீட்டி அடிச்சிட்டன்.

ராசனை ஆமி பிடிச்சுப் போட்டுதாம், அருளற்றை சிவத்தான், இராசையான்ரை வசி, பூமணியின்ரை தாசன் எண்டு கனபெடியளாம். வசியையும், தாசனையும் விடேல்லயாம்....மற்ற வங்களை அடிச்சுப்போட்டு விட்டிட்டாங்களாம். சமாதிகோவிலடியிலிருக்கும் எங்களுக்கு பெரியத்தையின் அக்காவின் மகன் ஜெகதீசன் வந்து சொன்னான். மாமாக்கு ஆமி அடிச்சுப் போட்டானாம்.....என்னாலை அழாமல் இருக்க முடியேல்ல....எங்கடை வீட்டிலை எல்லாரும் அழுதினம். பாவம் பெரியமாமா.... அம்மம்மாவும் நானும் அழுதுகொண்டு எங்கடை றோட்டாலை வெளிக்கிட்டுப் பேச்சியம்மன் ஒழுங்கைக்காலை போய் அருளப்பு வளவுக்காலை அப்பிடியே மாமா வீட்டை போட்டம். மாமா வீட்டுக் குந்திலை இருந்தார். பெரியத்தையும், சிவானந்தியக்காவும் அழுது கொண்டிருந்திச்சினம், பக்கத்து வீட்டு ஆக்களெல்லாம் வந்து நிண்டினம். அழுது கொண்டு நிண்ட என்னை மாமா தூக்கி வைச்சிருந்தார். அம்மம்மா மாமா வின்ரை காயங்கைளைத் தடவித் தடவி அழுதா..

வசியையும், தாசனையும் வெலிக்கடைக்கு அனுப்பீட்டாங்களாம்.... படித்துக் கொண்டிருந்த அந்த இளைஞர்கள் இருவரும் வெலிக்கடையின் சிறைக் கதவுகள் பின்னால்..... அவர்களது கனவுகள், கற்பனைகள் எல்லாமே அந்தச் சிறைக் கம்பிகளுக்குப் பின்னால் உடைந்து நொருங்கி அவர்களது உறவுகளின் நிம்மதி, சந்தோசம் எல்லாம் உடைந்து சிதிலமாகி..... அவர்களைத்தேடிப் பலாலிக்கும், கழுத்துறைக்குமாய் அவர்களின் பெற்றோரும் உறவினரும் போய்த் திரிந்து..... சில் மாதங்களின் பின் விடுதலையாகி.....

இனிப்படிப்பு வேண்டாம், எங்கையாவது உயிரோடையிருந்தாக் காணும் என அவர்களது பெற்றோர்கள் அவர்களைப் புலம் பெயர்ந்து அனுப்பினார்கள். ஊர் பிரிந்து உறவுகள் அழுது அவர்கள் ஐரோப்பிய நாடொன்றில் அகதியாக.....

இன்றைய சிந்தனை

பே....!??!!!

இன்றைக்கு
இரவு
12 மணிக்கு
உன் அறைக்கு
பேய் வரும்.
அது வரும் பொழுது
லைட்டை மட்டும் போட்டு விடாதே
பாவம், பேய் பயந்துடும்.

ஒருமுறை

ஒருமுறை நீ இருமினால்,
நான் உன்னை நினைக்கிறேன் என்று
புரிந்துகொள்

இருமுறை நீ இருமினால்,
நான் உன்னை பார்க்க விரும்புகிறேன்
என்று புரிந்துகொள்

மூன்றுமுறை நீ இருமினால்,
நான் உன்னை விரும்புகிறேன் என்று
புரிந்துகொள்

நான்குமுறை நீ இருமினால்,
போய் உடனே டொக்டரைப் பார்.
உனக்கு டிபி.

– யோசிப்பவர்

MARKANDAN & CO
SOLICITORS & ESTATE AGENTS

We have moved... to
845 Romford Road



குடும்பத்தினருக்கான சலுகை அடிப்படையிலான விண்ணப்பங்கள்

விவாக விண்ணப்பங்கள்

அகதி விண்ணப்பங்கள்

14, 10 அல்லது 7 வருட வதிவிட தகமை விண்ணப்பங்கள்

பிரித்தானிய பிரஜாவுரிமை

வீதிப் போக்குவரத்து சம்பந்தமான வழக்குகள்

We also Specialise in....

- ஒப்பந்த தகராறுகள்
- நுகர்வோர் பிரச்சினைகள்
- மரண சாசனம் உறுதி தயாரித்தல்
- Bankruptcy Problems
- மதுபான அனுமதிகள்
- கட்டட அனுமதிகள்
- Cafe அனுமதிகள்
- House/Flat Purchase or Sale
- Remortgages
- Right to Buy
- Highly skilled migration
- Power of Attorney
- Sponsorship for UK Visas
- Work Permit application
- Civil Litigation

01.02.2005 முதல் அமுலுக்கு வந்துள்ள பிரித்தானிய அரசாங்கத்தின் சட்டத்தின் பிரகாரம் இந்நாட்டில் திருமணம் புரியவிருப்பின் நீங்கள் பிரித்தானிய உள்துறை அமைச்சின் முன் அனுமதி (Home Office Clearance) பெற்றிருத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பங்களுக்கும் ஆலோசனைகளுக்கும் எங்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

No win – No fee

விபத்தில் அல்லது வேலை ஸ்தலத்தில் காயம் அடைந்திருந்தால் நட்டஈடு கோருவது சம்பந்தமான விடயங்கள் அடிப்படையில்

எல்லாவிதமான சட்ட சேவைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

845 Romford Road, Manor Park, London, E12 6JY
Tel: 020 8514 8188 Fax: 020 8514 8303
web: www.markandan-solicitors.com
e-mail: mm@markandan-solicitors.com

எங்கள் கட்டணம் மிகவும் குறைந்ததும் நியாயமானதும் ஆகும்.
ஆரம்ப ஆலோசனைகள் இலவசமானவை.
வார இறுதி ஆலோசனைகள் வசதியாகவும் ஒழுங்குபடுத்தி தரப்படும்.

சாத்திரியின்

குட்டி நாடகம்

அங்கம் - 3

திரை விலகுகிறது

[சின்னாவை சங்கிலிகளால் கை மற்றும் கால்கள் பிணைத்தபடி [சேது படத்தில் விக்ரத்தை போல] கொண்டு வந்து காவலர்கள் வீதியின் ஓரத்தில் ஒருமரத்தில் கட்டிவிட்டு பக்கத்திலிருந்த பெட்டி கடைக்கு ரீ குடிக்க போய்விட்ட சமயம் அந்த வழியால் வந்த நாரதர் சின்னாவின் காதில் மின்னி கொண்டிருந்த வைரக் கடுக்கனை கண்டுவிட்டு அதை எப்படியாவது சுட்டுவிட எண்ணி ஒரு பாட்டுடன் சின்னாவை நோக்கி வருகிறார்.]

நாரதர்: (பாடுகிறார்) உள்ளத்தில் கள்ள உள்ளம் உறங்காதென்பது வள்ளுவன் வகுத்ததடா கறுணா வருவதை எதிர் கொள்ளடா

சின்னப்பு: (மெல்ல தலையை தூக்கி பாத்து) எவண்டா அவன் நான் நாப்பது தரம் பாத்த கர்ணன் பட பாட்டை பிழையா படிக்கிறது

நாரதர்: நாராயணா நாராயணா

சின்னா: ஏன்டாப்பு யாரவன் ஒரு பெயரை உனக்கு இரண்டு தரம் வைச்சது

> *அட பாவி பயலுகளா இந்த உலகிலைதான் களவும் கொள்ளையுமெண்டா தேவலோகத்திலை இருந்து வேறை களவெடுக்க வாறாங்களய்யா.*

நாரதர்: மகனே அது எனது பெயர் அல்ல. அது எம்பெருமான் கிருஸ்ணனின் மறுபெயர்.

சின்னா: நான் உனக்கு மகனா? குடும்பத்துக்கை குழப்பத்தை உண்டு பண்ணினா உன்னை கொலை பண்ணிடுவன். அதுசரி நீர் யார் எங்கையிருந்து வாறீர் இப்பிடி கோமாளி மாதிரி வேசத்தோடை.

நாரதர்: அய்யனே கோவம் வேண்டாம். நான் தேவலோகத்திலிருந்து வருகிறேன். இந்திரன் என்னை இங்கு அனுப்பியிருக்கிறான்.

சின்னா: (ஆச்சரியமாக) உண்மையாவா? இல்லை வேசம் போட்டுக் கொண்டு வந்து கதை வுடுறியா?

நாரதர்: எம்பெருமான் நாராயணன் மேல் ஆணை நம்புங்கள். நான் இந்த வழியால் வந்து கொண்டிருந்த போதுதான் தங்களை கட்டி போட்டிருந்ததை கண்டேன். என்ன நடந்தது என்று எனது ஞானக் கண்ணால் கண்டு அறிந்து கொண்டேன் அதுதான் உமக்கு உதவ வந்தேன்.

சின்னா: ஞானக் கண்ணால் கண்டீரா? உமக்கு இருக்கிறதே ஒண்டரை கண் இதுக்கை ஞானக் கண் வேறையா. சரி எப்பிடி எனக்கு உதவ போறீர்.

நாரதர்: நீர் போதையின் பாதையில் போய் பாவங்கள் பல செய்திருக்கிறீர். அதற்கு பரிகாரமாக உமது காதில் இருக்கும் கடுக்கனை என்னிடம் தந்துவிடும். உமது பாவங்கள் போய் உம்மை விடுதலை செய்து விடுவார்கள்.

சின்னா: அட்ரா அட்ரா அதுதானே பாத்தன் என்னடா எனக்கு உதவ போறாராம் எண்டு. நான் பாவம் எல்லாத்தையும் கடுக்கனா செய்து காதிலை மாட்டி இருக்கிறனா அதை கழட்டின உடனை பாவம் போறத்திற்கு. அதெல்லாம் கழற்ற ஏலாது என்னை எப்படியும் என்ரை சின்னாச்சி வந்து காப்பாத்துவாள். சரி அதை விடும். அங்கை தான் ரம்பா ஊர்வசி மேனகா எண்டு நல்ல வடிவான பிகருகள் இருக்காமே பாத்திருக்கிறீரா அவங்களை (எண்டு ஜொள்ளு வடிய கேக்கிறார்)

நாரதர்: அடடா லொள்ளை பார். உம்மை கட்டி போட்டிருக்க கூடாது வெட்டி போட்டிருக்க வேணும்

சின்னா: நீர் உண்மையாவே தேவலோகத்திலிருந்துதான் வாறீரா எண்டு பாக்கதான் கேட்டனான்

நாரதர்: ஓ அப்படியா அந்த சோகத்தை ஏன் கேக்கிறீர்.

சின்னா: அங்கையும் சோகமா?

நாரதர்: சும்மா குறுக்கை பேசக் கூடாது நான் சொல்லுறதை கேளும். இந்த அழகிகளின் ஆட்டத்தையே பாத்து பாத்து அலுத்து போன எங்கள் அரசன் இந்திரன் அவர்களை சில காலம் பூலோகத்திற்கு போய் அங்கு எம் தமிழர் களிற்கு அவர்களது கலைச் சேவையை செய்து வரும்படி அனுப்பி விட்டான்.

சின்னா: அடங்கொக்கா மக்கா எனக்கு தெரியாமல் போச்சே.

நாரதர்: ஆமாம் அவர்கள் இங்கு வந்து தமிழ் சினிமாவில் சேர்ந்து கலைச்சேவை செய்து கொண்டிருந்த போது ஊர்வசி மார்க்கட்டு டல்லாகி சான்ஸ் இல்லாமல் கேரளா பக்கம் ஒதுங்கிட்டார் ரம்பாவும் அதுபோல தெளுங்கு பக்கம் போட்டார். இந்த மேனகா மட்டும் தனரை பெயர் ராசியில்லையெண்டு மௌனிசா எண்டு பெயரை மாத்தி வைச்சு கொண்டு தொலைக்காட்சி தொடரிலை காலத்தை ஓட்டிக் கொண்டு இருக்கிறா இதையெல்லாம் பாத்து நானும் சோகத்திலை திரும்பவும் தேவலோகம் போக மனமில்லால் இங்கையே சுத்திக் கொண்டு திரியிறன்.

சின்னா: அட சே இவங்கதானா அந்த ரம்பா ஊர்வசி நானும் ஏதோ பெரிசா கற்பனை பண்ணி வைச்சிருந்தன் இவங்களை விட என்ரை திரிசா எவ்வளவோ ஆயிரம் மடங்கு அழகு

[என்று சூறிக் கொண்டு கண்களை மூடி திரிசாவை கற்பனை பண்ண அதுதான் சமயம் என்று நாரதர் பாய்ந்து சின்னாவின் காதிலிருந்த கடுக்கனை கழற்றி கொண்டு ஓடுகிறார்)

சின்னா: அட பாவி பயலுகளா இந்த உலகிலைதான் களவும் கொள்ளையுமெண்டா தேவலோகத்திலை இருந்து வேறை களவெடுக்க வாறாங்களய்யா. என்ன கொடுமை. சரி சரி அது ஏதோ ஒறிசினல் வைரம் எண்டு நினைச்சு கழட்டி கொண்டு ஓடுறான் விக்க போற இடத்திலை கட்டி வைச்சு அடிக்க போறாங்கள் அப்ப தெரியும். நேரமும் போய்க் கொண்டிருக்கு இவள் சின்னாச்சி வந்து எப்பிடியும் காப்பாத்துவாள் எண்டு நம்பி கொண்டிருக்கிறன் அவளையும் காணேல்லை கடைசிலை தூக்குதான் போலை கிடக்கு

காட்சி மாறுகிறது மன்னரின் அரண்மனை

மண்ணர்: மந்திரியே சாத்திரி வேறு சாமத்திலை சமையல்காரன் சின்னாவை தூக்கிலை போட சொல்லிட்டார் அதுவரை நித்திரை வராமல் இருக்க ஏதாவது விழையாட்டு விளையாடலாமா?

> *நான் அல்லியோடைதான் போய் ஒளிப்பன். நீர் கண்ணை மூடி 500 வரை எண்ணிட்டு அதுக்கு பிறகு ஒரு அரை மணித்தியாலம் கழிச்சு தேட தொடங்கும்*

மந்திரி: நன்று மன்னா அதைதான் நானும் யோசித்தேன் எல்லாரும் சங்கீத கதிரை விளையாட்டு விளையாடுவோமா? அரண் மனையிலுள்ள கதிரைகள் எல்லாத்தையும் எடுத்து வட்டமாக அடுக்கி ...

மண்ணர்: நிறுத்தும் எனக்கு தெரியும் உமக்கு எனது சிம்மாசனத்தில் கன காலமா ஒரு கண் அதில் எப்பிடியும் ஒருக்கா அமர்ந்துவிட துடிக்கிறீர் அது நடக்காது வேறு விளையாட்டு விளையாடலாம்

மந்திரி: அய்யோ அப்பிடியெல்லாம் இல்லை மன்னா. அப்ப நீங்களே ஒரு நல்ல விளையாட்டா சொல்லங்கள் விளையாடலாம்.

மண்ணர்: ம்.....ஆ ஒளித்து பிடித்து விளையாடலாம் நாங்கள் ஓடிப் போய் ஒளிக்கிறோம் மந்திரி நீர் கண்டு பிடியும் வா அல்லி நாங்கள் அரண்மனையின் அடிவளவில் போய் ஒளிக்கலாம் (என்று கூறி அழகி அல்லியின் கையை மன்னர் பிடிக்க)

மந்திரி: மன்னா இந்த விளையாட்டில் சட்டப்படி சோடியாக ஒளிக்க கூடாது தனித் தனியாக தான் ஒளிக்க வேண்டும்

மண்ணர்: ஆமா இது பெரிய ஒலிம்பிக் விளையாட்டு இதுக்கு சட்ட திட்டம் எல்லாம் பாக்க. யோவ் நான் இந்த நாட்டு மன்னன் சொல்லுறன் நான் அல்லியோடைதான் போய் ஒளிப்பன். நீர் கண்ணை மூடி 500 வரை எண்ணிட்டு அதுக்கு பிறகு ஒரு அரை மணித்தியாலம் கழிச்சு தேட தொடங்கும்

[மண்ணர் அல்லியின் கையை மீண்டும் பிடிக்க அரண்மனை ஆராச்சிமணி ஒலிக்கிறது அனைவரும் வாசல் பக்கம் பார்க்க திரை விழுகிறது]

தொடரும்.

பாரே பார்

பாரே உந்தன் இதயம் உள்ள
பக்கம் கையை வைத்துப் பார்
வீட்டை விதியை எண்ணித் தினமும்
விழிகள் கலங்கும் எம்மைப் பார்

புத்தர் சொன்ன போதனை மறந்து
புதைகுழி தோண்டும் அரசைப் பார்
பாதகர் பக்கம் நின்றே தினமும்
பரிந்து பேசும் பாரே பார்

அல்லற் பிட்டியில் வழிவழி வாழ்ந்தோர்
அல்லற் பட்டு மடிவதைப் பார்
அகதிகளாய்த் தினம் இருப்பிடம் தேடி
அலைபவர் துயர முகத்தைப் பார்

கடலிற் சண்டை செய்திட நடுங்கும்
காமுகர் கொடுமை கிணற்றில் பார்
கன்னியர் தங்கள் சுதந்திரம் தேடிக்
கருவியை எடுத்த காரணம் பார்

பால்மணம் மாறாப் பாலகன் கூடப்
புலியாய் மாறிய புதினம் பார்
பயங்கர வாதிகள் யாரெனக் கடிதில்
பகுத்து அறிந்து பதில்தரப் பார்

சிறுவரைப் படையில் சேர்ப்பது முறையோ
சினந்தே கேட்கும் படித்தவர் நீர்
சிறுவரைப் படுக்கையில்
கொல்வதும் முறையோ
சிந்தித் தெமக்குப் பதில்தரப் பார்

பேனா முனையின் வலிமை கண்டு
பொருமும் சிங்கள அரசைப் பார்
சிறுமையை தனது எழுத்தால் சொன்ன
சிவராம் உயிரைக் குடித்தனர் பார்

புனிதரின் பிறப்பில் பிரார்த்தனை செய்கையில்
புலையனை ஏவியே விட்டனர் பார்
மனிதரின் உரிமையைக் காத்திட முனைந்த
மனிதரின் உயிரும் போனது பார்

ஒட்டுப் படையுடன் ஒட்டும் அரசை
ஒட்ட நறுக்க முயன்றே பார்
சட்டம் ஒழுங்கை காக்க மறுத்த
மட்ட அரசை முடக்கப் பார்

சமமாய் எமக்கு உரிமையைக் கொடுக்க
சிங்கள அரசைக் கேட்டுப் பார்
முடியா விட்டால் மூலையில் நின்று
மறவர் படையின் வீரம் பார்

அடிக்க அடிக்க ஓடிய தமிழன்
அழிவைக் கொடுக்கப் போறான் பார்
அடங்காத் தமிழன் அடிக்கும் அடியில்
அடங்கும் சிங்களக் கொட்டம் பார்

நீதி மாதா உலகை விட்டு
நிரந்தரமாய்ப் போய் விட மாட்டாள்
நியாயம் உள்ள பக்கம் வந்து
நீயும் பேசும் நாள்வரும் பார்

- *மணிவாசகன்*

CTWA
CROYDON TAMIL WELFARE ASSOCIATION (U.K)

கிராய்டன் "தமிழ்" நல்வாழ்வுச் சங்கம்

விழிப்புலன் இழந்தோர்க்கும், விழிப்புலன் குன்றியோர்க்கும் இத்துறையில் முறையாக பயின்று பட்டம்பெற்று 13 ஆண்டுகள் அனுபவம் பெற்ற ஆசிரியையால் Brille Reading & Writing கற்றுத்தரப்படும்.
ஆசிரியை: ரெஜீனா பூதோட்டா Bsc. B.Ed. Diploma in Teaching The Primary School - Children

அத்துடன் பிரித்தானிய நிரந்தர குடியுரிமை கோருவோர் எழுதவேண்டிய தேர்வுக்குரிய ஆங்கிலம் பயிற்சியும், குறுகிய நாட்களில் ஆங்கிலத்தில் சரளமாக பேசுவதற்கும், தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களால் இருபாலார்க்கும் வகுப்புகள் நடாத்தப்படுகின்றது

மேற்படி விபரங்கட்கு:-
கிராய்டன் தமிழ் நல்வாழ்வுச் சங்கம;
15, Thornton Road, Thornton Heath, Croydon CR7 6BD

Tel: 0208 665 0444
Mob: 0774 045 7639

அறுவைப் பக்கம்

கோடம்பாக்கமும் குத்துப்பாட்டும்

குத்துப் பாடல்கள் எப்படி உருவாகின்றன என்கிற தெய்வீகக் காட்சியை இப்போது உங்கள் கண்முன்னே நிகழ்த்திக் காட்டுகிறார்கள் இசை அமைப்பாளர் "இசை இம்சை'' ரா.ரா. ராக்கப்ஸ், பாடலாசிரியர் "கவிக் குத்து'' பேட்டைப்பரியன், "இயக்குநர் நரகம்'' ஸீன் சிங்காரம், பாடகர் பாவ்பாவ்ஸ்ரீ கழுர்.

டைரக்டர்: பாடகரு வந்துட்டாரு, மியூசிக் டைரக்டர் வந்துட்டாரு, எல்லாம் ரெடியா இருக்கு. கவிஞரே கலீஜா "கப் கப்" புன்னு நாலு வரியை எடுத்து விடுங்க. இன்னிக்கு இந்த சாங்கை தீர்த்துக் கட்டிடணும்.

கவி: அசத்திப்புடலாம். சிச்சு வேஷனைச் சொல்லுங்க...

டைரக்டர்: என்ன இப்படி டப்புன்னு கேட்டுப்புட்டீங்க.. கதையையே யோசிக்கல்ல அதுக்குள்ள சிச்சு வேஷனுக்கு நான் எங்க போறது, எதையாவது எழுதுங்க.

இசை: சிச்சுவேஷன்தானா, நான் சொல்லுறேன். ஹீரோ ரோட்டுல மிட்நைட்டுல போறான். அப்ப கீழ்க்கேடக்குற ஒரு காலி டின்னை உதைக்கிறான். அது நிலவைப் போயி தொட்டுட்டு கீழ ஒரு பொண்ணு உருவத்துல வந்து விழுது. அப்புறம் குரூப்பா ஒரு பஸ்ல இருந்து இளசுங்க கூட்டம் ஒண்ணு எறங்குது. எல்லாரும் சேர்ந்து குத்தாட்டம் போடுறாங்க...!

பாடகர்: வாரே வாவ்! அச்சா சிச்சுவேஷன். நீங்க நல்லா எழுதுது! நான் பக்காவாப் பாடுது!

டைரக்டர்: கலக்கிப்புட்டீங்க! இதுல இருந்தே கதைய ஃபுல்லா டெவலப் பண்ணிருவேன். ம், வார்த்தைகளை போட்டுத் தாக்குங்க!

இசை: ஆமாமா, ஆரம்பிக்குற பல்லவியே பல்வலி ரேஞ்சுல தூக்கணும் பட்டையக் கௌப்புங்க!

கவி: (தன் மோவாயில் மொத்த விரல்களையும் வைத்துச் சிந்திக்கத் தொடங்குகிறார்.) வந்துடுச்சி... வந்துடுச்சி... (பாத்ரூமுக்குள் போய் விட்டு 10 நிமிடம் கழித்துத் திரும்ப வருகிறார்.)

டைரக்டர்: ஏதாவது வந்துச்சா?

கவி: அய்யோ...அய்யோ...என்னமா வந்திருக்கு தெரியுமா! எனக்கு புல்லரிச்சுக்கிட்டே இருக்கு.

பாடகர்: அச்சா! சொல்லுங்கோ, என் காது அரிக்குது!

வா வா வா பால்கோவா – தா தா தா வாங்கித் தா!

மா மா மா உப்புமா – தா தா தா கிண்டித் தா!

உன் வாய் கால்வாய் – என் வாய் செவ்வாய்!

செவ்வாயில் கால்வாயை வெட்டப் போறேன்!

உன் கை உடுக்கை என் கை உலக்கை – உலக்கையால் உடுக்கையைத் தட்டப் போறேன்!

டைரக்டர்: மேல போ வாத்யாரே!

கவி:

ஆப்பம் தோசை அப்பள வடை – கிடைக்குமிடம் ஆயாக் கடை!

இசை: சூப்பரு.. இந்தப் பல்லவி முடியுற இடத்துல வாய்க்குள்ள நுழையாத வார்த்தை ரெண்டைப் போட்டா சாங் பத்திக்கும்.

கவி: இந்தா வெச்சிக் கோங்க!

ஆப்பம் தோசை அப்பள வடை – கிடைக்குமிடம் ஆயாக் கடை

ப்புர்றாங்கோ ப்புர்றாங்கோ –கர்ச்சீப்பு த்தூறாங்கோ!

டைரக்டர்: ஆஹா... கவித! கவித! அப்படியே அதே ஸ்பீடுல சரணத்தையும் சாகடிங்க!

பாடகர்: ஆமா.. சென்டமில் வேர்ட்ஸ் நீங்க சர்னத்துல எழுதுது. நான் நல்லாப் பாடுது!

இசை: ஆமா, இந்தச் சரணத்துல ஆழமா ஒரு மெஸஜ் வைக்கணும்.

கவி: அம்புட்டுத்தானே...பின்னிப் பெடலெடுத்துடுறேன்!

விரலு அனுப்பும் எஸ்.எம்.எஸ் –குரலு வந்தா வி.எம்.எஸ்!

நான் பாட்டுப் பாடுற டி.எம்.எஸ் – நீ ரோட்டுல போற பிரேக் டவுன் பஸ்!

இசை: அப்படித்தான்.. அப்படித் தான்.. அப்படியே டாப் கியர்ல போட்டுத் தூக்குங்க!

கவி:

செந்தமிழு தேன்மொழி –கண்ணம்மா பேட்டைக்கு இதுதான் வழி!

டிவ்யூம் குத்துச் சத்தம் – கடலைத் தின்னாப் பித்தம்!

டைரக்டர்: காதெல்லாம் கதறுது! பேச முடியாம உதடெல்லாம் உதறுது! ஐயா... இதே வேகத்துல ரண்டாவது சரணத்தையும் எடுத்து வுடுங்க! இதுல லவ் ஃபீலிங் கொஞ்சம் தூக்கலா இருக்கணும்!

கவி: லவ்வுதான், இந்தா ஜிவ்வுன்னு கேளுங்க!

மூக்கடைச்சா போடு விக்ஸ் – பந்து கிடைச்சா அடி சிக்ஸ்!

ஃபிகரு போனா வடு லுக்ஸ் – நீயும் நானும் இன்ஸ்டண்ட் மிக்ஸ்!

பாடகர்: எனக்கு கண்ணுல தண்ணி வர்து! மேல சொல்லுங்கோ!

கவி:

உன் முழி திருட்டு முழி –சென்ட்ரல்ல கிடைக்கும் கேப்பைக் களி!

தப்பாம வா தப்புப் பண்ணிட்டு வா – தப்புத் தப்பாத்தான் கம்பி எண்ண வா!

லப்பு டப்பு ஹார்ட்டு சத்தம் – லிப்பும் லிப்பும் சேர்ந்தா முத்தம்!

இசை: சூப்பரு... எனக்கு அப்படியே செவத்துல முட்டி முட்டி சந்தோஷமா சிலிக்கணும் போல இருக்கு! என் நரம்புருள்ள அப்படியே மெட்டு தாண்டவமாடுது.

டைரக்டர்: வுடாதீங்க! நீங்க தட்டுற மெட்டுல அவனவன் காது பஞ்சராகி அலைபணும்! ஆரம்பிங்க!

– முகில்

அது நான்தான்

சிறிலங்கா நாட்டு ஜனாதிபதி விஜயதுங்க ஒருமுறை இந்தியாவிற்கு சென்றிருந்த போது ஜனாதிபதி அப்துல் கலாமுடன் உரையாடிக் கொண்டிருந்தார். ஜனாதிபதிகளை மக்கள் நேசிப்பதற்கான தலைமைத்துவ ஐடியா சொல்லும் படி அப்துல் கலாமிடம் கேட்டார். அதற்கு அப்துல் கலாம் விஜயதுங்கவிடம், "தன்னைச் சுற்றி இருப்பவர்கள் புத்திசாலிகளாக இருக்க வேண்டும்" என்றார். அவர்கள் புத்திசாலிகளா இல்லையா என்பதை எப்படி நான் அறிந்து கொள்வது? என்றார் துங்கா. இப்போது அதை உங்களுக்கு செய்து காட்டுகிறேன் என்றவாறு பிரதமர் மன்மோகன் சிங்கை போனில் அழைத்தார் ஜனாதிபதி அப்துல் கலாம்.

கலாம்: பிரதமர் மன்மோகன் ஜி! தயவு செய்து இந்தக் கேள்விக்கு பதில் சொல்லுங்கள்! "உங்கள் தாயாருக்கும் தந்தைக்கும் ஒரு குழந்தை இருக்கிறது. அந்தக் குழந்தை உங்களுக்கு சகோதரியோ அல்லது சகோதரனோ அல்ல! எனில் யார் அது?" என்று கேட்டு தனது போனின் ஸ்பீக்கரை ஓன் செய்தார்.

மன்மோகன்: (உடனடியாக) அதுதான் நான்! என்றார்.

கலாம்: மிகச் சரியாகச் சொன்னீர்கள் பிரதமரே! மிக்க நன்றி! என்றவாறு ஸ்பீக்கரை ஃப்ப் செய்துவிட்டு விஜயதுங்கவைப் பார்த்து புன்னகைத்தார். விஜயதுங்க: "கொந்த" ஐடியாவாக இருக்கிறது. இதே முறையை நானும் செய்து பார்க்கிறேன்!

சிறிலங்கா திரும்பியதும் ஜனாதிபதி மாளிகையில் தன் சகாக்களிடம் இதே கேள்வியைக் கேட்டார் துங்கா. முதலில் ராஜபக்சவிடம் கேட்டார். ராஜபக்ச தன் தலையைச் சொரிந்து கொண்டே, யோசித்துச் சொல்கிறேன்! கொஞ்சம் டைம் வேண்டும் என்றார். விஜயதுங்க சரி சொல்லி விட்டார்.

உடனடியாக ஜனாதிபதி மாளிகையின் சீனியர் பெரும் புள்ளிகளை அழைத்த ராஜபக்ச, இதே கேள்வியை அவர்களிடம் கேட்டார். யாருக்குமே பதில் தெரியவில்லை. ஏமாற்றத்துடன் 'ஓசியை' அழைத்து அதே கேள்வியைச் சொன்னார்.

ராஜபக்ச: "உங்கள் தாயாருக்கும் தந்தைக்கும் ஒரு குழந்தை இருக்கிறது. அந்தக் குழந்தை உங்களுக்கு சகோதரியோ அல்லது சகோதரனோ அல்ல! எனில் யார் அது?"

ஓசி: ஹஹ்ஹா! அது தான் நான்! என்றார்

மிகுந்த சந்தோசத்துடன் ஜனாதிபதி மாளிகையில் விஜயதுங்கவின் அறைக்குள் நுழைந்த ராஜபக்ச "எனக்கு விடை தெரியும்! அது எமது ஓசி அபேகுணவர்த்தன!" என்றார். இதனைக் கேட்ட விஜயதுங்க ஏளனமாக, சிரித்துவிட்டு "தவறு! அது மன்மோகன் சிங்! சந்தேகம் இருந்தால் இந்திய ஜனாதிபதி அப்துல் கலாமிடம் கேட்டுப் பாரும்!" என்றார்.

– அ.தி.காரன்

அப்பிடி என்னத்த மச்சான் எழுதி இருக்கிறாள்?

என்ன கிரியேட்டிவிட்டி

ஒரு பூனை சொர்க்கம் போனது கடவுள், "நீ வாழ்நாள் முழுக்க ஒரு நல்ல பூனையாக இருந்தாய் சொர்க்கத்தில் உனக்கு என்ன வசதிகள் வேண்டும்?"

"எனக்கு பூமியில் தூக்கமே இல்லை அதனால் ஒரு தலையணை தந்தால் போதும்" உடனே தரப்பட்டது அதுவும் சந்தோஷமாக போனது அடுத்த சில நாட்களில் 5 எலிகள் வந்தன, அவற்றிடமும் கடவுள் கேட்டார், "தாங்கள் பூமியில் பூனைகளிடமும் மனிதர்களிடமும் ஓடியே சலித்து விட்டோம் எங்களுக்கு ரோலர் ஸ்கேட் வேண்டும்" என்றன, அவரும் தர சந்தோஷமாக விடை பெற்றன சில நாட்களில் கடவுள் பூனையிடம், "சொர்க்கம் எப்படியிருக்கிறது?" என்றார்.

"மிகவும் அருமை இந்த தலையணை உறங்க அருமையாக இருக்கிறது அதுவும் சாப்பாட்டை ரோலர் ஸ்கேட்டில் அனுப்புகிறீர்களே என்ன கிரியேட்டிவிட்டி!"

– ஜோக்காடு

சினித்துளி

கடவுள் !

அஜீத்குமார் நடித்த திருப்பதி படம் ரிலீஸ் ஆகி 50 நாட்களுக்கு மேல் ஆகிறது. இந்த படத்துக்கு பின் டைரக்டர் பாலா இயக்கும் நான் கடவுள் படத்தில் அஜீத் நடிக்க முடிவானது. இதற்காக தனது கெட்டப்பை அஜீத் மாற்றினார். தலையில் நீளமாக முடியும் வளர்த்தார். ஆனாலும் படப்பிடிப்பு தொடங்கவில்லை. இதுபற்றி அஜீத்குமாரிடம் கேட்டபோது "நான் கடவுள்" படத்தில் இருந்து விலகியது உண்மைதான். படப்பிடிப்பு மே 1-ந்தேதி தொடங்குவதாக இருந்தது. ஆனால் இதுவரை படப்பிடிப்பை தொடங்குவதற்கான எந்த அறிகுறியும் இல்லை. இனிமேலும் என்னால் காத்திருக்க முடியாது. அதனால் விலகி விட்டேன் என்கிறார் அஜீத்குமார்.

அரசியல்ல !

சிம்ரன் தமிழகத்தின் தேர்தல் பிரசாரம் முடிந்த கையோடு தெலுங்கு நடிகர் ராஜசேகர் தனக்கு ஜோடியாக தெலுங்கு படத்தில் நடிக்க சிம்ரனை ஒப்பந்தம் செய்தார். மீண்டும் கதாநாயகியாகும் மகிழ்ச்சியில் சிம்ரன் இருந்தார். தெலுங்கு பட உலகத்தினர் பங்கேற்க இதற்கான பட பூஜையும் சமீபத்தில் நடந்தது. 'லயன்' என்ற மலையாள படத்தின் மறுபதிப்புதான் இந்தப் படம். படப்பிடிப்பு தொடங்கும் வேளை சிம்ரனை படத்தில் இருந்து நீக்கி விட்டதாக தகவல் வெளியாகி உள்ளது. சற்று குண்டாகி இருப்பதால் கதாநாயகி வேடத்துக்கு அவர் பொருத்தமாக இல்லை என்று ராஜசேகர் கருதுகிறாராம். வேறு நாயகி தேடுகிறார்கள். அரசியல்ல இதெல்லாம் . . .

ஐஸ்வர்யாராய் !

ஐஸ்வர்யாராய் முதல் முறையாக வங்காள மொழி படமொன்றில் அரை நிர்வாணத்தில் நடித்துள்ளார். இந்தியில் ரேகா, ஜீனத் அமன், மல்லிகா ஷெராவத், மேக்னா நாயுடு போன்றோர் ஆபாசமாக நடித்துள்ளனர். அவர்களை மிஞ்சும் வகையில் ஐஸ்வர்யாராய் கவர்ச்சியாக இருப்பதாக பட உலகினர் ஆச்சரியப்படுகின்றனர். படத்தை பார்த்த தணிக்கை குழுவினர் ஐஸ்வர்யாராயா இது என்று கேட்டு அதிர்ச்சி அடைந்தனர். சான்றிதழ் அளிக்கவும் மறுத்தனர். படத்தின் இயக்குனர் ரிதுபர்ன கோஸ் போராடி அனுமதி பெற்றுள்ளார். ஹொலிவுட் படத்தில் மேலாடையின்றி நடிக்க மறுத்தவர் ஐஸ்வர்யாராய் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

வாளமீன் !

கருப்பட்டிதான் எனக்கு பிடிச்ச கலரு என்று வெற்றிக் கொடி கட்டு படத்தில் ஆடிப் பாடி கலக்கிய மாளவிகா பிறகு வாய்ப்பின்றி சும்மா இருந்தார். ஒன்றிரண்டு படங்களில் சிறு வேடங்களில் தலை காட்டினார். வருமானமும் படுத்தது. இப்போது சித்திரம் பேசுதடி படத்தில் வாள மீனுக்கும் விலாங்கு மீனுக்கும் கல்யாணம் பாட்டுக்கு அவர் போட்ட ஆட்டம் பட்டி தொட்டி எங்கும் மீண்டும் கலக்கி உள்ளது. மாளவிகா தொடர்ந்து ஒரு பாட்டுக்கு ஆட சம்மதித்துள்ளாராம். அதற்கு சம்பளம் பதினைந்து லட்சம் ரூபாய் கேட்கிறாராம். வாளமீன் ஆட்டத்துக்கு இவர் வாங்கிய சம்பளம் மூன்று லட்சம்தான். சினிமாவும் வானிலை அறிக்கையும் கிட்டத்தட்ட ஒன்றுதான் எதையும் நம்பலாகாது.

சிறுதுளி !

யார் யாரோ முயற்சி செய்தும் மடங்காத மல்லிகா ஷெராவத் ஏ.ஆர். முருகதாஸ் வீசிய வலையில் சிக்கியுள்ளார். இவர் இயக்கும் படத்தில் ஒரு பாடலுக்கு ஆட பச்சைக்கொடி காட்டியிருக்கிறார் இந்த பாலிவுட் பமீலா !

❖ ❖ ❖

போகிற போக்கை பார்த்தால் நடிகர் களுக்கு லீவு கொடுத்து ரெஸ்ட் எடுக்க செய்து விடுவார்கள் போல இயக்குனர்கள். நடிகர் அவதாரம் எடுத்துள்ள எஸ்.ஜே. சூர்யா, தங்கர் பச்சான், சேரன், பிரவீண்காந்த், அமீர் என தொடரும் இயக்குனர்கள் வரிசையில் இன்னொரு இயக்குனரும் இணைந்துள்ளார். "தம்பி" இயக்குனர் சீமான்தான் அவர்.

❖ ❖ ❖

பட்டியல் நல்ல பெயரை சம்பாதித்துக் கொடுத்தாலும் இனி ஸோலோ ஹீரோ தான் இரண்டு ஹீரோ சப்ஜெக்டை ஒத்துக் கொள்வதில்லை, ஈகோ பிரச்சனை எல்லாம் எதுவுமில்லை. இரண்டு ஹீரோ என்று வரும் போது வேறு பிரச்சனைகள் இருக்கிறது. அதனால் இரண்டு ஹீரோ சப்ஜெக்ட் வேண்டாம் என்று முடிவு செய்திருக்கிறேன் என்று கூறுகிறார் பரத்.

❖ ❖ ❖

ஏ.ஆர்.ரஹ்மான் அடுத்த மாதம் தனது புதிய இசை ஆல்பத்தை வெளியிடுகிறார். ரஹ்மானின் இசை ஆல்பம் அடுத்த மாதம் உங்கள் செவிகளை குளிரவைக்க இருக்கிறது. "எனக்காக பிரார்த்தனை செய் சகோதரா" இதுதான் ஆல்பத்தின் தமிழ் பெயர் (Pray for me brother).

❖ ❖ ❖

குஷ்புவுக்கு கோயில் கட்டிய தமிழர்கள் கொஞ்சநாள் சும்மா இருந்தார்கள். சரி தான் திருந்திவிட்டார்கள் என்று சந்தோஷப் பட்ட வேளை 'ஷொக்' கான செய்தி. சென்னையில் திரிஷாவுக்கு ரசிகர் மன்றம் தொடங்கியிருக்கிறார்கள். மன்ற துவக்க விழாவில் திரிஷா கட்-அவுட்டுக்கு லிட்டர் லிட்டராக பாலாபிஷேகமாம்

❖ ❖ ❖

சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கும் 'ரீல் நம்பர் 15 படத்தில் அவருக்கு ஜோடியாக மூன்று கதாநாயகிகள் நடிக்கிறார்கள். பர்வீன், சுஜா இவர்களுடன் பர்வேஷ் என்ற ஈரான் நாட்டு அழகியும் இந்த படத்தில் அறிமுகமாகிறார்.

❖ ❖ ❖

என் மூக்கு தான் எனக்கு பெரிய மைனஸ் பாயிண்ட்! எனவே நான் விரைவில் என் பெரிய மூக்கை பிளாஸ்டிக் சர்ஜரி மூலம் அழகாக மாற்றிக் கொள்ளப்போகிறேன் என கூறிவருகிறார் சந்தியா.

"கரன்"

உங்கள் சினிமாவின் ஆரம்ப காலம் பற்றி?

என் முதல் படம் நம்மவர், என் ஆசான் கமலகாசன் அவர்கள் தந்த வாய்ப்பு அது. அதுவே எனது முதல்படி பின் காதல் கோட்டை, கோகுலத்தில் சீதை இப்படி . .

முதல் படத்திலேயே ஒரு வித்தியாசமான கனமான கதாபாத்திரத்தினை ஏற்று நடித்தீர்கள். அதன் பின்னான வாய்ப்புக்களிலும் அதைக் கவனித்துக் கொண்டீர்களா?

உண்மையைச் சொன்னால் நம்மவரின் பின் எனக்குப் வாய்ப்புக்கள் வந்ததென்று சொல்ல முடியாது. காதல் கோட்டையில் எனக்குக் கிடைத்த வாய்ப்பே என்னால் பலவிதமான கதாபாத்திரங்களிலும் நடிக்க முடியும் என்ற நம்பிக்கையை வெளியில் ஏற்படுத்தித் தந்தது அதன்பின் கோகுலத்தில் சீதை அதை வலுப்படுத்தியது.

அதுதான் திருநெல்வேலியில் முதியவர் போல நடித்தீர்களா?

அக்கதாபாத்திரத்தை ஏற்றபோது பலர் தடுத்தார்கள். ஆனால் ஒரு தடவை நடித்து விடுவோமே என்றுதான் நடித்தேன். பலர் பாராட்டி இருந்தார்கள். இனி அப்படி நடிக்க மாட்டேன்

அரசாட்சிக்குப் பின் உங்களைக் காணவில்லையே?

தொடர்ந்து நடித்துக் கொண்டிருந்த எனக்கு ஏதோ ஒருவகை கதாபாத்திர எல்லைக்குள் சுற்றிக் கொண்டிருப்பதாகத் தோன்றியது. அதனால் இரண்டரை வருடம் நடிக்காமல் இருந்தேன். கிட்டத்தட்ட 45 படங்களினை தவிர்த்தேன்.

கொக்கி எப்படி மாட்டியது?

இயக்குனர் பிரபு சாலமன் எனது நண்பர். அவர் என்னோடு ஒரு நாள் பேசிக் கொண்டிருந்தபோது கொக்கி கதையினைச் சொன்னார். யார் நாயகன் என்று கேட்க இதில் நீங்கள் நடித்தால் மட்டும் இதை எடுப்பேன் என்றார். எடுத்தோம்.

கொக்கிக்காக ஏதாவது வித்தியாசம் காட்டுகிறீர்களா?

கொக்கியே வித்தியாசம் ஆதலால் நான் வித்தியாசப்பட வேண்டி இருக்கிறது. அதாவது இயக்குனர் என்னிடம் சொன்ன ஒர் விடயம் என்னவென்றால் பழைய கரன் இதில் இருக்கக் கூடாது. அதனால் என்னுடைய நடிப்பு முதல் உடற்பயிற்சி வரை கடுமையாக உழைக்க வேண்டி இருந்தது.

கொக்கி வித்தியாசமாக இருக்கும் என்கிறீர்கள்!

நிச்சயமாக. இதை நான் சொல்வதை விட நீங்களே பாருங்கள். நன்றாக இருந்தால் பாராட்டுங்கள்.

LINGA & CO

Legal Advisors and Commissioners for Oaths

தற்போது அமுலுக்கு கொண்டு வரப்பட்டுள்ள சட்டதிட்டங்களில் நீங்கள் சிக்கி தவிக்கிறீர்களா?
உங்களுடைய பிரச்சனைகளை கருத்தில் கொண்டு உங்களுக்காக செயல்படும் தகுதியும் திறமையும் வாய்ந்த சட்ட நிபுணர்களை தேடுகிறீர்களா?

WE SPECIALISE IN:
ALL ASPECTS OF IMMIGRATION AND NATIONALITY MATTERS
WORK PERMITS APPLICATIONS - ALL CATEGORIES
HIGHLY SKILLED MIGRATION PROGRAMME,
FAMILY REUNION VISAS FOR SPOUSES AND DEPENDANT RELATIVES,
ASYLUM APPLICATIONS AND HUMAN RIGHTS APPLICATIONS,
APPEALS AND BAIL APPLICATIONS, EEC RESIDENCE PERMITS,
TOURIST VISA EXTENSION, PERSONAL INJURY, EMPLOYMENT LAW

10 ஆண்டுகால அனுபவம் உள்ள, பல சட்ட நிபுணர்களைக் கொண்ட சட்ட நிறுவனத்திடம் இருந்து சேவையை பெற்றுக்கொள்ள தொடர்பு கொள்ளுங்கள் மேலும் பல தமிழ் பேசும் சட்டதரணிகளும் இணைந்து செயற்படுத்துகின்றனர்.
Linga & Co வணிக ஆலோசனைகளையும், book Keeping சேவைகளையும் தகுந்த முறையில் நியாயமான விலையில் வழங்குகிறது. EUROPEல் பிரஜாவுரிமை உள்ளவர்கள் தங்கள் உறவினர்களை Sponsor செய்ய வாய்ப்பு உண்டு

46 HIGH STREET, COLLIERSWOOD, LONDON SW19 2 BY
GENERAL LINE: 020 8544 9285 (4 LINES)
EMERGENCY LINE: 07771 646 441 / FAX: 020 8542 9530

உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் அனைத்தும் இரகசியமாகப் பேணப்பட்டு உங்கள் வழக்கின் மேன்மைக்காக பயன்படுத்தப்படும்

ESTABLISHED IN 1994

சினிமா

The DaVinci Code



மூன்று வருடங்களுக்கு முன்பு புத்தகமாக வந்த போதே பெரும் சர்ச்சையைக் கிளப்பிய தி டாவின்சி கோட் இப்போது சினிமாவாக வந்து மறுபடியும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. கிறிஸ்தவ திருச்சபைகளும் சுமார் 500 கிறிஸ்தவ அமைப்புகளும் எதிர்ப்பு காட்ட, படத்துக்கு தடைவிழும் அளவுக்கு ஏக பரபரப்பு! படத்துக்குத் தடை என்பது உலகம் முழுக்கவே பெரும் பரபரப்பைக் கிளப்பியிருக்கிறது. தாய்லாந்தில் கடைசி பத்து நிமிடங்களை மட்டும் வெட்டினால் போதும் என்று திருச்சபை சொல்லியிருக்கிறது. அதற்கு சென்சார் ஒப்புக் கொண்ட போதும், தயாரிப்பாளர்கள் சம்மதிக்கவில்லை. அதனால் அங்கே இன்னமும் படம் திரையிடப்படவில்லை. அதே சமயம், எந்த வெட்டும் இல்லாமல் அனுமதித்திருக்கிறது சீனா. படம், நாவல் இரண்டைப் பற்றிய சர்ச்சைக்கும் அடிப்படை ஒன்றுதான். ஏசு கிறிஸ்து திருமணமானவர். அவருக்குக் குழந்தைகள் உண்டு.

அவருடைய வாரிசுகள் இன்னமும் பிரான்ஸில் ரகசிய வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய ரகசிய ஆதரவாளர்களையும் ஒழித்துக் கட்ட வாடிகன் திருச்சபை 2000 ஆண்டுகளாகத் தொடர்ந்து முயற்சித்துக் கொண்டிருக்கிறது என்பதுதான் கதையின் சாராம்சம். ஏசுவுக்குப் பணி விடை செய்த பாலியல் தொழிலாளியான மேரி மக்தலீன்தான் ஏசுவின் மனைவி என்கிறது கதை. இந்த நாவல், கிறிஸ்துவையும் கிறிஸ்தவத்தையும் இழிவு செய்வதாக மூன்றாண்டுகளுக்கு முன்பு புத்தகம் வந்தபோது திருச்சபைகள் சொன்ன போதும், புத்தகம் இந்தியா உட்பட எந்த பெரிய நாட்டிலும் தடை செய்யப்படவில்லை. இதுவரை 44 மொழிகளில் புத்தகம் மொழி பெயர்க்கப்பட்டு விட்டது. ஆங்கிலத்தில் மட்டும் மொத்தம் இதுவரை ஆறு கோடி பிரதிகள் விற்றிருக்கின்றன. இந்த நாவலை எழுதியவர் டான் பிரவுன்.

டான் பிரவுனின் வெற்றி நாவலை சினிமா ஆக்கும் உரிமைக்காக அவருக்கு சோனி நிறுவனம் கொடுத்திருக்கும் தொகை 60 லட்சம் டாலர்கள். எ பியூட்டிபுல் மைண்ட் படத்தை இயக்கிய ரான் ஹோவர்ட் இயக்கியிருக்கும் டாவின்சி கோட் படத்தில் முக்கிய பாத்திரத்தில் பிரபல ஹொலிவுட் நடிகர் டொம் ஹான்க்ஸ் நடித்திருக்கிறார். ஒரு மர்மப் பட தொனியில் சினிமா எடுக்கப்பட்டிருக்கிறது. புகழ்பெற்ற ஓவியர் லியானர்டோ டாவின்சியின் கலைப் படைப்புகளுக்குள் ஏசுவின் வாரிசுகள் பற்றிய ரகசிய சங்கேதக் குறிப்புகள் அடங்கி இருக்கின்றன என்பதுதான் டான் பிரவுன் கட்டியிருக்கும் கதை. ஏசுவின் வாரிசுகளை ஆதரிக்கும் ரகசியக் குழுவில் டா வின்சியும் உறுப்பினராம். யூதாஸால் காட்டிக் கொடுக்கப்படுவதற்கு முன்பு தன் சீடர்களுடன் கடைசியாக ஏசு கிறிஸ்து உணவருந்திய காட்சியைடாவின்சிஓவியமாகதீட்டியிருக்கிறார். அதில் ஏசுவுக்கு அருகே உட்கார்ந்திருப்பது சீடர் ஜான் அல்ல. அது மேரி மக்தலீன் என்பது டான் பிரவுனின் கருத்து. கடைசி விருந்தில் ஏசு பயன்படுத்திய கோப்பை, கிறிஸ்தவர்கள் மத்தியில் புனிதமாகக் கருதப்படுகிறது. அதில் கடவுளின் ரத்தம் இருப்பதாகக் கருதப் படுகிறது.

டாவின்சியின் ஓவியத்தில் கோப்பையே கிடையாது. காரணம், கோப்பை என்பது ஒரு குறியீடுதான். ஏசுவின் ரத்தத்தைத் தன் வயிற்றில் உள்ள குழந்தை வடிவத்தில் தனக்குள் வைத்திருக்கும் மேரி மக்தலீன்தான் அந்தக் கோப்பை என்பது டான் பிரவுனின் வியாக்கியானம். டாவின்சியின் புகழ்பெற்ற மோன லிசா ஓவியமும் படத்தில் வருகிறது. மோனலிசா பெண்ணே அல்ல. டாவின்சி தன்னைத்தானே ஓவியமாக தீட்டிக் கொண்டிருக்கிறார் என்பது டான்பிரவுனின் இன்னொரு வியாக்கியானம். நாவலாகப் படிக்கும் போது சுவாரஸ்யமாக இருந்த கதை, சினிமாவாக எப்படி இருக்கும்? இந்த வாரம் நடந்த சர்வதேசப் பத்திரிகையாளர் பிரிவியூவுக்குப் பின் பல பத்திரிகையாளர்கள், படம் "Bore" என்று சொல்லி விட்டார்கள். மர்மப் படத்துக்கு சரிப்பட்டு வராத விதத்தில் வளவள என்று நிறைய பேச்சு, சாதாரண பார்வையாளர்களுக்கு விளங்காத கிறிஸ்தவ மதக் கோட்பாடுகள் குறியீடுகள், டொம் ஹாங்க்ஸின் உணர்ச்சியற்ற நடிப்பு எல்லாம் சேர்ந்து ஒரே போர் என்று சொல்லப்பட்டுள்ளது. ஆனால் படம் பொக்ஸ் கிட் அடித்து ஓடிக் கொண்டிருக்கிறது.

மதம், கடவுள் தொடர்பான விஷயங்களில் ஒரு படைப்பாளிக்கு எந்த அளவுக்குக் கற்பனைச் சுதந்திரம் அனுமதிக்கப்படும் என்பது எல்லா சமூகங்களிலும் ஒவ்வொரு காலகட்டத்திலும் விவாதமாகிறது. அதில் இன்னொரு மைல் கல்... டா வின்சி கோட்.

- ஜீவி



விமர்சனம்

புதுப்பேட்டை

பொதுவாக ஹீரோக்கள் ரவுடிகளாக இருந்தாலும் அவர்கள் நல்லவர்களாகவும் குறைந்தபட்சம் கருணை உள்ளம் கொண்டவர்களாகவும் ஏழை மக்களின் துயர் துடைப்பவர்களாகவுமே காட்டப்படுவார்கள். செல்வராகவன் இந்த இடத்தில் வித்யாசப்படுகிறார். தனுஷை எந்த விதத்திலும் நல்லனாக காட்ட செல்வராகவன் பிரியப்படவில்லை.

படம் யுவனின் கலக்கலான எங்க ஏரியா உள்ள வராதே பாடலுடன் ஆரம்பிக்கிறது. 12 படிக்கும் தனுஷ் தன் அம்மாவை அப்பா கொலை செய்ததை அறிந்து விட, தன்னையும் அப்பா கொன்று விடுவாரென்று வீட்டை விட்டு ஓடுகிறார். இந்த இடத்தில் மொத்த தியேட்டரும் (நானும் கூட) அப்பாவை தனுஷ் கொன்று அப்பாவி பையனிலிருந்து ரவுடியாகுவான் என எதிர்பார்க்க எதிர்மாறாக பயந்து போய் வீட்டை விட்டு ஓடுகிறார். பின்னர் வயிற்றுக்கு பிச்சை எடுக்கிறார். தொடர்ந்து போலீசால் பெரிய ரவுடிக் கும்பலுடன் சேர்ந்து (தவறுதலாக) கைது செய்யப்படுவதில் ஆரம்பித்து மெல்ல ரவுடிக் கும்பலுடன் ஆரம்பிக்கிறார்.

தனுஷ் சோப்ளாங்கி ரவுடியாக இருந்து மெல்ல பெரிய ரவுடியாவதை செல்வராகவன் நன்றாக காட்டியிருக்கிறார். முற்பகுதியின் கடைசியில் சினேகாவின் மேல் கொண்ட ஆசையினால் சினேகாவுக்காக தன்னை வளர்த்து ஆளாக்கிய ரவுடிக் கும்பலின் தலைவன் அன்புவைக் கொன்று அந்த இடத்திற்கு தனுஷ் வருகிறார். பிற்பகுதி கிட்டத்தட்ட 90 டிகிரியில் கதை ஓட்டம் திரும்புகிறது. இடைவேளைக்கு பின் முழுக்க முழுக்க ரவுடியிசமும் அரசியலும்தான், கொல்லப்பட்ட ரவுடித் தலைவனின் தலைவன் ஒரு எதிர்க்கட்சி அரசியல்வாதி. முதலில் தனுஷை அலட்சியப் படுத்தும் எ.க. அரசியல்வாதி பின் பழைய ரவுடி தலைவன் இருந்த இடத்தில் தனுஷை நியமிக்க அடுத்த நொடியே திரை விலகி ஒரு பொதுக் கூட்டத்தில் தமிழில் எதிர்க்கட்சி அரசியல்வாதி பிளந்து கட்ட, செல்வராகவன் டச்.

ஏற்கனவேதனுஷ் ஆளும்கட்சி ஆதரவுரவுடி கும்பல் தலைவனின் சினிமா ஹீரோ ஆசை கொண்ட தம்பியை போட்டுத்தள்ள ஆ.க ரவுடி தலைவனின் ஜென்ம விரோதி ஆகிறார். இந்த இடத்தில் வரும் 'கூடப் பொறந்த ஒரே காரணத்துக்காக சினிமாவெல்லாம் எடுக்க வேண்டியிருக்கிறது' என்ற வசனம் செல்வராகவன் தனுஷ் சகோதரர்களை நினைவூட்டுவதை தவிர்க்க முடியவில்லை. நண்பனின் தங்கை (சோனியா அகர்வால்) திருமணத்தை தாலி எடுத்துக் கொடுத்து நடத்த வரும் தனுஷ் அவள் அழகில் மதி கெட்டு அவளுக்கே திடீரென்று கட்டுகிறார் (புல் பேசும் பாட்டின் காலையில என்னாகும் அட கல்யாணம் யாருக்காகும் வரிகளுக்கு இதுதான் அர்த்தம் சாமியோவ் - கொடுமைடா சாமி). இந்த காட்சியை ஜீரணிக்கவே முடியவில்லை ஆனால் தான்தான் எல்லாம் தான் வைத்ததுதான் சட்டம் என நினைக்கும் ஒரு ரவுடி தான் ஆசைப்பட்டதை அடையும் மிருகத்தனம் இது என மெல்ல புரிகிறது. இங்கு ஆரம்பிக்கிறது தனுஷ், என்னும் ரவுடியின் சரிவு. பின்னர் சினேகாவையும் திருமணம் செய்து முன்னமே உருவான குழந்தையையும் பிறக்கிறது.

ஓவராக ஆட்டம் போடும் தனுஷ் எம்.எல்.ஏ ஆக ஆசைப்படுகிறார். எம்.எல்.ஏ சீட் கொடுக்காததில் எதிர்க்கட்சி அரசியல்வாதியை முறைத்துக் கொள்ளும் தனுஷ் இப்போது எதிர்க்கட்சி அரசியல்வாதி ஆளுங்கட்சி அரசியல்வாதி என இரு பக்கமும் எதிரிகள். இதில் சினேகா கொல்லப்படுகிறார், குழந்தையை இழக்கிறார். பின்னர் ஆ.க அரசியல் ரவுடியை எதிர்க்க தனி ஆளாக போய், நிறைய பேரைக் கொன்று, நிறைய கத்திக் குத்து பட்டு, பின்னர்.... பேசாமல் படத்தையே பார்த்து விடுங்கள். (அப்பாடா கதையை சொல்லுவதற்குள் மூச்சு வாங்குது).

தனுஷின் அருமையான நடிப்பை சொல்லியே ஆக வேண்டும். படத்தின் பெரிய டெக்னிகல் பலங்கள் இசையும் அரவிந்த் கிருஷ்ணாவின் ஒளிப்பதிவும். கிளைமாக்சில் தனுஷ் இருளை கிளித்து வருவது போன்ற காட்சியில் ஒளிப்பதிவு திகில்பட எபெக்ட் கிடைக்கிறது. பின்னணி இசையும் நன்று. எனக்கு முதல் பாதியை விட இரண்டாவது பாதி பிடிக்கிறது. எனக்குப் பிடிக்காத இன்றைய அரசியல்வாதிகளை தோலுரித்துக் காட்டுவதினால் இருக்கலாம்.

- எஸ்.குமார்

Quotation / cover provided over the phone

No more proposal forms to complete
No more immediate payment
No more Direct Debit Mandate to complete
No more claim form to fill - All the details are taken over the phone.

But Immediate Quotation at a competitive Premium
from leading Insurer and Instant Cover

Please ring us for a friendly service 020 8763 2221

P.SRINIVASAN 32 Abbots Lane, Kenley, Surrey CR8 5JH
PENSION * LIFE * SAVINGS * MORTGAGES * COMMERCIAL LOANS
Fax: 020 8763 2220
E-Mail: sri@armassociates.co.uk www.srinivasan.co.uk

Home Insurance
Building and Contents Insurance including Let Properties
Term Assurance / Critical Illness
Level Term, Mortgage Assurance and Family Income Benefits
Retailer , Shopkeepers & Liabilities
All types of Shops Including Jewellery Shops,
Self-Employed Business.
Mortgages / Re-Mortgages -
Decision in Principle/Virtual offer over the phone
All types of mortgages including Self-cert and buy-to-let.
All circumstances will be considered

ARM Associates FSA Financial Services Authority
Authorised and Regulated by the Financial Services Authority

MITCHAM BUTCHERS

NO 73, MONARCH PARADE, LONDON ROAD, MITCHAM CR4 3HB.

உடன் மீன் வகைகள்
உடன் மறக்கறிவகைகள்
Halal Meat

Come in and meet our friendly team we always there to fulfill your shopping dream as excellent

தொலைபேசி முலம் தொடர்பு கொண்டு பொருட்களின் விபரம் அறியவும் ஒடர்கள் செய்வும் எம்மை நாடுங்கள்...

THANKYOU FOR SHOPPING WITH US PLEASE COME AGAIN

0208 685 1617

Tyre Check

Auto Spares - Accessories

New & Part Tyres, Sold and Fitted
Punctures Repaired while you wait

புதிய பழைய ரயர்கள் மாத்திக் கொடுக்கப்படும் மற்றும் கார் சேர்விஸ்
உட்பட சகல கார் திருத்தவேலைகளுக்கும் எங்களை நாடுங்கள்

- Wheel Balancing
- Wheel Alignment
- New & Second Hand Rims
- Shock Absorbers
- Batteries
- Exhaust
- Brakes
- Service
- MOT Work

368 High Street North
Eastham, London E12 6PH
Tel: 020 8586 0886
Fax: 0208 470 4745
Mob: 07956 353 774

Open Seven Days a week
Mon-Sat 8.30am to 7pm Sun 9am to 6pm

ASIANTIC TASTE

22, East Avenue, Hayes, Middx UG3 1HP
Tel: 020 8569 2226 | 020 8573 3888

உங்கள் நாவுக்கு இதமான சுவை
சமையல் கலையில் கைதேர்ந்தவர்கள்

Hayesஇல் முதலாவது இலங்கையர் உணவகம்

உங்களுக்குத் தேவையான சகல
உணவுகளையும் சுத்தமான, சுகாதாரமான
முறையில் அறுசுவையுடன் பரிமாறுகிறோம்.

Specialists in all types of food
Catering for all occasions including
Wedding & Parties
Open Seven Days a Week 10.00am to midnight

அதிசயம் ஆனால் உண்மை!
தினமும் 100 இடியப்பம்
(சம்பல், சொதியுடன்)
10பவுன் மட்டுமே!

* Free Home Delivery within a radius of 3 miles (over £12.00)

Dosa Corner

Delicious South Indian Cusisine

06 Sunleigh Parade, Mount Pleasant
Alperton, Wembley HA0 4LP

Garlic Dosa, அன்னாசி தோசை மற்றும் அனைத்து தோசைகளும் உடனே தயார் செய்து கொடுக்கப்படும்.

Tel: 020 8902 2811
Mob: Vasi- 07940 095 534 Baskaran- 07903 739 377

Opening Hours 10.00am to midnight

Open 7 Days a Week
Opening Hours: 8 a.m to mid night

Lunch Time Buffet - £3.50

We can cater for private functions
We accept outside catering and private party

இடியப்பம், சொதி, சம்பள் - £12.99
100 இட்லி, சாம்பார், சட்னி - £19.99
100 சாப்பாடுகளுக்கு மேல்
சைவ உணவு - £2

விசேட நிகழ்வுகளுக்கு உங்கள் வீட்டிற்கே நாம் வந்து அப்பம், தோசை, இட்டிலி, இடியப்பம் முதலியன செய்துதருவோம்

தரமான மலிவான சர்வதேச தொலைபேசி அழைப்புகளுக்கு Vx HOME ACCOUNT உடன் இணையுங்கள்

For great International call rates switch to Vx Home Account and discover the benefits!

பாருங்கோ!

to **Sri Lanka** only **6p**

only **5p** from **Sri Lanka**

Canada 2p	Europe 2p	Australia 2p	New Zealand 2.5p
Mauritius 10p	Japan 3p	South Africa 5p	Oman 16p

USA 2p	Malaysia 2p	UAE 16.5p	Saudi Arabia from 6p
Singapore 2p	Kuwait 8p	Qatar 22.5p	Bahrain 11p

from **India** **7p**

UK யில் Vx Home Account ஐ ஆரம்பித்து அதே Vx Home Account இனூடாக உங்கள் உறவுகள் இலங்கையிலிருந்து UK Land Line க்கு அழைக்க நிமிடத்திற்கு 5p மட்டுமே.

Vx Home Account இனை உங்கள் நண்பர்களுக்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் £5 பெறுமதியான தொலைபேசி அழைப்புகளை இலவசமாக பெற்றுக் கொள்ளுங்கள்.

£25 உடன VX Home Account ஆரம்பித்தால் £5 பெறுமதியான தொலைபேசி அழைப்புகள் இலவசம்

இஞ்ச பாருங்கோ, தான் இந்த ரெலிபோன் காட்டோட படபாடு போதுங்க. என்ற மச்சான் Vx Home அக்கவுண்ட் என்று சொல்லி என்னை சேர்த்து விட்டா. அது எந்தை துபாயை மறித்தியாட்டின் அம்மா கொண்டனிலிருந்து என்ன என்று கேயா! அடிமட்டுமல்ல அவ கொழுவுக்கி வந்தாலென்ன பிளக்கி நினைச்ச நேரம் அம்மா என்ற அக்கவுண்ட் இலிருந்து 5p போகும். என்ன சொன்னான் சொல்ல பாருங்கோ!

VX TELECOM LTD

Competitive rates for all countries The above rates are based oncalls made from 0207 / 0845 access numbers and include VAT.

A REVOLUTIONARY NEW CREDIT CARD FROM VX TELECOM

VISA MasterCard

- No Credit checks required
- No Bank Account required
- No Late payment fee or interest to pay
- Pre-paid accounts to suite every one's pocket
- Easy sign up
- Chip & pin protected for added security
- Quick access to your cash from ATMs in UK and worldwide
- Balance transfer between Vx cards and 3rd party credit cards.
- Multiple cards under one agreement.

Simple way to send Money Abroad!

Supplementary cards for your family or friends abroad - Allowing them to withdraw cash locally!

Open a Vx Home Account using Vx credit card and receive up to £15 worth of talk time absolutely free.
Top up your existing Vx Home Account using Vx credit and receive up to £45 worth of talk time absolutely free.

Exclusive privileges from variety of establishments
Up to 50% Discount from most Hotels in Sri Lanka
Up to 50% Discount from Holiday packages to Sri Lanka
Up to 15% Discount from Jewellery shops in UK
Up to 15% Discount from Restaurants in UK

www.vxcom.co.uk

இன்றே இணைந்துகொள்ள அழையுங்கள்

0800 989 0002 / 0207 952 0106 (24 Hrs)